KALKI 15.5.2005 ரூ.6.00

கல்கி





சன் டீ.வி

Vs

சச்சின்

–விளாசுகிறார்

தாணு

திருமண அதிர்ச்சி!


One Time
Life Time
Purchase
1 ONE YEAR GUARANTEE
Cyrus
Energy Saving Bright Emergency Lamp.


பிடியுங்க சர்ப்ரைஸ்..
கொஞ்சம் நெருப்பு...
கொஞ்சம் குளிர்ச்சி...
கொஞ்சம் தாகம்...
நிறைய வேகம்!
யார் இந்த சூர்யா?
என்னோட
பர்சனல் டைரி...
அடுத்த இதழில்
ஆரம்பம்...

வட்டமேஜை

தெளிந்த நீரோடை!

✉ தோல் வியாதிகளை ஏற்றுக்கொண்டு, அடுத்தவர் தோளில் அலங்காரம் செய்யும் துணிகளைத் துவைக்கும் கூவம் சலவைத் தொழிலாளிகள் மேல் கருணை கொண்டு, ஒரு மாற்று ஏற்பாடு செய்து, நாற்றத்தில் இருந்து அவர்களை விடுவிக்க அரசாங்கம் ஆவன செய்ய வேண்டும்.
ஈரோடு, மதி அசோக்



✉ தெளிவான சிந்தனை, கனிவான பேச்சு, சுற்றி வளைக்காமல் எந்தக் கேள்வியையும் நேரடியாக எதிர்கொள்ளும் தன்மை என, ஒரு தெளிந்த நீரோடையைப் போல இருந்தது கமலஹாசனின் பேட்டி.
விஜயவாடா, தெனாலிராஜன்


✉ அரசியல் கட்சி துணையில்லாமல் எந்தப் பொதுச் சேவையும், நல்ல காரியங்களும் செய்யக்கூடாது என்பதை விவேக் ஓபராயின் சுனாமி நிவாரண உதவிகள் நிரூபித்துக் காட்டியது மறுக்க முடியாத உண்மை.
ஈரோடு, சாந்தி கல்யாண்

✉ உள்ளாட்சி இடைத்தேர்தல் குழாயடிச் சண்டையாக மாறியதில், அ.தி.மு.க., தி.மு.க. ஆகிய இரு கட்சிகளுக்கு மட்டுமன்றி தமிழகத்திற்கே அவப்பெயர் ஏற்பட்டுள்ள நிலையில், மிகவும் அவசியமான தலையங்கம் வழங்கிய உங்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.
பெங்களூர், நெ.கி.சூரியநாராயணன்

✉ 'அடிமாடு' கவிதை, மனித மனங்களை சாட்டையால் அடித்து (காயப்படாமல்) சிந்திக்க வைத்தது.
சென்னை, காந்திபாரதி

✉ 'மீண்டும் மீண்டும் திரைப்படம் பற்றி என்னிடம் கேட்காதீர்கள்' என்று கூறுவது தமிழ்க் குடிதாங்கி ராமதாஸா! புல்லரிக்க வைச்சுட்டாரே!
நெய்வேலி, எஸ்.கண்ணன்


✉ ஆயிரம்தான் இருந்தாலும் தன்னைப் பெற்று வளர்த்தவர் நோயுற்ற நிலையில் இருக்கும்போது, அவரை இன்பத்தமிழன் உதாசீனப்படுத்துவது கொஞ்சமும் அழகல்ல.
ஆலங்குளம், ரா. சாலமோன்



✉ 'ஜெயகாந்தனை இகழலாமா?', தமிழ் இலக்கியவாதிகளிடையே என்றுமே ஒற்றுமை இடையாது. பொறாமையும் போட்டியுமே சமீப காலங்களில் அவர்களிடம் காணப்பட்டு வருவதென்பதை உணர்த்துகிறது.
சென்னை, காஞ்சனா ராதாகிருஷ்ணன்

✉ நான்கு சிறுகதைகளும் 'நறுக்'கான கதைகள். கல்கியின் தரத்தை நிலை நிறுத்தும் இதுபோன்ற கதைகளை நிறைய எதிர்பார்க்கிறோம்.
திருவெறும்பூர், ஆர்.ராஜ்குமார்

✉ கால்பந்து வீராங்கனை பத்மாவதியின் சோகம் வருத்தத்தை அளிக்கிறது. உடனடி நடவடிக்கை எடுத்து தமிழக அரசு



வாரம் ஒரு வாசகர்

✉ 'பத்துக் கேள்வி பரமு' எங்களை விலாநோக வைக்கிறார். சூப்பர்.
சங்கராபுரம், ஜி.குப்புசாமி

அவரின் குழறலை போக்க வேண்டும்.
திருப்பூர், பா.சு. மணிவண்ணன்

✉ நம்மில் பெரும்பாலோர் பிறருடைய அபிப்பிராயங்களையே தம்முடைய சொந்த அபிப்பிராயமாகக் கொண்டு போராடும் இரவல் பிழைப்பே - புனை பெயர் வைத்துக்கொள்ளக் காரணம் என்று வெளிப்படையாக ஒளிவு மறைவு இல்லாமல் சொல்ல, கல்கி ஒருவரால்தான் முடியும்.
சூளைமேடு, அலைநாயகன்

மாம் ஃப்ரம் இண்டியா!

✉ சாவியின் 'வாஷிங்டனில் திருமணத்திற்கு' நிகரானது 'மாம் ஃப்ரம் இண்டியா'!
மும்பை, எஸ்.வாசு

✉ தாய்மைக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாய் விளங்கினாள் 'மாம் ஃப்ரம் இண்டியா' சுகந்தா.
திருநெல்வேலி, வி. திலகம்

✉ வட அமெரிக்காவில் வசிக்கும் இந்தியர்கள் உள்ள அனேக இடங்களில் வாராவாரம் நடக்கும் பஜனையைக் கூட அனுராதா ரமணன் விட வில்லையே.. சபாஷ்!
சென்னை, ஸ்ரீமதி கமலா கோபாலஸ்வாமி

✉ அனுராதா ரமணன் இவ்வளவு கலகலப்பான தொடர் எழுதுவார் என அவரது வாசகர்கள் சர்வ நிச்சயமாய் நினைத்திருக்க மாட்டார்கள். சுகந்தா மாமி சக்கைப் போடு போட்டுவிட்டார்.
குட்டலாடம்பட்டி, கொ.மூர்த்தி

✉ அனுராதா ரமணன் அமெரிக்க ஜனாதிபதியை அழ வைத்தார், கிளின்டனை அழ வைத்தார், அமெரிக்காவையே அழவைத்தார். ஆனால், எங்களை ஆனந்தமாகச் சிரிக்க வைத்தார்.
கரூர், ஆர்.ராஜலட்சுமி



கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர் :
கி. ராஜேந்திரன்

கல்கி பில்டிங்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் :
சீதா ரவி

ஆசிரியர் குழு :
அனுராதா சேகர்
ஆர்.சி. ஜெயந்தன்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்

தொலைபேசி :
2225 1522, 2225 0623,
2225 1324

தொலைநகல் :
044 - 2225 1021

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.330/-
ஆறு மாதம் : ரூ.165/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 62 யு.எஸ். டாலர்
இலங்கை : ரூ.2000/-

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

ஒவ்வொரு இதழும் உங்கள் மேஜைக்கு



சன் டி.வி Vs சச்சின்

கலைப்புலி தாணு... தமிழ் சினிமாவின் ஹாட்டஸ்ட் தயாரிப்பாளர். சமீப காலமாக அவரது படங்கள் எல்லாமே சர்ச்சையில் சிக்கி வரும் சூழலில், அவரைச் சந்தித்துப் பேசினோம்.

> **"ஆளவந்தான் கடனை சச்சின் வந்துதான் அடைச்சேன்"**

இரண்டு பெரிய ஹீரோ படங்கள் வெளியாகும் நிலையில், எந்த தைரியத்தில் சச்சினை களமிறக்கினீர்கள்?

"தைரியம்னு சொல்றதை விட தன்னம்பிக்கைன்னு சொல்லலாம். 2003ம் வருஷம் 'காக்க காக்க' ரிலீசான உடனே எஸ்.ஏ. சந்திரசேகர் சார் கூப்பிட்டு '2005 ஏப்ரல்ல படம் ரிலீஸாகற மாதிரி வேலைய ஆரம்பிங்க'ன்னு சொன்னார். அவரு சொன்ன மாதிரி கரெக்டா ஏப்ரல் 14ல சச்சின் படத்தை ரிலீஸ் பண்ணினேன். இதுதான் உண்மையான காரணமே ஒழிய, அவங்க படம் வருது, இவங்க படம் வருது, நாம போட்டியா ரிலீஸ் பண்ணணும்ங்கற எண்ணமெல்லாம் இல்ல. இன்னொன்னு தமிழ்ப் புத்தாண்டு, தீபாவளி, பொங்கல்னு நல்ல நாள்ல நாலு படம் வரத்தான் செய்யும். அதை யாரும் பெருசுபடுத்தக் கூடாது."

சச்சின் படத்தின் பாடல்கள் பிரச்னை ஓயாது போலுள்ளதே... யார் மீது தவறு... தேவிஸ்ரீ பிரசாத் மீதா?

"தேவிஸ்ரீ பிரசாத் மீது எந்தத் தப்பும் இல்ல. சச்சின் படத்துக்குப் பாடல்கள் ட்யூன் போட்டப்போ, அந்தத் தம்பி, 'சார், தெலுங்குல நான் மியூசிக் பண்ண பாட்டு ஒன்னு ரொம்ப நல்லாருக்கும். அதை அப்படியே தமிழுக்குப் பயன்படுத்துவோம். அந்தப் பட ப்ரொடியூசர் ஜெமினி ஃபிலிம் சர்க்யூட்காரங்க. அவங்க ஒண்ணும் சொல்ல மாட்டாங்க'ன்னார். நான் உடனே 'அவங்களை நம்ப முடியாது. தர்றேன்னு ஒத்துக்கிட்டு பிரச்னை பண்ணுவாங்க'ன்னு மறுத்தேன். உடனே ஜெமினி ஃபிலிம் சர்க்யூட்டுக்கு போன் போட்ட பிரசாத், என் எதிர்லயே கிரண் ரெட்டிங்கறவர்கிட்ட பேசினாரு. அவரும் 'எல்லாரும் ஒத்துக்கிட்டாங்க. நீ பயன்படுத்திக்கோ'ன்னு சொன்னாரு. அந்தப் பாட்டைக் கூட பிரசாத் அப்படியே எடுக்காம, நிறைய மாற்றங்கள் செஞ்சுதான் சச்சின்ல பயன்படுத்தினாரு. ஆளவந்தான் பீரியட்ல ஜெமினிகாரங்க என்கிட்ட நடந்துக்கிட்ட விதம் பத்தி சினிமா உலகத்துக்கே நல்லா தெரியும். விஜயா லேபை நான் அண்டர்டேக் பண்ணி தயாரிப்பாளர்களுக்கு சலுகைகளை பண்றது அவங்களுக்குப் பிடிக்கல. ஜெமினி லேப் வச்சிருக்கறதால அவங்களுக்கு ஏகப்பட்ட வருத்தம் இருக்கு. இன்னொரு விஷயம், இல்லாததை, பொல்லாததை, சொல்லாததைச் சொல்லி பெரிய தொலைக்காட்சி நிறுவனத்துக்கும் எனக்கும் இடையில அவங்க கவர் கட்டிக்கிட்டு இருக்காங்க. அதை நினைச்சாத்தான் எனக்கு ரொம்ப கஷ்டமா இருக்கு."

சச்சின் படம் உங்களின் கையைக் கடித்துவிட்டதாகப் பேசிக் கொள்கிறார்களே...

"விஜய் சாரோட நாற்பத்திரண்டு படத்தோட ரெண்டு வார கலெக்ஷனை சச்சின் படம் முறியடிச்சிருக்கு. சென்னையில் ரெண்டே வாரத்துல அறுபத்தஞ்சு லட்ச ரூபா கலெக்ஷனாகி, படம் மிகப்பெரிய சாதனை பண்ணியிருக்கு. ஆளவந்தான்ல ஏற்பட்ட மொத்த கடனையும் சச்சின் வந்துதான் அடைச்சிருக்கேன்னா பார்த்துக்கங்க."

சன் டீ.வி.க்கும் உங்களுக்கும் சச்சின் படத்தால் பிரச்னை என்று சொல்லப்படுகிறதே...?

"எனக்கும் சன் டீ.வி.க்கும் ரிலேஷன்ஷிப் நல்லாத்தான் இருந்தது. என்னோட எல்லா படங்களையும் தொடர்ந்து அவங்களுக்கு கொடுத்துட்டுதான் இருந்தேன். நான் தயாரிச்ச 'புன்னகைப் பூவே' படம் நூறு நாள் ஓடினதும் 'எப்ப வாங்கிக்கப் போறீங்க'ன்னு சாக்ஸ்கிட்ட கேட்டேன். பதிலே இல்ல. 'காக்க காக்க' படம் ரிலீஸாகி சூப்பர் ஹிட்டானப்புறம் சாக்ஸ் என்கிட்ட பேசினார். படத்தை தரச் சொன்னார். நான் 'புன்னகைப் பூவே' படத்தையும் சேர்த்து எடுத்துக்கச் சொன்னேன். அவர் ஒப்புக்கல. 'காக்க காக்க' மட்டும்தான் வேணும்னு சாக்ஸ் சொன்னார். 'ஒண்ணைக் கொடுத்துட்டு இன்னொன்னை நான் வச்சு என்ன பண்றது? நான் வெயிட் பண்றேன். ரெண்டையும் சேர்த்து எடுத்துக்கங்க'ன்னு சொன்னேன். ஆறு மாசம் வெயிட் பண்ணேன். அவங்க வரல. விஜய் டீ.வி.யும், ராஜ் டீ.வி.யும் நான் கேட்ட பணம் தரல. ஜெயா டீ.வி. கொடுத்தாங்க. என்கிட்ட இருந்த இன்னும் சில படங்களையும் சேர்த்து மொத்தமா அவங்களுக்குக் கொடுத்துட்டேன். அதே மாதிரி இப்போ சச்சின் படத்தையும் நல்ல விலைக்கு ஜெயா டீ.வி. கேட்டாங்க, கொடுத்தேன். இது ஒரு வியாபாரம். வெறுப்பு விருப்பெல்லாம் இதுல கிடையாது. இந்தக் காரணங்களுக்காகத்தான் சன் டீ.வி., சச்சின் படத்தோட ட்ரைலர், விமர்சனம், பாடல்கள் எதையும் ஒளிபரப்பறதில்லையாங்கறது எனக்குத் தெரியல. ஆனா சச்சின் படம் ரொம்பப் பிரமாதமா போயிட்டிருக்கு. நல்ல படத்துக்கு முன்னாடி எந்தத் தடையும் எடுபடாது. ம்... நடக்கறது நல்லதாவே நடக்கட்டும்."

'விஜய் தாணுவுக்குக் கால்ஷீட் கொடுத்தது தப்பு. இது போன்ற தவறை இனி அவர் செய்



—விளாசுகிறார் தாணு

யாமலிருப்பது நல்லது' என்று ஒரு பத்திரிகை உங்களைக் குறை கூறி இருக்கிறதே...?

"நிறைய பேர் என்கிட்ட இதே கேள்வியைக் கேட்டாங்க. அந்தப் பத்திரிகையோட இந்தச் செயலை ஏன் தலைவர் கலைஞர்கிட்ட சொல்லக் கூடாதுன்னு பல பேர் என்கிட்ட ஆதங்கப்பட்டாங்க. நான் தலைவரை உதட்டளவுல இல்ல... உள்ளத்தளவுல நேசிக்கிறவன். ஒரு சின்ன வருத்தம்கூட எனக்கு வரக்கூடாதுன்னு நினைக்கிறவர் தலைவர் கலைஞர். இதையெல்லாம் பெருசாக்கி அவர்கிட்ட சொல்லணுமான்னு நினைச்சுத்தான் விட்டுட்டேன். ஒரு டைம்ல அந்தப் பத்திரிகையோட சர்க்குலேஷனை உயர்த்துவதற்காக, அந்தப் பத்திரிகையோட நிர்வாகி என்னைக் கூப்பிட்டு, 'சர்க்குலேஷனை உயர்த்த எப்படி பெரியளவுல விளம்பரம் பண்ணலாம்'னு ஆலோசனை கேட்டார். உடனே நான் 'இலவச மனை, ஐந்து சவரன் நகை, ஸ்கூட்டர் எல்லாம் பரிசு தர்றதா போஸ்டர் அடிச்சு தமிழ்நாடு முழுக்க ஒட்டலாம்'னு சொன்னேன். 'நீயே செஞ்சுடேன் தாணு'ன்னார். உடனே என் சொந்தப் பணத்துல தமிழ்நாடெங்கும் போஸ்டர் ஒட்டினேன். இன்னிக்கு அதே பத்திரிகை என்னை எட்டி உதைக்குது... பரவாயில்ல. 'இன்னா செய்தாரை...' குறளை மதிக்கிறவன் நான்"

கமலுக்கும் உங்களுக்குமான உறவு தற்போது எப்படி உள்ளது?



''கமலுக்கும் எனக்கும் தனிப்பட்ட பிரச்னைன்னு எதுவுமே கிடையாது. நான் அவரை ரொம்பவும் நேசிச்சவன். யார் மேல தவறுன்னும் இதுவரை எனக்கு சரியாப் புரியல. அவரா விரும்பித்தான் 'ஆளவந்தான்' பண்ண எனக்கு டேட்ஸ் கொடுத்தாரு. அந்தப் படம் பண்ண அவர் எடுத்த சிரத்தையெல்லாம் அளவிட முடியாதது. ஆனா படம் பாதி வளரும்போது திடீர்னு கதையை மாத்தினாரு. ஏழு நிமிஷம் கிராபிக்ஸ்னு எனக்கு எழுதிக் கொடுத்துட்டு, நாற்பத்தஞ்சு நிமிஷத்துக்கு உருவாக்கினாரு. வெளிநாட்டுலேர்ந்து பல கருவிகள் படப்பிடிப்புக்கு வேணும்னு கேட்டார். எல்லாம் தந்தேன். செலவு அதிகமாகுதுன்னு மீட்டிங் போட்டுப் பேசுவோம். எல்லாம் கேட்டுப் பார், அவ்வளவுதான். ஆஸ்திரேலியாவிலிருந்து ரொண்ட் பேஜ்னு ஒரு ஸ்டண்ட் மாஸ்டரை வரவழைச்சு சேஸிங் சீன் எடுத்தோம். ஒரு நாள் செலவு 4.4 லட்சம். 39 கார்களோட டெல்லியில ஷூட் பண்ணினோம். மொத்தம் பதினைஞ்சு நாள். அது எதுவுமே படத்துல வரவே இல்ல. நாலு கேமரா வச்சு, முந்நூறு பேரு ஓர்க் பண்ணி படமாக்கப்பட்டது. எல்லாம் வீணா போச்சு. இனி ஒரு முறை கமல் சாரே முயற்சி பண்ணினாலும்கூட ஆளவந்தான் மாதிரியான படத்தை அவராலயும் உருவாக்க முடியாது. அவரு புதுசா உருவாக்குற தயாரிப்பாளராலயும் உருவாக்க முடியாது. இது சத்தியம். நடத்தவே முடியாத இடத்திலெல்லாம் படப்பிடிப்பு நடத்தினோம். ரொம்ப கஷ்டப்பட்டு அரசாங்கத்துக்கிட்ட அனுமதி வாங்கித் தர திரு. வைகோதான் உதவினாரு. அதையெல்லாம் மறக்க முடியாது. ஆனா, இதையெல்லாம் தாண்டி கமலை இன்னமும் நான் நேசிக்கிறேன்."

ஆளவந்தானால் ஏற்பட்ட தோல்வியிலிருந்து எப்படி மீண்டு வந்தீர்கள்?

''ஆளவந்தானால் எனக்குப் பல நெருக்கடிகள். பொருளாதார ரீதியாகச் சரிவு ஏற்பட்டது. படத்துக்கு ஏகப்பட்ட செலவு ஒரு பக்கம்னா, இன்னொரு பக்கம் கமல், தேவி தியேட்டர்ல படத்தை எல்லாருக்கும் போட்டுக் காட்டிட்டாரு. ஊர் கூடிப் பார்த்து 'படம் புரியல, புரியல'ன்னு பலரும் சொன்னதால டெலிவரிக்குப் பணமே கொடுக்காம போயிட்டாங்க. இந்த பாதிப்பால



தெலுங்குல படம் ரிலீஸாகாமப் போச்சு. இந்தில பிராப்ளம் ஆகி, படத்துக்கு வேல்யூவே இல்லாமப் போச்சு. எனக்கு ஆறுதலும் தேறுதலும் சொல்ல யாருமே இல்ல. தன்னந்தனியா போராடி என்னை நானே மீட்டெடுத்தேன். காக்க காக்க, சச்சின் படங்கள்தான் என்னைத் தலைநிமிர வைச்சது. என்னோட கடனை பெருமளவு தீர்த்த படம் சச்சின். எஸ்.ஏ. சந்திரசேகர் சாருக்கும் விஜய் சாருக்கும் நான் ரொம்ப நன்றிக்கடன் பட்டிருக்கேன்."

டைரக்டர் பாலாவுடன் என்னதான் பிரச்னை? ஊர் முழுக்க உங்கள் இருவரைப் பற்றித்தான் பேச்சாக இருக்கிறதே...

"எனக்கும் பாலாவுக்கும் எந்தப் பிரச்னையுமில்ல. அவரு என் குடும்பத்துல ஒருத்தராத்தான் பழகினாரு. பழகுறாரு. 'மாயாவி படம் சரியாப் போகல. ரெண்டு பேருக்கும் பிரச்னை'ன்னு என்னென்னமோ கிளப்பி விடறாங்க. மூணு நாளுக்கு மேல எங்களால பார்க்காம இருக்க முடியாது. அவருக்கு ஏற்பட்ட பிரச்னைக்கு நானும், எனக்கு ஏற்பட்ட பிரச்னைக்கு அவரும் பரஸ்பரம் கேக்காமலே உதவி பண்ணிக்குவோம்." *(பேசிக்கொண்டே இருந்தவர், சட்டென்று பாலவை செல்லில் கூப்பிட்டு நம் கையில் கொடுத்துவிட்டார். 'எனக்கும் தாணு சாருக்கும் எந்தப் பிரச்னையுமில்லை' என்று ஆணித்தரமாக நம்மிடம் மறுத்தார் பாலா.)*

"கமலஹாசனை நான் இன்னமும் நேசிக்கிறேன்!"

தொடர்ந்து சர்ச்சைக்குரிய தயாரிப்பாளராகவே இருந்து வருவதேன்?

"சர்ச்சைக்குரிய தயாரிப்பாளர்னு என்னைச் சொன்னா நான் ஒத்துக்கவே மாட்டேன். தெளிந்த நீரோடை மாதிரியான ஆளு நான். தப்புன்னா தப்பு. சரின்னா சரி. இதுதான் என் பாலிசி. சமீப காலமா எனக்குப் படம் பண்ண ஒரு சிலரோட ஏற்பட்ட பிரச்னைதான் இப்படியொரு கேள்வியை ஏற்படுத்தியிருக்கும்னு நினைக்கிறேன். அதுக்கு நான் காரணமில்ல. ராஜீவ் மேனன் 'கண்டு கொண்டேன்' படம் பண்ணிட்டு என்கிட்ட எல்லா ரைட்ஸையும் எழுதி வாங்கிட்டு, 'ஒரு பைசா வாங்கல'ன்னு பேட்டி கொடுத்ததை என்னால தாங்கிக்க முடியல. அவரு ஒரு நல்ல கலைஞன். என் மனசு புண்பட்டாலும் அவரு மனசு நோகக்கூடாதுன்னு பொறுமையா இருந்தேன். கமல் சார் கூட ஆளவந்தான்ல பிரச்னை. அதுக்கும் நான் காரணமில்ல. இப்படி எல்லாரும் சேர்ந்து சர்ச்சைகளை என்மேல திணிச்சாங்களே தவிர, சர்ச்சைகளைத் தேடி நான் என்னைக்கும் போனதில்லை."

தயாரிப்பாளர்கள் அழிந்துபோக, நடிகர்கள்தான் காரணமாயிருக்கிறார்கள் என்கிற குற்றச்சாட்டு குறித்து...?

"எல்லா நடிகர்களையும் அப்படிச் சொல்லிட முடியாது. சூர்யாவை வச்சு 'காக்க காக்க' பண்ணேன். எனக்கு லாபம். விஜய் சாரை வச்சு 'சச்சின்', மிகப்பெரிய லாபம். ஒரு சில நடிகர்கள்தான் தயாரிப்பாளர்களுக்குத் தொல்லையா வந்து விடியுறாங்க. விஜய் சாருக்கு அதிக சம்பளம் கொடுத்தாலும் 'வேண்டாம்'ங்கறார். சினிமாவை வாழ வைக்கணும்னு விரும்பினா, ஹீரோக்கள் தங்களோட பட வியாபாரத்துக்கு ஏத்த மாதிரி சம்பளம் வாங்கணும். அப்பத்தான் இதுபோன்ற குற்றச்சாட்டிலிருந்து அவங்களும் மீண்டு, தயாரிப்பாளர்களையும் கடன்கள்லருந்து மீள வைக்க முடியும்."

வரும் சட்டசபைத் தேர்தலில் ம.தி.மு.க. சார்பாக மீண்டும் போட்டியிடப் போவதாகச் செய்திகள் வருகின்றனவே...?

"நான் கலைஞர் தாசன். வைகோ நேசன். ஏதோ ஒரு முறை கலைஞருக்கு எதிரா தேர்தல்ல நின்னு தப்பு பண்ணிட்டேன். அதை நினைச்சு இன்னமும் நான் வருத்தப்பட்டுக்கிட்டிருக்கற சூழல்ல, அந்தத் தவறு இனி ஒரு போதும் நடக்காது. என்னைமீறி நடக்கவும் விடமாட்டேன்."

- மு.மாறன்

அட்டை, படங்கள் : **ஸ்ரீஹரி**

நீங்கள் கேட்டவை

● ஜெ. மல்லிகா, சந்தனப்பள்ளி

? இடைத்தேர்தல் கண்காணிப்புப் பணிக்கு துணை ராணுவம் வரப்போவதாகத் தேர்தல் அதிகாரி நரேஷ் குப்தா கூறுகிறாரே?

! தேர்தல் பிரசாரம் என்பது கொள்கைகள் அடிப்படையிலான ஒரு பட்டிமன்றம்; தேர்தல் என்பது நடுவரான வாக்காளர் அளிக்கும் தீர்ப்பு என்பதாக இல்லாமல் யுத்தமாக மாறிவிட்ட நிலையில், தேர்தல் கமிஷனுக்கு ராணுவத்தின் துணையை நாடுவதைத் தவிர வேறு வழியில்லை.

● எஸ். முரளி, குறிஞ்சிப்பாடி

? 'மெட்டி ஒலி' தொடரின் கதை சிங்கப்பூருக்குக் களம் மாறியுள்ளதே?

! வெள்ளித்திரையின் பாதிப்பு சின்னத்திரையிலும் படர்ந்துள்ளது. அவ்வப்போது பளபளக்கும் வெளிநாட்டுப் பின்னணிகளில், ஆனால் அதே அழுவாச்சி காட்சிகளுடன், சின்னத்திரை கண்ணீர் வியாபாரத்தைத் தொடரும்!

● கே.வி. நாதன், நெய்வேலி

? தமிழகத்தில் ஆன்மிக ஆட்சி நடப்பதாக தமிழக அமைச்சர் கூறுவது...?

! முதல்வர் காலில் விழுந்து அமைச்சர்களும் எம்.எல்.ஏ.க்களும் கும்பிடுவதாலும், அவரைத் துதி பாடுவதாலும் சொல்கிறார் போலும். ஆன்மிகம் என்பது வெறும் வழிபாடு அல்ல; ஆன்மாவின் நிரந்தரத் தேடல் என்பதை, படித்தவர் - பாமரர் யாவரும் மறந்துவிட்ட காலம் இது.



மெட்டி ஒலி சிங்கப்பூருக்கு

● ஜி. மாரியப்பன், சின்னமனூர்

? ஏ.ஆர்.ரஹ்மான் தமிழ்ப் படங்களை ஒதுக்கி வருகிறாரே...?

! சமீப காலமாக, இசைப்புயல் அயல் நாடுகளில் மையம் கொண்டிருக்கிறது. 'காட்ஃபாதர்', 'அ; ஆ' படங்கள் உங்கள் ஆவலைப் பூர்த்தி செய்யும்.

● ரா. சாலமோன், ஆலங்குளம்

? அறுபது சதவிகிதம் பிறமொழிக் கலப்போடு எழுதும் பத்திரிகையாளர்

கள் சண்டாளர்கள் என்று கடும் விமர்சனம் செய்துள்ளாரே டாக்டர் ராமதாஸ்?

! அடுத்த கேள்வி பதிலைப் படிங்க...

● வசந்தன், சென்னை - 15

? "எதுனா நியூஸ் கிதா?" எனக் கேட்காமல் "எதுனா செய்தி கிதா?" எனக் கேட்க வேண்டுமென, பா.ம.க.வின் தமிழ் பயிற்றுவிக்கும் தட்டிகளில் கூறப்பட்டுள்ளது. தராசுக்குத் தெரிந்தவரை இதில் தமிழ் எதுனா கிதா?

! படா ஜோக்கா கீது!



மாறிவிட்டதே?

● எம்.எஸ்.வேம்பன், மேட்டூர் அணை

? காஞ்சி மட மேனேஜர், ரகு மீது போதைப் பொருள் வழக்கு புதிதாகப் போடப்பட்டுள்ளது. அடுத்து மான் கறி தின்றதாகவோ, சிறுமிக்கு இனிப்பு கொடுத்து காது கம்மலைக் களவாடியதாகவோ வழக்குகள் போடப்படுமா?

! நமது போலீஸுக்கு அந்த அளவுக்குக் கற்பனை வளம் கிடையாது. மேலும், போதைப்பொருள் குற்றச்சாட்டில் உள்ள அனுகூலங்கள் மற்றதில் இல்லை.

● ஆர். ராஜலட்சுமி, கரூர்

? அலங்கரித்து அழகு செய்த பொய்யை நம்புவதும் இயற்கை அழகு கொண்ட உண்மையை அலட்சியப்படுத்துவதும் இன்றைய உலகில் சகஜமாக



● புயல் வருது!



● நியாயமா கீதா?

நடக்கிறதே...?

! நீங்கள் விவரிக்கும் சூழலை நம்பித்தானே லல்லு, "நீதிபதிகளிடம் தனியே ரகசிய வாக்குமூலம் தர விரும்புகிறேன்" என்று சொல்லியிருக்கிறார்.

● விமலா வரதராஜன், ஹைதராபாத் ★


? மும்பை மரைன் டிரைவ் கடற்கரையில் ஒரு மைனர் பெண்ணை கான்ஸ்டபிள் ஒருவர் பாலியல் பலாத்காரம் செய்ய, அவர் பதவி நீக்கப்பட்டிருக்கிறார். இந்நிலையில், 'பெண்கள் அரைகுறையாய் உடுத்துவதால்தான் ஆண்கள் இப்படியெல்லாம் வக்ரமாக நடந்துகொள்கிறார்கள்' என சிவசேனா வாதிடுவது ஏற்கக் கூடியதா?

! புதுடெல்லி மருத்துவமனை ஒன்றில் நர்ஸ் ஒருவரை, ஒரு வார்ட்பாய் பாலியல் பலாத்காரம் செய்துவிட்டான். நீதி மன்றத்தில், 'அவள் மானத்தைக் காப்பாற்ற'தான் அவளைத் திருமணம் செய்து கொள்வதாகக் கூறினான். இது பாலியல்



● ரகசிய பொய்கள்!

-தராசு



* பராமரிப்புப் பிரச்னை!

பலாத்காரத்தைக் காட்டிலும் பெரிய கொடுமை அல்லவா! 'இந்த அகம்பாவத்துக்கும் சேர்த்து அவனுக்குத் தூக்கு தண்டனை கொடுங்கள்' என்று நீதிபதியிடம் நர்ஸ் வேண்டினார். அந்த வாதம் ஏற்கப்படக் கூடியது. சிவசேனாவின் வாதம் அல்ல. (டெல்லி கோர்ட் நீதிபதி, குற்றவாளிக்கு ஆயுள் தண்டனை விதித்தார்).

● **எச்.ஆண்டனிதமிழரசன், மும்பை**

? காலதாமதம் ஆனாலும் சிவாஜி கணேசனுக்கு மணிமண்டபம் கட்ட பூமி பூஜை நடந்திருக்கிறது. தராசு என்ன நினைக்கிறார்...?

! காலதாமதம் பெரியதாக ஆகிவிடவில்லை. பாரதியார் மறைந்து பல்லாண்டுகள் கழித்துத்தான் தமிழகத்தில் அவருக்கு மணிமண்டபம் எழுந்தது. ஆனால் எழுப்பப்படும் நினைவுச் சின்னம் சிறப்பாகவும் கௌரவமாகவும் பராமரிக்கப்பட வேண்டுமே என்பதுதான் தராசின் கவலை.

● **எம்.அசோக்ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி**

? ஒரே காங்கிரஸில் அமைச்சராக இருந்தே ஜெயிக்க முடியாத முரளிதரனும் கருணாகரனும், தனிக் கட்சியால் என்ன சாதிக்கப் போகிறார்கள்?

! கம்யூனிஸ்டுகள் மேலும் பலம் பெற உதவியிருக்கிறார்களே!

● **லெ.நா. சிவகுமார், சென்னை - 33**

? "காங்கிரஸ் கட்சிக் கூட்டங்களில் வேட்டி சட்டைதான் கிழியும்; ஆனால் பிற கட்சிக் கூட்டங்களில் கொலைகூட விழும்" என்று இளங்கோவன் சொல்கிறாரே?

! வேட்டி - சட்டை கிழிவதேகூட கொலையின் விளைவாகத்தான் - உட்கட்சி ஜனநாயகக் கொலை.

● **வி.எம். செய்யது புகாரி, அதிராமபட்டினம்**

? சென்னையில் போலி மந்திரவாதியிடம் ஒரு பெண் டாக்டர் நகைகளைப் பறிகொடுத்து ஏமாந்த சம்பவம் பற்றி...?

! போலிச் சாமியாருங்க, மந்திரவாதிங்க எல்லாருமே ஆதிகேசவனிடம் பிச்சை வாங்கணுங்க! தொண்ணூறு வங்கிகளை ஏமாற்றி 1400 கோடி ரூபாய்க்குப் போலி காசோலைகள் வழங்குறார் அந்த ஆளு! அப்பாவிப் பொண்ணுங்க மந்திரவாதிகளிடம் நகையைப் பறிகொடுத்து ஏமாறுவதில் ஆச்சரியம் என்ன?



* ஆதி'காசவன்'!

● **ந.உமாமகேஸ்வரி, சென்னை** ☐

? கீரிப்பட்டி ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சமூக நலன் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தாமல், ஊராட்சி மன்றத் தலைவர் தேர்தலை மீண்டும் மீண்டும் நடத்துவது சரிதானா?

! பல முறை தேர்தல், நடத்தப்பட்டு, ஜெயித்த வேட்பாளர் ஜெயித்த சூடிலேயே ராஜினாமா செய்துள்ளது வரலாறு காணாத ஜாதிக் கொடுமை. முற்பட்ட வகுப்பினரால் முன்னிறுத்தப்படும் தலித் வேட்பாளர் இந்த நிபந்தனையின் பேரில்தான் நிறுத்தப்படுகிறார். தலித் தலைவராகிவிடக்கூடாது என்று திட்டமிட்டு நிகழ்த்தப்படும் இச்சதியை எதிர்த்து நீதிமன்றத்தில் மனு தொடரப்பட்டுள்ளது நல்ல விஷயமே. ●

ரூ.100 பரிசு பெறுபவர் :
ந.உமாமகேஸ்வரி,
21/11, 23வது தெரு,
தில்லை கங்கா நகர், நங்கநல்லூர்,
சென்னை - 600 061.

ரூ.50 பரிசு பெறுபவர் :
விமலா வரதராஜன்,
"பிளாட் எண் 203, இரண்டாவது மாடி,
எஸ்.வீஸ். ரமணா பாரடைஸ்,
ஈஸ்ட் ஆனந்த் பாக், மல்கஜ்கிரி,
ஹைதராபாத் - 500 047.



COTS WITH / WITHOUT STORAGE
More than 25 Models
SOFA SETS
More than 50 Models
ENTERTAINMENT SETS
More than 10 Models
WOODEN WARDROBES
More than 10 Models
Quality Furniture at Affordable Price Tags
Sathya
Furniture World
Since 1968
Lifetime Investment
One of India's Biggest Furniture Showroom
H.O : Mylapore
(20,000 sq.ft)
139, R H Road,
Next to Sanskrit College,
Ch-4. Ph : 24982930 / 31
Anna Nagar (West)
DABC Bldg.,
6, M T H Road, Padi,
Opp. TVS, Padi, Ch-50.
Ph : 52155929
Velachery
Paramount Park,
358, Velachery-Tambaram
Main Rd, Ch-42.
Ph : 52144929
Coimbatore
266, Mettupalayam Road,
Near Saibaba Temple
Bus Stop, Cbe - 43.
Ph : 2452929 / 30
STEEL ALMIRAHS
More than 50 Models
SOFA-CUM-BED
More than 10 Models
Also Available
Diwans
Recliner Chairs
Pooja Cabinets
Computer Tables/Chairs
& Office / Institutional
Furniture
SUNDAY OPEN
Exchange Option available for Old Furniture
Major Credit Cards accepted
DINING SETS
More than 50 Models
BEDROOM FURNITURE
More than 50 Models

சிரிப்பும் சங்கீதமும்...

புத்தக வெளியீட்டு விழாக்கள் என்றாலே அழையா விருந்தாளியாக வந்து சேரும் ஒருவித இறுக்கமான சூழல், தேவன் அறக்கட்டளை சார்பில் சிவகாமி பெத்தாச்சி அரங்கில் சென்ற வாரம் நடைபெற்ற நினைவு விழாவில் நல்ல வேளையாகக் காணப்படவில்லை. அநுசரி, அசோகமித்திரன், ஜே.எஸ். ராகவன், கிரேஸி மோகன் போன்றோர் இருக்கும்பொழுது எந்த நிகழ்ச்சியாக இருந்தால் என்ன, அது 'கலகல' நிகழ்ச்சியாகத்தானே இருக்க முடியும்?

'ஹாஹா' இலக்கியத்திற்கு ஒரு புதிய பாதையை வகுத்துக் கொடுத்து, இன்றளவும் பல நகைச்சுவை எழுத்தாளர்களுக்கு வழிகாட்டியாகத் திகழும் அமரர் தேவனின் '5 நாடுகளில் 60 நாட்கள்' என்னும் புத்தகத்தை அசோகமித்திரன் வெளியிட்டார். கிரேஸி மோகன், ஜே.எஸ். ராகவன் இருவருக்கும் தேவன் நினைவுப் பதக்கங்கள் வழங்கப்பட்டன.

"நகைச்சுவைக் கதைகளை ரசிப்பதற்கும் சிறந்த சங்கீதத்தை ரசிப்பதற்கும் பிரத்யேக ரசனை தேவைப்படுகிறது" என்ற ஜே.எஸ். ராகவன், "சுவையான உணவு வகைகளை ருசிப்பதற்கும் ஒருவித ரசனை தேவைப்படும்" என்றார். அட! அவர் சொல்லி முடித்த கையோடு, மெய்யாகவே சங்கீத விருந்து தொடங்கி விட்டது. காயத்ரி வெங்கட்ராகவன் சுகமான சங்கீத விருந்தளிக்க, அவருடன் இணைந்து குழைத்துக் குழைத்து வயலின் விருந்தளித்தார் அக்கரை சுப்புலட்சுமி. மிருதங்கம், மனோஜ் சிவா.

ஜே.எஸ். ராகவன் குறிப்பிட்டதைப் போல இலக்கியமும் நகைச்சுவையும் வெவ்வேறானவை அல்ல. நகைச்சுவை எழுத்தாளர்களால் கனமான கதைகளையும் எழுத இயலும். "ஆனால் அப்படி எதையும் செஞ்சுடாதீங்க" என்று ராகவனை அவரது நண்பர்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்களாம்.

புத்தகப் பிரியர்களும் கர்நாடக இசைப் பிரியர்களும் சமமாக நிரம்பிய பார்வையாளர்கள் பகுதியில், தம் கண்கள் மூடி மெலிதாகத் தாளம் போட்டுக் கொண்டிருந்த இந்திரா பார்த்தசாரதியையும், திருப்பூர் கிருஷ்ணனையும் பார்க்க முடிந்தது.

- இன்பா



• விழாவில்... ஜே.எஸ். ராகவன், அசோகமித்திரன், கிரேஸி மோகன்...



விலங்குகள் தெறித்து விழட்டும்!

நேற்று : மும்முறை தலாக் சொல்லி ஓர் இஸ்லாமியப் பெண்மணியை அவரது கணவர் விவாகரத்து செய்யலாம்.

இன்று : மும்முறை தலாக் சொல்லி விவாகரத்து செய்யும் முன், கணவர் கொஞ்சம் யோசிக்க வேண்டும்; முற்றிலும் அவசியமானால் மட்டுமே 'தலாக்' உரிமையைப் பயன்படுத்தலாம்.

'நேற்றைக்கும் இன்றைக்கும் என்ன வித்தியாசம் இருந்துவிட முடியும்?' என்பது சீர்திருத்தம் கோரும் முஸ்லிம் பெண் அமைப்புகளின் வருத்தம் நிறைந்த கேள்வி. இந்த அமைப்புகள் மிகவும் போராடியதன் பேரில், அவை சிபாரிசு செய்த சீர்திருத்தங்களைப் பரிசீலித்து ஏற்பதாக, முஸ்லிம் தனியார் சட்ட வாரியம் ஒப்புக் கொண்டது. ஆனால், நீண்ட யோசனைக்குப் பிறகு, சட்டத்தில் அது இயற்றிய மாற்றமோ 'ஒன்றுமில்லை', 'யோசித்து', 'அவசியமானால்' போன்ற வார்த்தைகளைச் சேர்ப்பதன் மூலம் எந்தச் சட்டத்தையும் திருத்த முடியாது; அந்தச் சட்டத்தால் நீதி பெறாத தரப்புக்கு எந்த நன்மையும் விளையாது!

ட்ரிபிள் தலாக் விவாகரத்து முறையை உலகின் பல இஸ்லாமிய நாடுகள் கைவிட்ட பிறகும், இந்திய இஸ்லாமிய தனிச் சட்ட வாரியம் கைவிடவில்லை. இதன் மூலம் இஸ்லாமியப் பெண்கள்




கல்கி



2005 மே 15
பார்த்திப வைகாசி 1
மலர் : 63
இதழ் : 42

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிட்டி பாப்பா - பாரதியார்.




சொல்லொணாத் துயருக்கும் துன்பத்துக்கும் ஆளாகிறார்கள் என்பதை பிற மதத்தினர் சுட்டிக்காட்டுவது இருக்கட்டும், இஸ்லாமிய சகோதரிகளே வாய்விட்டுக் கூறவும், மாற்றம் கோரவும் செய்கிறார்கள். சொந்த சகோதரிகளுக்கு இந்த வாரியம் ஏன் செவி சாய்க்க மறுக்கிறது? குர்-ஆனுக்கும் இஸ்லாத்துக்கும் விரோதமான ஒரு சமூகக் கோட்பாட்டை ஏன் மதத்தின் பெயரால் நிரந்தரப்படுத்தி பாதுகாத்துப் போற்றுகிறது?

'ஆணாதிக்க மனோபாவம்தான் காரணம்' என்று, ஒரு வாக்கியத்தில் இக் கேள்விக்கான பதிலை அடக்கிவிட முடியாது. ஒரு கலாசாரத்தின் வளர்ச்சி, பெரும்பாலும் மதத்தைச் சார்ந்தே அமைகிறது. பூகோள, வரலாறு ரீதியான பாதிப்புகள், இயற்கைச் சீற்றத்தின் விளைவான கட்டாயங்கள் என்று மேலும் பல விஷயங்கள் சேர்ந்து, ஒரு சமுதாயத்தின் நுண்ணிய கலாசாரக் கலவையை உருவாக்குகின்றன. அப்படி உருவான ஒரு கலவையை சட்டென்று பிரிப்பதோ, கலைப்பதோ எளிதல்ல.

ஆனால், இன்று நாம் இருபத்தோராம் நூற்றாண்டில் இருக்கிறோம். கூர்மையான பகுத்தறிவுடன் இருபது நூற்றாண்டுகளின் பட்டறிவும், அதன் விளைவான ஆழ்ந்த மனிதாபிமானமும் இன்று மனித குலத்துக்கே சொந்தமான உயர்பண்புகளாக இருக்கின்றன. எந்த ஒரு விஷயத்தையும் எடை போடவும், முடிவுக்கு வரவும் தீர்ப்புச் சொல்லவும் இனி இந்த மூன்றும்தான் அடிப்படையாக அமைய முடியும். சமூக நீதிக்கும் தனி மனித நீதிக்கும் இடையே சமன் செய்து நியாயம் வழங்கும் சட்டங்கள் கூட, இந்தப் பண்புகளை அடிப்படையாகக் கொண்டுதான் அமைய வேண்டும் - பெரும்பாலும் அமைந்தும் வருகின்றன. அவ்வாறு அமையாத பொதுச் சட்டங்கள் திருத்தத்துக்கும் மாற்றத்துக்கும் விரைவில் உள்ளாகின்றன.

ஆனால், தனிச்சட்டம் (பர்சனல் லா) என்ற பிரிவில் வரும் சட்டங்கள் மட்டும் அவ்வாறு ஆரோக்கியமான, துணிச்சலான மாற்றங்களை ஏற்பதில்லை. மரபை உடைக்கலாமா என்ற



மெய்யான அச்சம் ஒரு தடை ; வறட்டுப் பழைமைவாதம் மற்றொரு தடை.

இந்தத் தடைகளை மீறுவது பாவம் என்றோ, பெண்களிடம் தோற்கும் கோழைத்தனம் என்றோ இனி கருத வேண்டிய அவசியம் இல்லை. ஏனெனில், மிகப் பிற்போக்கான அமைப்புகள் தங்கள் தவறுகளைத் திருத்திக் கொண்டதால் அழிந்ததில்லை ; வளர்ச்சிதான் அடைந்திருக்கின்றன. சீர்திருத்தங்களை ஏற்பதும், நடைமுறைப்படுத்துவதும் கோழைத் தனமல்ல ; வீரம்.

'தலாக்' போன்ற வசதியை இஸ்லாமிய பழைமைவாதிகள் வேறு அம்சங்களில் ஏற்பார்களா...? வியாபார ஒப்பந்தங்கள், சகோதர உறவு, தாய் - சேய் உறவு போன்றவற்றில் தலாக் முறையைக் கற்பனை செய்து பார்க்க முடியுமா!

பரஸ்பர தியாகமும் அன்பும் மரியாதையும் கோரும் திருமண பந்தத்தில் மட்டும் மிக எளிதான ஒரு துண்டிப்பு நிகழ அனுமதித்து, பெண்களின் வாழ்க்கையை நிலைகுலையச் செய்யலாமா? வம்ச விருத்திக்கு ஆதாரமான உறவை இப்படி இழிவுபடுத்துவது முரண்பாடு அல்லவா?

இந்த அடிப்படையான விஷயம் ஒரு பக்கம் இருக்க, இந்திய முஸ்லிம் பெண்களும் இந்தியக் குடிமக்கள்தானே! இந்திய அரசியல் சாசனம் வழங்கும் அடிப்படை உரிமைகள், தனி மனித உரிமைகள் இந்த முஸ்லிம் பெண்களுக்கும் உரியவைதானே. எனவே, பலதாரத் தடை, திருமணத்துக்குக் குறைந்தபட்ச வயது நிர்ணயம், தலாக் அச்சுறுத்தல் இன்றி வாழும் உரிமை, போன்ற உரிமைகளை இஸ்லாமிய மதத் தலைவர்கள் முஸ்லிம் பெண் களுக்கு உறுதி செய்யத்தான் வேண்டும். இதற்கு இஸ்லாமியர் அல்லாதாரும் குரல் கொடுக்கத்தான் வேண்டும். இந்தியாவின் வளர்ச்சிக்கு, இந்திய முஸ்லிம் பெண்களின் முன்னேற்றம் மிக அவசியமானது. இஸ்லாமிய சகோதரிகளின் கைவிலங்குகள் தெறித்து விழாதவரை இந்தியப் பெண் குலத்தின் சமத்துவம், முன்னேற்றம் என்பதெல்லாம் அரைவேக்காட்டுச் சோறுதான்!

●

மினி கதை

- ஆர்.வசந்தகுமார்

கேரியர்!

அட்டெண்டர் மாடசாமி யோசித்தான். என்ன ஒற்றுமை இது? திருமணம் முடிந்து, அவனும் இன்றுதான் வேலையில் சேர்ந்திருந்தான். புதிதாய் வந்திருக்கும் மேனேஜரும் இன்றுதான் ஜாயிண்ட் பண்ணினார்.

மேனேஜரின் காலைப் பொழுது முழுக்க, மாலைகளும் பொக்கேக்களும் எலுமிச்சை, ஆப்பிள் பழங்களும் கை குலுக்கல்களு மாய்க் கழிந்தது.

லன்ச் இடைவேளை!

டைனிங் ஹாலில், மாடசாமி கேரியரைப் பிரித்தான்.

புது மனைவி திலகாவின் கை மணம் அள்ளியது.

நன்றாகச் சமைத்திருந்தாள். சக ஊழியர்களிடம் சிலாகித்தபடியே, சாப்பிட்டு முடித்தான். கேரியரை எடுத்துக் கொண்டு கை கழுவ எழுந்தவனுக்கு திடீர் சிந்தனை. நேற்றுவரை கேரியரை நாம்தானே கழுவிக் கொண்டிருந்தோம்... இன்றுதான் திலகா வந்துவிட்டாளே?

அடுக்குகளைச் சேர்த்து அடுக்கி, கரண்டியைப் போட்டு கூடையில் வைத்துவிட்டு, கை மட்டும் கழுவினான்.

சற்றைக்கெல்லாம் மேனேஜர் 'பெல்லை' அழுத்த, மாடசாமி பரபரப்பாக உள்ளே ஓடினான்.

கழுவிய கையை தேங்காய்ப் பூ துண்டில் துடைத்துக்கொண்டே, "சாப்டாச்சு.. கேரியரை நல்லா வாஷ் பண்ணி வீட்டுக்குப் போகும் போது கொடுத்திடு மாடசாமி" என்றார்.

பழைய மேனேஜர் இந்த வேலையைத் தரமாட்டார். மேனேஜரின் டிபன் கேரியரை எடுத்துக் கொண்டு வாஷ் பேஷனுக்கு விரைந்தவன், என்ன நினைத்தானோ... திரும்பத் தன் இடத்துக்கு வந்து, தன்னுடைய கேரியரையும் எடுத்துக் கொண்டு போய் கழுவ ஆரம்பித்தான். ○



குமுறல்

"ராஜினாமா செய்யலேன்னா வாழ முடியாது!"

–கீரிப்பட்டி சோகம்



• அழகுமலை



தேர்தல் நடக்கும். ஓட்டுப் போட்டுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட வேட்பாளர், அடுத்த நிமிடமே ராஜினாமா செய்து விடுவார். கேட்கவே அதிர்ச்சியளிக்கும் இந்த விவகாரம், மதுரை மாவட்டம் கீரிப்பட்டி ஊராட்சியில், ஆறாவது முறையாக அண்மையில் அரங்கேறியுள்ளது.

இடஒதுக்கீட்டின்படி, இந்த ஊராட்சித் தலைவர் பதவி தலித்துகளுக்காக ஒதுக்கப்பட்டது. மொத்த வாக்காளர்கள் 1310 பேர். தலித்துகள் 248, தச்சு ஆசாரி மற்றும் வண்ணார் இன வாக்குகள் 32. மீதமுள்ள 1030 வாக்குகள் தேவர் இனத்தைச் சேர்ந்தவர்களுடையது. விடுதலைச் சிறுத்தைகள் சார்பாக இங்கு போட்டியிட்ட பூங்கொடி, 29 வாக்குகள் பெற்றிருக்கிறார். ஊர் பொது வேட்பாளராக தேவர் இனத்தினரால் தேர்வு செய்யப்பட்ட அழகுமலை, 487 வாக்குகள் பெற்று, ஊராட்சித் தலைவராக வெற்றி பெற்று பதவியேற்ற சில நிமிடங்களில் தன்னுடைய ராஜினாமாவைச் சமர்ப்பித்துவிட்டுத் திரும்பியிருக்கிறார். தலித் வேட்பாளர் பூங்கொடிக்கு ஓட்டுப் போட்ட குடும்பங்களை ஊரை விட்டுத் தள்ளி வைத்திருப்பதாகவும் பேச்சு.

என்னதான் நடக்கிறது கீரிப்பட்டியில் என்றறிய, அம் மக்களைச் சந்தித்தோம்.

''கீரிப்பட்டியில் மட்டும் தேவர் சமூகத்துக்கு எழுநூறு வீடுகள். தாழ்த்தப்பட்டோருக்கு நூறு வீடுகள். அப்படியிருக்கும்போது எங்கள் ஊராட்சியை தலித்துகளுக்கென அரசாங்கம் எப்படி அறிவித்துள்ளது என்பது புரியாத புதிராக இருக்கிறது. எங்கள்



* வீரம்மாள்



* ராகுத்தேவர்

ஊரில் தலித் மக்களுக்கும் தேவர் சமூகத்தவர்க்கும் இடையே எந்தப் பகையும் இல்லை. ஆனால், பெரும்பான்மையாக தேவர் இன மக்கள் காலங்காலமாக வசித்துவரும் ஒரு கிராமத்துக்கு, ஊராட்சித் தலைவர் பதவியை ஒரு தலித்துக்கு எப்படி விட்டுத் தர முடியும்? இதுக்கு எந்தக் காலத்துலயும் எங்க ஊர்ல ஒத்துக்கிடவே முடியாது. இதுக்கெல்லாம் ஒரே தீர்வு, பொதுத் தொகுதியா மாத்தி அறிவிக்கறதுதான்'' என்று ஆவேசமாகக் கூறினார் கீரிப்பட்டி கிராம முக்கியஸ்தர்களில் ஒருவரான தவசித்தேவர்.

''கீரிப்பட்டி ஊராட்சித் தலைவர் பதவியை தலித்துகள்கிட்டே இருந்து மாத்தி பொதுவானதா அறிவிச்சாத்தான், இங்கன ஊராட்சி அமைப்பே செயல்பட முடியும். இல்லேன்னா... இன்னும் நூறு வருஷம் ஆனாலும் சரி, எங்க தேவர் இன மக்கள் ஒத்துழைக்கவே மாட்டாங்க. இது உறுதி!'' என்று படபடத்தார் ராகுத்தேவர்.

''ஒவ்வொரு ஆறு மாசத்துக்கும் இதுவே ஒரு பொழைப்பாப் போச்சு. பதினைஞ்சு குடும்பங்களைத் தள்ளி வெச்சுட்டாங்கன்னு, டி.வி, பேப்பர்ல எல்லாம் வந்து பெரிய பிரச்னையாயிடுச்சு. எங்க ஆளுங்க யாரும் அவங்கள தள்ளி வைக்கல. ஜெயிச்ச வேட்பாளர் அழகுமலை, அவரா முடிவு எடுத்துத்தான் பதவிய ராஜினாமா பண்ணாரு. 'ரிசர்வ்'லேர்ந்து மாறணும்னா, பத்து வருஷம் ஆகணும்னு ஒரு விதி இருக்குன்னு சொல்றாங்க. அப்படிப் பார்த்தா இன்னும் ஒண்ணரை வருஷத்துல இது மாறிடும்னு நெனைக்கிறோம்'' என்று நம்பிக்கையுடன் பேசினார் விவசாயி பழனிச்சாமி.

விடுதலைச் சிறுத்தைகள் சார்பாக போட்டியிட்ட பூங்கொடியைப் பார்க்கப் போனால் அவர் இல்லை. அவரது தாய் வீரம்மாள்தான் நம்மிடம் பேசினார்.

''ஓட்டுப் போட்டாங்கன்னு ஒரு பதினைஞ்சு குடும்பங்களை இந்த ஊர்ல தள்ளி வெச்சுட்டாங்க. டீத் தண்ணிகூட வாங்கப் போவ முடியாது. டி.வி. பேப்பர்ல பார்த்துட்டு, கவர்ன்மெண்ட் ஆபீஸருங்க வந்து என்னன்னமோ பேசிட்டுப் போனாங்க. என்ன பேசி என்னங்க ஆவுறது... எங்க நெலைமை ஒண்ணும் மாறலீங்க. எப்ப மாறுமோ அதுவும் தெரியலீங்க'' என்றார் வீரம்மாள்.

பூங்கொடியின் அண்ணன் கருத்தக்கண்ணன், ''இதுக்கெல்லாம் அரசுதான் ஒரு முடிவு பண்ணணும். தலித்துகளுக்குன்னு ஊராட்சித் தலைவர் பதவிய அறிவிச்சுட்டு, அதை நடைமுறைப்படுத்தவிடாம தடுக்குறவங்க தேவர் ஆளுங்கதான். நாங்களும் மனுஷங்கதானே... இது எங்களுக்கு ரொம்பவும் அவமானமா இருக்கு. நாங்க எல்லாருமே விவசாயக் கூலிங்க. அவங்களோட நெலங்கள்ல வேலை செஞ்சாத்தான் எங்களுக்குச் சோறு. நாங்களும் எவ்வளவோ போராடிப் பார்க்கிறோம். கடைசியா ஒவ்வொரு தடவையும் தோத்துப் போயிடுறோம். ஒன்பது வருஷமா ஒரு தலித்தால ஊராட்சித் தலைவரா நின்னு செயல்பட

* தவசித்தேவர்






* கருத்தப்பன்

முடியலை பாருங்க!" என்று விரக்தியுடன் பேசினார்.

"எங்க (தலித்) ஆளுங்கள்லயே ஒரு ஆளை, அவங்க (தேவர்) எல்லாருமா சேந்து பொது வேட்பாளரா நிறுத்தறது, அவருக்குப் பணம் கட்றது, செலவு செய்றது, ஜெயிச்சதும் அவரை ராஜினாமா பண்ண வெச்சுடறது... இதுவே இங்கன ஒரு வேலையாப் போச்சுங்க. ஜெயிக்கற எங்க ஆளு, அவங்கள மீறி ராஜினாமா பண்ணாம இருந்துட்டார்னா, அப்புறமா இந்த காலனியில எங்களோட நூறு குடும்பமும் வாழ முடியாது. அதுக்குப் பயந்துக்கிட்டே ஜெயிச்சு வர்ற (தேவர் சாதியினரால் ஜெயிக்க வைக்கப்படுகிற) எங்க ஆளுங்களும் பதவியேத்த மறுநிமிடமே ராஜினாமா பண்ணிட்டு வந்துடறாங்க. இதுதாங்க உண்மை. இதை நான் சொல்ல முடியும்ங்க. ஆனா, ஜெயிச்சுட்டு இப்ப ராஜினாமா பண்ணின அழகுமலையால இதை வெளிப்படையாப் பேச முடியாதுங்க" எனப் போட்டுடைத்த தலித் இளைஞர் ஒருவர், கேமராவுக்கு முகம் காட்ட மறுத்து விட்டார்.



• பழனிச்சாமி

காலனியில் வசித்து வரும் அழகுமலையைச் சந்தித்து "இந்தச் செய்தி உண்மைதானா?" என்றால், மனிதர் பதறிப்போகிறார்.

"அதெல்லாம் ஒண்ணுமில்லீங்க. எலக்ஷன்ல நின்னேங்க. எப்பிடியோ ஜெயிச்சேங்க. அய்யம்புடுக்கி கோயில்ல சாமியாடிங்க நான். கெடைக்கற வேலைக்குப் போயிட்டு வருவேங்க. அப்புறமா பாத்தேனுங்க. நமக்கு அதெல்லாம் சரிப்பட்டு வராதுன்னு ராஜினாமா பண்ணிட்டேன். நமக்கு அம்புட்டுதாங்க வெளங்கும்" என்று கையெடுத்துக் கும்பிடுகிறார் அழகுமலை.

- ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு

சிறுகதை

ரயில் விழுப்புரம் தாண்டி, தெற்கு நோக்கி விரைந்து கொண்டிருந்தது. தூக்கம் வராமல் பர்த்தில் புரண்டு படுத்தேன். எதிர் பர்த்தில் மகள் சத்யா ஆழ்ந்த தூக்கத்தில் இருந்தாள். திருநெல்வேலி பக்கம் போய் ஆறேழு வருடங்கள் இருக்குமா? சென்னையின் எந்திர வாழ்க்கையில் இருந்து சில நாட்கள் கூட விடுபட்டு ஊருக்குப் போய் வர முடிவதில்லை.

ஊர் போனதும் முதலில் வெள்ளங்குளி சென்று வீட்டைப் பார்க்க வேண்டும். அந்த கிராமத்து வீடு ஒன்றுதான் தாத்தா அப்பாவுக்கும், அப்பா எனக்குமாய் விட்டுப்போன ஒரே சொத்து. பரம்பரையாய் முன்னோர்கள் வாழ்ந்த வீடு.

வேலை காரணமாக நான் சென்னை வர நேர்ந்து விட்டதால், அந்த வீட்டில் ஒரு கட்டத்துக்குமேல் என்னால் வசிக்க முடியவில்லை. இருப்பினும், இன்னும் சில வருடங்களில் ஓய்வு பெற்றதும், மனைவி கல்யாணியுடன் கிராமத்து வீட்டில் செட்டிலாகிவிடுவது என்றும், என் அந்திமக் காலங்கள் அந்த வீட்டில்தான் என்பதிலும் உறுதியாய் இருந்தேன்.



வந்தியத்தேவன்

பாரம்பரிய வழக்கப்படி அந்த வீடு மகன் குமாருக்குத்தான் சொந்தம். அதனால்தான் எவ்வளவோ சிரமங்கள் வந்தும், அந்த வீட்டை உறவினர்கள் அதிக விலைக்குக் கேட்டபோதும் விற்க மறுத்து விட்டேன். சின்ன வயதில் நானும் அக்காவும் வளர்ந்தது, படித்தது, விளையாடியது, சண்டையிட்டது எல்லாமே அந்த வீட்டில்தான்.

சட்டென அக்கா நினைவு வந்தது. எதற்காக திடீரென 'குடும்பத்தோடு ஊருக்கு வா' என்று அக்கா கடிதம் எழுதியிருந்தாள் என்று தெரியவில்லை. கல்யாணிக்கு கடும் ஆஸ்துமா. குமாருக்கு செமஸ்டர் என்பதால் அவர்களால் வர முடியவில்லை. சத்யா கிராமத்தைப் பார்க்க விரும்பியதால் நானும், அவளும் மட்டும் கிளம்பினோம்.

ரயில் ஒரு பாலத்தின் மீது தடதடத்தது. சத்யாவைப் பார்த்தேன். தூக்கத்திலேயே லேசாகச் சிரித்தாள். பக்கவாட்டில் பார்க்கும்போது முகத்தில் அக்காவின் சாயல் தெரிந்தது. காதோரம் சுருண்டிருந்த முடிக் கற்றைகள் காற்றில் ஆடின.

சத்யா போன ஆண்டுதான் பி.காம். முடித்தாள். மகனையும், மகளையும் ஒரு சேர கல்லூரியில் படிக்க வைக்க என் பொருளாதாரம் இடம் தருமா என்று யோசித்துக் கொண்டிருந்தேன். அதற்குள்

சத்யாவே, 'போதும்பா... தம்பியை படிக்க வையுங்க' என்று பொறுப்பாகச் சொல்லி விட்டாள். மேலும், கல்யாணியின் உடல் நிலை கருதியும் வீட்டைக் கவனிக்கவும் ஒருவர் தேவை என்பதாலும் அவளே இந்த முடிவுக்கு வந்துவிட்டாள்.

நல்ல பையன் ஒருவனைப் பார்த்து அவளைத் திருமணம் செய்து கொடுக்க வேண்டும். கிருஷ்ணன் - சத்யா ஜோடிப் பொருத்தம் அருமையாக இருக்கும். சத்யாவின் திருமணம் பற்றி நினைக்கும் போதெல்லாம் கிருஷ்ணனும் நினைவுக்கு வரத்தான் செய்கிறான்.

வெள்ளங்குளி வீடு



அக்காவின் ஒரே மகன் கிருஷ்ணன், எம்.எஸ்.சி. அக்ரி முடித்துவிட்டு சொந்த ஊரிலேயே நவீன முறையில் விவசாயம் செய்தபடி மாமாவுக்கு உதவியாக இருக்கிறான். நாலெழுத்து படித்தாலே நகரத்துக்கு பறக்கத் துடிக்கும் இன்றைய இளைஞர்கள் மத்தியில், விவசாயத்தை தேர்வு செய்த அவனை எனக்கு ரொம்பப் பிடிக்கும்.

சில வருடங்களுக்கு முன் உறவினர் வீட்டுத் திருமணத்துக்காக அக்கா குடும்பத்தோடு சென்னை வந்திருந்தாள். அப்போது கிருஷ்ணன் கல்லூரியிலும், சத்யா பத்தாம் வகுப்பும் படித்துக் கொண்டிருந்தனர். அப்போது இருவரும் ஒரு வார்த்தைகூட பேசிக் கொள்ளவில்லை.

சத்யாவின் கன்னத்தைத் தட்டிய அக்கா, 'என்னடி, எங்க கிருஷ்ணனை கட்டிக்கிறியா?' என்றதற்கு, சத்யா லேசான சிரிப்பையே பதிலாக்கினாள். நகரத்தில் வளர்ந்த அவளுக்கு இந்தக் கேள்வி சற்று அசட்டுத்தனமாகக் கூடப் பட்டிருக்கும்.

காலை அம்பாசமுத்திரத்தில் உள்ள அக்கா வீட்டுக்கு நாங்கள் போனபோது முகம் மலர வரவேற்றவள், "ரொம்ப மெலிஞ்சுட்டியே" என்றாள்.

"ரொம்ப நாள் கழிச்சுப் பார்க்கிறதால அப்படித் தெரியுது. வயசுதான் அம்பதைத் தாண்டிருச்சே" என்றேன்.

அக்கா இப்போது சற்று மூப்படைந்திருந்தாள். ஆனால், முகத்தில் ஒரு பிரகாசம் தெரிந்தது. அது அவள் அணிந்திருந்த நகைகளின் காரணமாய் இருக்கலாம். வீடு முன்னுக்கு இப்போது நவீன வசதிகளை உள்ளடக்கியிருந்தது.

குளித்து, சாப்பாடு முடிந்து எழுந்த போது, வெளியில் சென்றிருந்த மாமாவும், கிருஷ்ணனும் வந்தனர். கிருஷ்ணன் இப்போது நன்றாக உயர்ந்து கம்பீரமாக இருந்தான்.

"வாங்க மாமா, ஊர்ல எல்லாரும்

நல்லா இருக்காங்களா? நம்ம சத்யாவா இது... அடையாளமே தெரியலையே..." என்றவன், அவளிடம் குமார் படிப்பு, கல்யாணி உடல்நிலை பற்றி விசாரித்தான். சத்யாவுக்கு இப்போது கிருஷ்ணனிடம் பேசுவதில் தயக்கமேதும் இல்லை. இருவரும் நீண்ட நாள் பழகியவர்கள் போல பேசிக்கொண்டனர்.

இரவு மொட்டை மாடியில் அக்கா, மாமா நான் மூவரும் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தோம். கீழே கிருஷ்ணனும் சத்யாவும் 'டீ.வி.'யில் லயித்திருந்தனர்.

"சத்யாவை கிருஷ்ணனுக்கு பண்ணிக் கலாம்னு நினைக்கிறேன், என்னடா சொல்றே?" - திடீரென கேட்டாள் அக்கா.

சட்டென்று மனதுக்குள் மகிழ்ச்சி நீரூற்று பொங்கி கண்களில் துளிர்த்தது. அக்கா மாறவே இல்லை. நான் நினைத்ததையே அவளும் எண்ணியிருக்கிறாள்.

"நான் சொல்றதுக்கு என்னக்கா இருக்கு... எனக்கு என்னமோ அவ உங்கிட்ட வர்றதுக்காகவே பிறந்த மாதிரி தான் தோணுது. தாராளமா கல்யாணத்தை முடிச்சிடலாம். சரி, கிருஷ்ணன் என்ன சொல்றான்?" என்றேன்.

"அவன் சரின்னுட்டான். சத்யாகிட்ட நான் கேட்டதுக்கு, நீ பார்த்து என்ன செஞ்சாலும் சரிதான்னு சொல்றா. ஆனா..."

"ஆனா என்ன?" என்றேன் புரியாமல்.

"ஒண்ணுமில்லை, உன் குடும்பச் சூழ்நிலை எனக்குத் தெரியும். நீ சம்பாதிச்சு, பிள்ளைகளைப் படிக்க வைச்சு கல்யாணிக்கு வைத்தியமும் பண்ணி சத்யாவுக்கு நகை, நட்டுன்னு ஏதும் சேர்த்திருக்க முடியாதுங்கிறது எனக்குத் தெரியும்..."

"..."

"மாமாவோட சொந்தத்துல ரெண்டு, மூணு பொண்ணுங்க இருக்குது. ஏகப்பட்ட சீர், செனத்தியோட கிருஷ்ணனுக்குத் தர்றேன்னு ஒத்தைக் கால்ல நிக்கிறாங்க. அதை நாங்க விரும்பலை. அதனால..." தயக்கமாக நிறுத்தி என்னை ஏறிட்டாள்.

"...."

"அதனால... நீ சீரு, செனத்தின்னு ஒண்ணும் செய்ய வேண்டாம். வெள்ளங்குளி வீட்டை மட்டும் உம் பொண்ணு பெயருக்கு எழுதி வைச்சிரு போதும். இதைக் கூட உங்கிட்ட கேட்க எனக்கு சங்கடமாத்தான் இருக்கு. ஆனா, நாளைக்கு மாமாவோட சொந்தக்காரங்க யாரும் ஒண்ணும் இல்லாதவன் பொண்ணைக் கட்டிக்கிட்டு வந்துட்டான்னு குறை பேசக் கூடாதில்லையா... அதான்..."

சிறிது நேரம் ஒருவரும் பேசவில்லை. மாமா மௌனமாக வெற்றிலையை மென்று கொண்டிருந்தார். அவர் எப்போதுமே அதிகம் பேசமாட்டார். கீழே கிருஷ்ணனும் சத்யாவும் சிரிக்கும் சப்தம் கேட்டது.


"இதுல சங்கடப்பட என்னக்கா இருக்கு. எம்மகளுக்குத்தானே தரப் போறேன்... சத்யாவோட கல்யாணத்துக்கு சீதனமா அந்த வீட்டைக் கொடுத்துட்டாப் போச்சு..." என்றேன் நான் அமைதியாக. ●




மூச்சு!

தனது படங்கள் எதுவும் சமீப காலமாக பெரு வெற்றி பெறாததால், அரசியலை கொஞ்சம் ஓரம்கட்டிவிட்டு சினிமாவில் முழு மூச்சாக இறங்கவிருக்கிறார் சரத்.

சின்னான் செய்திகள்



போன வாரம் தான் 'பார்லிமெண்டுக்கு வாங்க'ன்னு எம்.பிகளுக்கு எஸ்.எம்.எஸ். அனுப்பப் போறாங்கன்னு சொன்னேன். ஆனா, நம்ம பார்லிமெண்ட் விவகாரத்துறை அமைச்சர் குலாம் நபி ஆசாத், தே.ஜ. தலைவர்கள் வீட்டுக்குத் தன் வீட்டுத் தோட்டத்தில் காய்ச்ச சீமை இலந்தை பழங்களை அனுப்பியிருக்காரு. எதுக்கு? ஒண்ணுமில்ல... 'யப்பா... எல்லாரும் கோபத்தை விட்டுட்டு, பழத்தைக் கடிச்சிட்டு சபைக்கு வாங்க. வெறும் சபைல நாங்க மட்டும் விட்டத்தை பாத்துட்டு உட்கார முடியாது. நீங்களும் வந்திங்கன்னா, ஏதாவது சண்டை போடலாம். பொழுது போவும்'னு சொல்லத்தான். என்னத்த சொல்ல! பதிலுக்கு அவுக ஆசாத் வீட்டுக்கு 'அல்வா' அனுப்பாம இருந்தா சரிதான்!



• குலாம் நபி ஆசாத்

ரெண்டு ரூபா மணியார்டர்!

"**அ**ந்தமான் அரசு சுனாமி நிவாரண நிதியை பாதிக்கப்பட்டவங்களுக்கு அனுப்பிட்டு வருது. நான்கவுரி தீவுல ஒரு பெண்மணிக்கு நிவாரண நிதி வந்துச்சு. கையெழுத்து போட்டு மணியார்டரை வாங்கினா, அந்த அம்மாவுக்கு செம அதிர்ச்சி. என்ன? மணியார்டருல வந்தது வெறும் ரெண்டு ரூபா. "ச்சீ...த்தூ... நீயே வைச்சுக்கோ''ன்னு திருப்பி மணியார்டரை அனுப்பிடுச்சாம் அந்த அம்மா. நியாயம்தானே! சுனாமி கொடுத்த அதிர்ச்சியைவிட, அரசு கொடுக்குற அதிர்ச்சி பெருசால்ல இருக்கு!

புதுடெல்லியில பீம்சிங், ஒரு பெரிய கடையில் பிரபல பிராண்ட் ரெடிமேட் பேண்ட் வாங்கிப் போட்டுட்டு, ஷோக்கா ஒரு கண்ணாலத்துக்குப் போயிருக்காரு. ஒரு நாற்காலியில உட்காரும் போது பேண்ட் 'ட்டர்' ஆயிடுச்சு. சிங்குக்கு அவமானமாப் போயிடுச்சு. கடைக்காரன் பேண்ட்டை மாத்தித் தந்துட்டாலும், சிங் நுகர்வோர் கோர்ட்டுல கேஸ் போட்டுட்டாரு. 'கஸ்டமர் சரியா பேண்ட்டை கையாளல, அதான் கிழிஞ்சிடுச்சு'ன்னு கடைக்காரன் கோர்ட்ல சொல்ல, 'யோவ், அவர் என்ன பேண்ட்டை போட்டுட்டு மலையேறவாப் போனாரு, கண்ணாலத்துக்குதானே போனாரு. மருவாதையா 5000 ரூபா நஷ்ட ஈடு கொடு'ன்னு கோர்ட்டுல தீர்ப்பாயிடுச்சாம். ஸோ... நுகர்வோரே... எதுலயும் உங்க உரிமையை விட்டுக் கொடுக்காதிங்க!

ஓ.கே. நம்ம வண்டி காஞ்சிபுரம், கும்மிடிப்பூண்டின்னு ஒரு ரவுண்ட் அடிக்கக் கிளம்பிடிச்சு. இப்ப அங்கதானே வாரப் பத்திரிகைகளைவிட அதிக இலவசப் பொருட்கள் கொடுக்கறாங்க. போய் அள்ளிட்டு வாரேன். ஹலோ... என் கழுத்துல உள்ள செயினை 'ஆதிகேசவன் கொடுத்ததா?'ன்னு சந்தேகமாக பாக்காதிங்க. இது என் கேர்ள் ஃப்ரெண்ட் 'மாயாவதி' கொடுத்தது. ○



"இந்த வருடம் கல்யாணம்!"

'பிரசாந்தும் உமாவும் திருமணம் செய்துகொள்ளப் போகிறார்கள்' - இதுதான் கோலிவுட்டின் லேட்டஸ்ட் டாக். ஆனால், இருவருமே இது பற்றிய கவலையின்றி, அவரவர் வேலையைப் பார்த்துக் கொண்டிருக்க, பிரசாந்தையும் உமாவையும் தனித்தனியே சந்தித்துப் பேசினோம்.

தமிழ் சினிமா உங்களை முழுமையாகப் பயன்படுத்தவில்லை என்கிற வருத்தமிருக்கிறதா?

"நான் வொர்க் பண்ணின ஒவ்வொரு டைரக்டரும் அவங்க கதைக்கு ஏத்த மாதிரி என்னை மோல்டு பண்ணிப் பயன்

பெரிய ஹீரோக்களின் ஜோடியாக நடிக்காமல் தங்கையாக நடிக்க எப்படி ஒப்புக்கொள்கிறீர்கள்?

"தமிழ் சினிமாவிலுள்ள பிரச்னையே இது மாதிரி நாம் வித்தியாசமாக செய்யும் பொழுது தொடர்ந்து அதே மாதிரி வேடங்களாகக் கொடுப்பதுதான். பன்னிரண்டு வயது மகனுக்கு அம்மாவாக 'தென்றல்' ஹீரோயின் கேரக்டர், பல முன்னணி நடிகைகள் நடிக்க மறுத்த பிறகுதான் எனக்கு வந்தது. ஆனால் 'தென்றல்' ரிலீஸான பிறகு அதே மாதிரி எத்தனை கேரக்டர்கள் என்னைத் தேடி வந்தன தெரியுமா? இவங்ககிட்ட எல்லாம் எப்படிச் சொல்லி புரிய வைக்கிறதுன்னே எனக்குப் புரியலை."

உங்களைப் போன்ற தமிழ் நடிகைகள், தமிழில் புறக்கணிக்கப்படுகிறார்களே...?

"நமது கலாசாரம், பண்பாடு வேறு. என்னதான் தமிழ் சினிமாவுக்குள் நுழைந்து விட்டாலும், மும்பை நடிகைகள் போல் எதற்கும் தயாராக எங்களால் இருக்க முடியாது. எங்களை விட மும்பை கிளாமர் ஆர்ட்டிஸ்டுகளுக்குத்தான் அதிகப் பணம், பேர், புகழ் என்றாலும், இந்த நிலையில்லா கிளாமருக்கு எத்தனை நாள் மதிப்பு என்று பார்க்கத்தானே போகிறோம்"

தென்றல் படம் திருப்தியளித்ததா?

"சுமித்ரா அம்மா என்னை நல்லா திட்டினாங்க. படம் இவ்வளவு எமோஷனலா, சோகமா இருக்கும்னு அவங்க

படுத்தியிருக்காங்க. இவ்ளோ நாள் டைரக்டர்ஸை நம்பி என்னை ஒப்படைச்சிருந்தேன்... இனிமே என் திறமையை நானே வெளிக் கொண்டு வரும் முயற்சியில் இறங்கியிருக்கேன்."

வாரிசு நடிகராக இருப்பது பலமா, பலவீனமா...?

"தாய் எட்டடின்னா குட்டி பதினாறடி பாயணும்னு எதிர்பார்ப்பாங்க. சில சமயங்கள்ல 'இவரு பையனா... அப்போ இப்படித்தான் நடிப்பாரு...'ன்னோ, இல்ல, 'இப்படித்தான் நடிச்சாகணும்'னோ ஒரு முத்திரை விழுந்துரும். அப்படி விழுந்துடாம பார்த்துக்கறது சவாலான விஷயம்..."

கதைத் தேர்வுக்கு அப்பாவின் உதவி இன்னமும் தேவைப்படுகிறதா...?


"நிச்சயமா... நிறைய படங்கள் பண்ணியிருந்தாலும் கூட, அப்பா ஒரு கதையைக் கேட்டு, ஓ.கே. சொல்லும்போது, கூடுதல் திருப்தியோட ஓர்க் பண்ண முடியும். ஒரு ரிசர்ச் ஸ்டுடண்ட் எவ்வளவுதான் படிச்சவனா இருந்தாலும் கூட, அவனுக்கும் ஒரு கைடு தேவைப்படுது இல்லையா... அதுமாதிரி தான் எனக்கு எதிர்பார்க்கவேயில்லை. இனிமேல் தென்றல் மாதிரியான கஷ்டமான சப்ஜெக்ட்டிலெல்லாம் நடிக்கவே வேண்டாம்னு நல்லா டோஸ் விட்டாங்க. எனக்கு தங்கர்பச்சான் சார் கதை சொல்லும் போது என் கேரக்டர் பத்தி சொன்னாரே தவிர, இவ்வளவு சமூகப் பிரச்னைகளைச் சொல்லும் சீரியஸான படம்னு சொல்லலை."

ரிலீஸாகவிருக்கும் உங்களின் 'அடைக்கலம்' படம் பற்றி?

"அடைக்கலம் பொழுதுபோக்கான படமல்ல. நம் அன்றாட வாழ்க்கையில் நடைபெறும் சம்பவங்களின் எமோஷனல் ட்ராமா. இதில் பிரசாந்துடன் நடிக்கிறேன். அவர் ரொம்ப ஜாலியான ஆளு. எல்லோரிடமும் கலகலப்பாகப் பேசுவார். தமிழ் சினிமாவில் "நான் இன்றைக்கு

"காதல் வரலாம்!"





எங்க அப்பா."

கைவசமுள்ள படங்கள்?

"இப்போ அடைக்கலம் ரிலீசாகப் போகுது. அதற்கடுத்து அருண் வெட்ஸ் ஹரிணி, போலீஸ், கைதி, சக்கரை, டாக்ஸி டிரைவர்னு தொடர்ந்து வரப்போகுது."

அடைக்கலம் குறித்து..?

"குக்கிராமத்தைச் சேர்ந்த ஒரு மிடில் கிளாஸ் பையன் கேரக்டர்ல வர்றேன். படத்துல ஹீரோயினே கிடையாது. அப்பா, அம்மா, அண்ணன், தங்கை, அத்தை, மாமா இவங்களுக்குள் நடக்கிற உணர்ச்சிப் போராட்டங்கள் தான் கதை. முக்கியமான விஷயம், உமா ரொம்பப் பிரமாதமா நடிச்சிருக்காங்க."

"ஐஸ்வர்யாராய், சிம்ரன் மாதிரிதான் உமாவும்."

உங்களுக்கும் நடிகை உமாவுக்குமான காதல் குறித்து...

"முடிவே பண்ணிட்டீங்களா? ஐஸ்வர்யாராய், சிம்ரன் கூட எப்படிப் பழகினேனோ, அப்படித்தான் உமா கூடவும் பழகினேன். ஒரு படத்தோட ஷூட்டிங் முடிஞ்சுடுச்சுன்னா, அந்த யூனிட் கூட நான் அதிகமா பேசறதில்ல... அடுத்த ப்ராஜக்ட் பத்தி சிந்திக்க ஆரம்பிச்சிடுவேன். உமா கூட பேசியே அஞ்சு மாசம் ஆயிடுச்சு... இந்த சமயத்துல இப்படி வதந்தி கிளம்புறது அதிர்ச்சியாயிருக்கு. எல்லாத்துக்கும் முற்றுப்புள்ளி வைக்க இந்த வருஷத்துலயே என் கல்யாணம் நடக்கப் போகுது. அவசியம் வந்துடுங்க."

- **முராரி**

படம்: **ஸ்ரீஹரி**

இறக்கத்தில் இருந்தாலும் அடைக்கலம் போன்ற படங்கள் நிச்சயம் என்னை ஏற்றிவிடும் என்று நம்புகிறேன்."

காதல் வலையில் விழுந்ததுண்டா?

" 'தென்றல்' ஹீரோயின் போல எனக்கும் ஒன்பதாவது படிக்கும்போது நடிகர் அரவிந்தசாமி மீது க்ரேஸ் இருந்தது. இதை அம்மாவிடம் சொன்னபோது ஷாக் ஆனாங்க. வயசுக்கேத்த மாதிரி நடந்துக்கோன்னு அன்னைக்கு செம அட்வைஸ். மற்றபடி காதல் வலையிலெல்லாம் மாட்டினதில்லை."

"பாவம் பிரசாந்த்!"

ஆமாம், பிரசாந்துக்கும் உங்களுக்கும்...

"ஆரம்பிச்சுட்டீங்களா... என் மேல, யாருக்கு என்ன கோபம்னு தெரியலை. நான் குற்றாலத்துல ஒரு ஷூட்டிங்ல இருந்த போதுதான் இப்படியொரு கிசுகிசு கிளம்பியிருக்கறதா சொன்னாங்க. காதல் எப்ப வேணா, எப்படி வேணா வரலாம். ஆனா இப்ப எனக்கு வரல. கேட்டவுடன் சிரிப்புதான் வந்தது. உடனே மறுப்பு சொல்லிடுன்னு எல்லோரும் பதைபதைச்சாங்க. எனக்கு அது தேவையேயில்லை. என் மடியில எந்த கனமும் கிடையாது. செட்ல நானும் பிரசாந்தும் ஜாலியா சிரிச்சு பேசினதை யாரோ தவறா நினைச்சுட்டாங்க. இதுல பாவம் பிரசாந்த்தான். இத்தனைக்கும் 'அடைக்கலம்' ஷூட்டிங் எப்பவோ முடிஞ்சாச்சு. அவர்கிட்ட பேசியே ரொம்ப நாள் ஆகுது. சாதனை பண்ண வேண்டியது நிறைய இருக்கு. அதுக்கு முன்னாடி திருமணம் இல்ல."



- **சநகன்**

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி 2005



படைப்பாளிகளே,
வாசக எழுத்தாளர்களே!
நீங்கள் அனைவரும் ஆவலோடு
எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்
சிறுகதைப் போட்டி வந்தே விட்டது!

முதல் பரிசு - ரூ.10,000
இரண்டாம் பரிசு - ரூ. 7,500
மூன்றாம் பரிசு - ரூ. 5,000

தவிர, பிரசுரத்துக்குத் தேர்வாகும் ஒவ்வொரு கதையும் ரூ. 500 சன்மானம் பெறும்.

எழுதுபவர் முப்பத்தைந்து வயதுக்குட்பட்டவராகவோ அல்லது அறிமுக எழுத்தாளராகவோ இருந்தால் சிறப்புப் பரிசு உண்டு. மற்ற நிபந்தனைகள் வழக்கமானவை.

விதிமுறைகள்:

- கல்கியில் 4 பக்கங்களுக்கு மிகாமல் இருப்பது நல்லது.
- சொந்தக் கற்பனைதான் என்பதற்கு உறுதிமொழிக் கடிதம் வேண்டும். அது இல்லாத கதைகள் பரிசீலிக்கப்பட மாட்டா.
- அறிமுக எழுத்தாளர் எனில், இதற்கு முன் எந்தப் பத்திரிகையிலும் எழுதியதில்லையென்றும், போட்டி முடிவு வெளியாகும் வரை எழுதுவதில்லை என்றும் உறுதிமொழி தர வேண்டும்.
- படைப்பாளி முப்பத்தைந்து வயதுக்குட்பட்டவர்தான் என்பதற்கான ஏதாவதொரு அத்தாட்சி (பத்தாம் வகுப்பு டி.சி ஜெராக்ஸ் போன்றவை) கண்டிப்பாக இணைக்கப்பட வேண்டும்.
- முழு வெள்ளைத்தாளில் ஒரு பக்கத்தில் மட்டுமே எழுத வேண்டும்.
- தேர்வாகாத கதைகளைத் திரும்பப் பெற, போதிய தபால் தலைகள் ஒட்டிய அஞ்சல் உறை இணைக்கப்பட வேண்டும். பின்னால் தனியே அனுப்பிப் பயனில்லை.
- ஒருவரே எத்தனை கதைகள் வேண்டுமானாலும் அனுப்பலாம்.
- போட்டிக்கு அனுப்பும் கதையை, முடிவுகள் வெளியாகும்வரை வேறு இதழுக்கோ, இணையதளத்துக்கோ, போட்டிக்கோ அனுப்பக் கூடாது.
- பரிசுக்குரிய கதைகளை நடுவர் குழு பரிசீலித்துத் தேர்ந்தெடுக்கும். சந்தேகம் எழும் விஷயங்களில் கல்கி ஆசிரியரின் தீர்ப்பே இறுதி.
- முடிவு வெளியாகும்வரை, எவ்வித கடிதப் போக்குவரத்தோ, தொலைபேசி விசாரிப்புகளோ கூடாது.
- 'அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி - 2005' என்று உறையின் மேல் தவறாமல் குறிப்பிட்டு, அனுப்ப வேண்டிய முகவரி:

ஆசிரியர், கல்கி, கல்கி பில்டிங்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 032

- கதைகள் வந்து சேர கடைசி தேதி : ஜூன் 15
- போட்டி முடிவும் முதல் பரிசுக் கதையும் ஆகஸ்ட் 1 ஆண்டு மலரில் வெளியாகும்.

படைப்பாளிகள், வாசக எழுத்தாளர்கள் அனைவரும் உற்சாகத்துடன் கலந்து கொண்டு சிறப்பிக்க அழைக்கிறோம்.

- ஆசிரியர்

மறைந்தார்

'காசேதான் கடவுளடா' என்று ஒரு படம் தயாரித்தோம். முழுக்க முழுக்க என் சகோதரர் முருகன் பொறுப்பேற்றிருந்த ப்ராஜக்ட் அது. மனோரமா, முத்துராமன் நடித்த முழு நீள காமெடிப் படம். உதவி இயக்குனராக இருந்து வந்த 'சித்ராலயா' கோபு, இயக்குநராகப் பணியாற்றிய முதல் படம்.

அந்தப் படத்தில் நகைச்சுவைக் காட்சிகள் நன்றாக அமைந்தன. கொஞ்சம்கூட ஆபாசக் கலப்பே இல்லாத, அனைவரும் பார்த்து ரசித்து மகிழும்படியான ஒரு தரமான காமெடிப் படமாக அது உருவானது.

'ஜம்புலிங்கமே ஜடாதரா' என்ற பாடல், அந்தப் படத்தில் மிகவும் பாப்புலராகி, ரசிகர்களின் அமோக ஆதரவைப் பெற்றது.

அதற்குப் பிறகு தெலுங்கில் ஒரு படம், ஹிந்தியில் ஒரு படம் எடுத்தோம். இரண்டுமே சரியாகப் போகவில்லை. அதைத் தொடர்ந்து எப்படியோ எங்கள் படத் தயாரிப்பில் ஒரு தொய்வு ஏற்பட்டது. படம் எடுக்காமல் பெரிய இடைவெளி விழுந்தது.

ஒரு நாள் ஏதோ அலுவல் தொடர்பாக நான் காலை விமானத்தில் பம்பாய் சென்று, மாலை விமானத்தில் சென்னை திரும்பினேன். அன்று விமானம் தாமதமாக சென்னை வந்தது. வீட்டுக்கு வரும்போது இரவு பத்தே கால் மணி இருக்கும்.

"நீங்க எப்ப வந்தாலும் அப்பச்சி உங்களை வந்து பார்க்கச் சொன்னார்" என்று என் மனைவி லட்சுமி தகவல் சொன்னாள்.

"இன்னேரம் அப்பச்சி தூங்கிட்டிருப்பாரே" என்றேன்.

"இல்லை... எந்நேரம் ஆனாலும் வந்து பார்க்கச் சொன்னார்" என்று வலியுறுத்திச் சொன்னார்.

நாங்கள் இப்படிப் பேசிக் கொண்டிருந்தபோது, என் தந்தையின் தனி உதவியாளர் மாணிக்கம் வந்து, "நீங்க வந்தாச்சான்னு அப்பச்சி என்னைப் பார்த்துட்டு வரச் சொன்னார்" என்றார்.

"அவர் இன்னும் தூங்கலியா?"

"இல்லை. உங்களுக்காகத்தான் காத்திருக்கிறார்."

'என்ன, இவ்வளவு

• 'புன்னமிநாகு' படத்தில்...



நினைவுகள்..... ஏவி.எம். சரவணன்

அப்பச்சி! 28

அந்த அதிர்ச்சியிலிருந்து...



சீரியஸாக அப்பச்சி என்னைக் கூப்பிடுகிறாரே' என்று விவரம் புரியாமல் உடனே சென்றேன். ஒரே வளாகத்தில் என் வீட்டுக்கு எதிர் வீடுதான் அப்பச்சி வீடு.

நான் அங்கே போனபோது, அப்பச்சியின் அறையில் என் தாயார், சகோதரர் குமரன், இளையவர் பாலு மூவரும் உட்கார்ந்திருந்தார்கள்.

"நாம படம் எடுத்து நாளாச்சுப்பா... படம் எடுக்கணும்" என்று ஆரம்பித்தார் அப்பச்சி.

''இப்ப நம்மோட எல்லா பிஸினஸும் நல்லாத்தானே போய்க்கிட்டிருக்கு அப்பச்சி... நல்லாத்தானே இருக்கோம்'' என்றேன்.

''இருக்கலாம்ப்பா... ஆனா நாம சினிமா எடுத்துத்தான் வாழ்க்கையில இந்த அளவுக்கு முன்னுக்கு வந்திருக்கோம். அதை மறந்துடக் கூடாது. சினிமாவில் நமக்கு நஷ்டம் வர்ற வரைக்கும் நாம சினிமா எடுக்கறதைத் தொடர்ந்து செய்யணும்'' என்றார் என் தந்தை.

உடனே நாங்கள் அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டோம்.

கே.பாலசந்தரைச் சந்தித்து அவருடன் பார்ட்னர்ஷிப்பில் ஒரு படம் எடுக்கலாம் என்பது குறித்துப் பேசினோம். படம் தொடர்பான எல்லா விஷயத்தையும் அவரது முடிவுக்கே விட்டுவிடவும் தயாராக இருந்தோம்.

இன்னொரு பக்கம் அப்போது மிகவும் பாப்புலராக வளர்ந்து வந்த இயக்குனர் பாரதிராஜாவின் இயக்கத்தில் ஒரு படம் தயாரிக்கலாம் என்று அவரை அப்பச்சியிடம் கூட்டிப் போனோம். அப்பச்சியே அவருக்கு 'அட்வான்ஸ்' கொடுத்தார்.

அந்தப் படத்தில் 'கமல்ஹாசன்' நடிக்க வேண்டும் என்று அவரையும் அழைத்து, அப்பச்சி

கையால் அட்வான்ஸ் தந்தோம்.

ஆனால், அந்தத் திட்டங்கள் எதுவும் சரியாக 'ஒர்க் அவுட்' ஆக வில்லை.

ரஜினிகாந்த், எஸ்.பி. முத்துராமன் காம்பினேஷனில் படம் எடுக்கலாம் என்று ஒரு ஐடியா தோன்றியது. அதை அப்பச்சியிடம் சொன்னபோது, 'ஏம்ப்பா, நான் படம் எடுக்கணும்னுதான் சொன்னேனே தவிர, இவங்களை வச்சித்தான் எடுக்கணும், இவங்களை வச்சி எடுக்கக்கூடாது என்றெல்லாம் சொல்லவியே... ரஜினியை வச்சி தாராளமா எடுங்க... நீ போய் அவரிடம் பேசு' என்றார்.

பஞ்சு அருணாசலத்தின் கதை ஒன்றை ரஜினிக்காக முடிவு செய்தோம். 'முரட்டுக் காளை' என்று பெயர் வைத்தோம். எல்லாம் ஒன்று சேர்ந்து வந்தபோது, 1979, ஆகஸ்ட், பன்னிரண்டாம் தேதி அப்பச்சி காலமாகிவிட்டார்.

அந்த அதிர்ச்சியிலிருந்து வேகமாக மீள எங்களால் முடியவில்லை. 'படம் எடுக்க வேண்டும்' என்று ஒரு பெரிய இடைவெளிக்குப் பிறகு எங்களைத் தூண்டிவிட்டவர் அவர். அப்படி நாங்கள் எடுக்கும் படத்தைப் பார்க்க அவர் இல்லை என்ற சோகம் எங்களை மிகவும் வருத்தியது.



• நாகிரெட்டியுடன் நான்...

இருந்தாலும் அப்பச்சி இறந்த ஒரு வருடத்திற்குள் புதிய படத்தை ரிலீஸ் செய்துவிட வேண்டும் என்று முடிவு செய்து அதற்காகத் திட்டமிட்டோம்.

ஆனால், எதிர்பார்த்த வேகத்தில் 'முரட்டுக் காளை' வளரவில்லை. நான்கைந்து படங்களில் ரஜினி அப்போது நடித்துக் கொண்டிருந்தார். எவ்வளவு முயன்றும் பணி அழுத்தம் காரணமாக அவரால் எங்களுக்குச் சரியாக கால்ஷீட் தர இயலாமல் போனது. எனவே படத் தயாரிப்பு தாமதமாவதை எங்களால் தவிர்க்க முடியவில்லை.

அந்த நிலையில்தான் எம்.ஏ. காஜாவின் 'பௌர்ணமி நிலவு' என்ற படத்தைப் பார்த்தோம். எங்களுக்குப் பிடித்திருந்தது. காஜாதான் தயாரிப்பாளர். மணி என்றழைக்கப்பட்ட ராஜசேகரும், இராம.நாராயணனும் படத்தின் உதவி இயக்குனர்கள். இதை தெலுங்கில் எடுப்பது என்று தீர்மானித்தோம். தமிழில் உதவி இயக்குநராக இருந்த ராஜசேகரை, தெலுங்குப் படத்துக்கு இயக்குநராக அமர்த்தினோம். தமிழில் நடித்திருந்த விஜயனையே தெலுங்கிலும் நடிக்கக் கேட்டோம். ஆனால், அவரால் அப்போது நடிக்க முடியாமல் போனது. பிறகு சிரஞ்சீவியை ஒப்பந்தம் செய்தோம். அவர்

எங்களுக்கு மிகவும் ஒத்துழைப்பு கொடுத்தார். கால்ஷீட் என்று முறையான அக்ரிமெண்ட் ஏதுமில்லாமல் தினமும் இரவில் வந்து எங்களுக்கு நடித்துக் கொடுத்தார். படம் முடிந்துவிட்டது. தெலுங்கு பௌர்ணமி நிலவுக்கு 'புன்னமிநாகு' என்று பெயர் வைத்தோம். படத்தை சென்ஸாருக்கு அனுப்பினோம். தணிக்கைக் குழுவில் இரண்டு பேர் அந்தப் படத்திற்கு 'ஏ' சான்றிதழும், இரண்டு பேர் 'யு' சான்றிதழும் தரப் பரிந்துரைத்தார்கள். தணிக்கைக் குழுத் தலைவர் ஏதாவது ஒன்றுக்கு வாக்களித்து மெஜாரிட்டியின்படி 'ஏ' அல்லது 'யு' முத்திரை குத்தியிருக்கலாம். ஆனால், அவர் அப்படிச் செய்யாமல் 'ரிவைஸிங் கமிட்டி'க்கு பரிந்துரை செய்து ஃபைலில் எழுதிவிட்டார்.

அப்போது ரிவைஸிங் குழுவில் மூன்று பேர் இருந்தார்கள். கி.வா.ஜகன்னாதன் அவர்கள், டெல்லியிருந்து ஓர் உறுப்பினர் மற்றும் நாகிரெட்டியார்.

கி.வா.ஜ. அவர்களுக்கு உடல்நலம் சரியில்லை. மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். எனவே அவர் வந்து படத்தைப் பார்க்க முடியாத நிலை. டெல்லியைச் சேர்ந்த உறுப்பினரும் வரவில்லை.

நாகிரெட்டியார் ஒருவர்தான். ஆனால், அவரது மூத்த மகன் பிரசாத் இறந்து மூன்று நாட்கள்தான் ஆகியிருந்தன. அவர் வந்து படம் பார்ப்பார் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்? இப்படியோர் இக்கட்டான நிலை. அதே சமயம் என் தந்தையின் முதலாண்டு நினைவு நாளுக்குள் படத்தை ரிலீஸ் செய்தாக வேண்டிய 'சென்ட்டிமென்ட்' எங்களுக்கு.

படம் சென்ஸாராகாமல் தாமதமாகிக் கொண்டிருந்ததால் 'என்ன உங்க படம் வருதா இல்லையா? வரலேன்னா நாங்க வேறு படம் ஃபிக்ஸ் பண்ணிக்கலாமா?" என்று தியேட்டர் அதிபர்கள் என்னை ஃபோனில் கேட்டுக்கொண்டே இருந்தார்கள்.

ஒரு நாள் எனக்குத் தொலைபேசியில் தகவல் ஒன்று வந்தது.

(தொடரும்)

"நீ நல்லாவே இருக்கமாட்டே!"

'கோலங்கள்' ஆதித்யாவை அவ்வளவு சுலபமாக யாரும் மறக்க முடியாது. 'அபி' தேவயானியை விரட்டி விரட்டி டார்ச்சர் கொடுக்கும் கேரக்டரில் நடித்ததன் மூலம், தமிழகத் தாய்மார்களின் சாபத்தை மொத்தமாய் அள்ளியவர். ஒரு எமகண்டப் பொழுதில் இந்த வில்லனைச் சந்தித்துப் பேசினோம்.

"என் சொந்தப் பேரு அஜய்... ஆனா 'ஆதித்யா'ன்னு சொன்னாத்தான் எல்லாருக்கும் புரியுது... டெல்லியில் பிறந்த ஒரு பஞ்சாபி. ஏற்கெனவே அக்னிசாட்சி, சலனம்னு ரெண்டு சீரியல்ல நடிச்சிருக்கேன். இப்போ செல்வி, கோலங்கள்ல நடிச்சிட்டு இருக்கேன்."



சினிமாவில் செகண்ட் ஹீரோவாக நடித்து வந்தீர்களே...

"ஆமாம். முதல்ல ஹிந்தியிலதான் சினிமா வாய்ப்பு கிடைச்சது. அதுல ஜாக்கி ஷெராஃப்க்கு பிரதரா நடிச்சேன். அப்புறம் தமிழ்ல ஊட்டி, நேசிக்கிறேன், சாக்லெட் மாதிரி படங்கள்ல நடிச்சிருந்தாலும், லண்டன் மாப்பிள்ளை, ஹீரோவோட ஃப்ரெண்ட் கேரக்டர்தான் தொடர்ந்து கிடைச்சது. அதெல்லாம் பண்ணினா வேலைக்கும் ஆகாது, பணமும் பண்ண முடியாதுன்னுதான் சீரியல் பக்கம் வந்துட்டேன்."

'ஓவர் ஆக்டிங் பாய்' என்று உங்கள் மீது குற்றச்சாட்டு உள்ளதே...?

"கோலங்கள்ல வர்ற ஆதி கேரக்டரை மும்பைலேர்ந்து வந்த பிஸினஸ்மேன், அதுவும் திமிர்பிடிச்ச, பிடிவாதம் பிடிச்ச கேரக்டரா சித்திரிச்சிருக்காங்க. ஸோ, அதுக்கேத்த வாய்ஸ் மாடுலேஷன் தேவைப்படறதால அப்படி நடிக்க, பேச வேண்டியிருக்கு. இதை 'டு மச்'னு சில பேர் சொல்றாங்க. சில பேர் சொஃபஸ்டிகேட் கேரக்டர்னும் பாராட்டறாங்க. எப்படியோ அந்த கேரக்டர் பேசப்படுதுல்ல... அதுவே போதும்..."

எதிர்காலம்?

"ஒரு நல்ல ஸ்க்ரீன் ப்ளே ரைட்டரா வரணும்ங்கறது என்னோட ஆசை... இப்போ என்கிட்ட நிறைய ஸ்கிரிப்ட் இருக்கு. ஆனா அதைச் சொன்னா நம்ப மாட்டாங்க... அதனால காலம் கனியற வரைக்கும் வெயிட் பண்ணுவேன்."

கோலங்கள் வில்லன் கேரக்டருக்காக மக்கள் உங்களை திட்டுறாங்களே?

"கொஞ்ச நஞ்சமில்ல. நிறையவே வாங்கறதுண்டு. "ஏண்டா, இந்த அபியை பாடாப் படுத்தறே... உனக்கு அவ என்ன துரோகம் பண்ணின்னா... நீ நல்லாவே இருக்க மாட்டே!"ன்னு மக்கள் ரொம்ப 'அன்பா' திட்டுறப்போ, என் கேரக்டர் ஜெயிகடுச்சுன்னு சந்தோஷமா சிரிச்சுக்கிட்டே நகர்ந்துடுவேன்."

- கலை

சந்திப்பு---

பாவண்ணன்

எனது ஜன்னலுக்கு வெளியே
பச்சைப்பசேலென அடர்ந்த தோப்பு
கம்பளம்போல நெளிந்தாடுகிறது
ஏராளமான பறவைகள்
அந்த விரிப்பின்மீது சுதந்தரமாகப் பறக்கின்றன
அவற்றின் குரல் எனக்குக் கேட்கவில்லை
அதன் சிறகடிப்பிலிருந்து
அவை மகிழ்ச்சியாக இருப்பதை அறிகிறேன்

ஒரு தாயின் பரிவுடன் நெருங்கும்
குளிர்ச்சியான காற்று
என்னை ஆழ்ந்த அன்புடன் தழுவுகிறது
பனிக்கட்டியின் ஈரத்தைப்போல
அதன் விரல்நுனியில்
சொட்டிக் கொண்டிருக்கிறது ஆனந்தம்

ஒரு நொடி அணைத்து விளையாடுகிறது
மறுநொடி எதிர்ப்புறம் நகர்ந்து
இடம்மாறி இடம்மாறி
என்னைப் பார்த்து புன்னகைக்கிறது
அடுத்தமுறை சந்திக்க வந்தால்
அடையாளம் தெரியுமா என்று கேட்கிறது
எனக்காக ஒரு பாடலை
இசையுடன் முணுமுணுக்கிறது
எவ்வளவு அன்பானவன் நீ என்றபடி
என் விரல்களைப் பற்றுகிறது
சுற்றிச்சுற்றி வந்து
ஏராளமான சொற்களை இறைக்கிறது

புத்துணர்ச்சிக்காக
ஒரு தேநீர் வரவழைத்து அருந்துகிறோம்
பொழுதுபோவது தெரியாமல்
எதிரும் புதிருமாக அமர்ந்து
நெடுநேரம் உரையாடுகிறோம்

இரவு கவிந்த வேளையில்
கைகுலுக்கி விடைபெற்றுக் கொள்கிறோம்
அது இனிமையின் விளிம்புக்கும்
நான் வாழ்வின் புழுக்கத்துக்கும்



காது குத்தாதீங்க!



வேனிற்காலம் வந்துவிட்டது; இனிமேல் சிநேகிதர்கள் சந்திக்கும்பொழுது பேசுவதற்கு விஷயம் இல்லாமல் விழிக்க வேண்டியதில்லை.

"என்ன, ஸார்! இந்த வருஷம் வெயில் எப்படி?"

"வெயிலாவது வெயில்; வறுத்து எடுக்கிறது, ஸார்!"

"வறுத்து எடுக்கிறதா? பொசுக்குகிறது என்று சொல்லுங்கள்."

"போன வருஷமே ஜாஸ்தி என்றால், இந்த வருஷம் அதைவிட ஜாஸ்தி."

இப்படி வருஷா வருஷம் சிநேகிதர்களின் சம்பாஷணையில் அதிகமாகிக் கொண்டு வரும் வெயில், இந்த வருஷம் கொஞ்சங்கூட சகிக்கமுடியாமல் இருக்கும் என்பதில் சந்தேகமேயில்லை. ஆகவே, கோடைக்கு எங்கே போகிறதென்னும் விஷயத்தைப் பற்றித்தான் அடுத்தபடி ஆலோசிக்க வேண்டும்.

சாதாரணமாக மூளை வேலை செய்கிறவர்களுக்கு வெயில் அதிகம் தாங்காது என்பது அனைவரும் ஒப்புக்கொண்ட விஷயம். இதை என்னுடைய கிராமப் பிரயாணங்களின்போது பிரத்யட்சமாய்க் கண்டறிந்திருக்கிறேன். வெயில் வேளையிலெல்லாம் மூளை வேலையில் சிறந்த அந்தப் பிராணிகள், ஒன்று நிழலில் படுத்து அசைபோட்டுக் கொண்டிருக்கும்; அல்லது குட்டையில் கண்ணை மூடிக் கொண்டிருக்கும். அப்போதெல்லாம் அவை அபாரமான மூளை வேலையில் ஈடுபட்டிருக்கின்றன என்பதைப் பற்றி யாதொரு ஆட்சேபணையும் இருக்க முடியாது.

ஆகையினால்தான் கோடை காலம் நெருங்கியதும் பெரிய பெரிய வக்கீல்கள், சர்க்கார் மந்திரிகள், நிர்வாக சபை மெம்பர்கள், ஸெக்ரடேரியட் உத்தியோகஸ்தர்கள், கலாசாலை ஆசிரியர்கள், பத்திரிகாசிரியர் முதலியோர், "கட்டு மூட்டை, கிளம்பு மலைக்கு!" என்று கோஷமிட்டுக் கொண்டு புறப்படுகிறார்கள். தேசத் தலைவர்களுக்குக் கூட இந்தச் சபலம் தட்டுவதுண்டு.

இப்படிக் கோடை காலத்தில் மூளையைக் குளிரப் பண்ணிக் கொள்வதில் நம்பிக்கையில்லாத ஒரே ஒரு தேசத் தலைவரை எனக்குத் தெரியும். அவருக்கு வெயில் என்றால் பரம ஆனந்தம். நல்ல வைகாசி மாதத்தில், கள்ளிக்கோட்டை ஓட்டுக்கடியில் உட்கார்ந்து வேலை செய்யும் போதுதான் அவருக்குப் பூரண உற்சாகம்.

"ஐயோ! இந்த வெயிலில் உட்கார்ந்து எப்படித் தான் வேலை செய்கிறீர்

களோ!" என்று கேட்டால், "வெயிலா? எந்த வெயில்? நம்மூர் வெயிலைத்தானே சொல்கிறீர்கள்? சுத்த சுதேசி வெயில் அல்லவா? உடம்புக்கு ரொம்ப நல்லதாயிற்றே?" என்பார். இன்னும் ஏதாவது சொல்லப் போனால், "என்ன? என்ன? நாம் இந்த ஊர் வெயிலில்தான் பிறந்தோம். இந்த ஊர் வெயிலில்தான் வளர்ந்தோம். நமது மூதாதையர் எல்லாரும் இந்த வெயிலில்தான் வாழ்ந்தவர்கள். திருவள்ளுவரும் கம்பரும் இந்த வெயிலில் வளர்ந்துதான் கவிதை எழுதினார்கள். அப்படிப்பட்ட வெயிலைக் குறை சொல்கிறீர்களே?" என்று உருக்கமாகக் கேட்பார்.



ஆனால், முன்னமே சொன்னது போல், இவர் ஒரு விதிவிலக்குதான். விதிவிலக்கை நம்பி வெயிலில் பொசுங்குவதற்கு நாம் தயாராயில்லை. ஆகவே, இந்தக் கோடைக்கு எங்கே போகிறதென்று தீவிரமாக ஆலோசிக்கத் தொடங்கினோம்.

நகரங்களில் எங்கே போனாலும் இந்த மாதமெல்லாம் இதே பேச்சுத்தான். நேற்று ஒரு 'பார்ட்டி'க்குப் போயிருந்தபோது பின்வரும் சம்பாஷணை காதில் விழுந்தது.

"ஏன், ஸார்! இந்தக் கோடைக்கு ஊட்டிக்குத்தானே போகிறீர்கள்?"

"இல்லை, நான் ஊட்டிக்குப் போகவில்லை."

"என்ன, கொடைக்கானலுக்குப் போகவில்லையா? சரிதான் பெங்களூருக்குப் போகிறீர்கள் போலிருக்கிறது."

"அதுவும் இல்லை."

"ஒரு வேளை குத்தாலமோ? குத்தாலத்தில் 'ஸீஸன்' ஜூலை மாதம் அல்லவா? அதுவரை என்ன செய்வீர்கள்?"

"இல்லை, ஸார்! இந்த வருஷம் நான் ஓரிடத்துக்கும் போகவில்லை."

"என்னைப் பார்த்துச் சொல்லுங்கள். ஓரிடத்துக்கும் போகவில்லையா? பின், கோடைக்கு எங்கே தங்குவீர்கள்?"

"இங்கேயேதான்."

"ஹா ஹா ஹா! ஸார்! அப்படி அடியுங்கோ ஒரு புளுகை! எனக்கா காது குத்தப் பார்க்கிறீர்கள்?"

ஆகவே, கோடைகாலத்தில் சென்னையில் வசிப்பது அவ்வளவு நம்பத்தகாத விஷயமாயிருப்பதால் எங்கே போவது என்பதைப் பற்றிக் கூடிய சீக்கிரம் நீங்கள் தீர்மானிப்பது அவசியம். இல்லாவிடில், நீங்கள் யோசித்து முடிப்பதற்குள் கோடை வந்து விட்டுப் போனாலும் போய்விடும்.

- கல்கி

களஞ்சியத்திலிருந்து
வானதி பதிப்பகம்

இந்தப் பேருலகில் எவனொருவன் அதீத மென்மையோடும் அதீத உண்மையோடும் வாழ்கிறானோ அவனுக்குக் காதலன் என்று பேர்.

ஒரு காதல் என்பது ஒரேயொரு காதலல்ல. அது பல நூற்றாண்டுகளைக் கடந்த புனிதம். மிக மிக மெலிதான இருட்டுப் பிரதேசத்துக்குள் ஓயாமல் பரவுகிற ஊதுபத்தி வாசனையை விட ரம்மியமானது. உச்சரிக்காமலேயே கைதட்டல் பெறுகிற உயர்ந்த கவிதை.

சொன்னால் தொலைந்துவிடுமோ என்னும் அச்சத்தால் சொல்லாமல் பொத்திவைத்த காதல் என்னுடையது. கை நிறையக் கோலப் பொடியிருந்தும் வீதியில் நின்று வரைவதற்கு எனக்கொரு வாசலில்லை. பேரம் பேசி பூ வாங்க முடிந்த ஒருவனுக்கு, கொடுக்க கூந்தலில்லாதது மாதிரியான உணர்வு இது.

பிறகெப்படித்தான் வாய்த்தது? வாய்த்தால்தான் ஒன்றை உணர முடியும் என்பதில்லை. வசதி வந்தால்தான் வாழ்வேன் என்றால், மரணத்தைத்தான் தழுவ நேரும். வந்தவரை லாபம் அனுபவம். படித்தது, கேட்டது, பார்த்தது இவற்றின் மூலமே இந்தக் காகிதக் கோப்பையை நிறைத்துவிடலாம். தாகத்தோடு நிற்கிற நீங்கள், இதன் சாற்றை சம்மதத்தோடு பருகுவீராக.

காதலின் தொடக்கம் ஸ்நேகிதம். இந்த ஸ்நேகித வனத்தைச் சுற்றிலும் திட்டுத்திட்டாய் முளைத்திருக்கின்றன

இனிப்பு தாவணியும்






5

-யுகபாரதி

கள்ளிச் செடிகளும் காட்டா மினுக்குகளும். கால்லப் பாதத்தில் அவை காயம் ஏற்படுத்திய போதிலும் சிரிப்பு தானியத்தால் தன்னை இப்பூமி செழுமையாக்கிக் கொள்கிறது. யாரோ ஒருத்தி தாவணியைக் காயப்போட்ட காரணத்தால், கப்பிக் கற்களுக்கும் கற்கண்டு சுவை கூடிவிட்டது.

1

அலை அலையாய் மனசு பொங்கிய ஓர் ஐப்பசி நாள். அடைமழையில்லை. ஆனாலும், நல்ல மழை. அப்போது அரசியல் வார இதழொன்றில் உதவி ஆசிரியராக பணிபுரிந்து கொண்டிருந்தேன். பதற்றமும் அதிருப்தியும் நிரம்பி வழிகிற முகத்தோடு ஒரு நாளைக் கடத்துவது எத்தனை சிரமம் என்று அனுபவபூர்வமாக உணர்ந்த காலங்கள் அவை.



சிரிப்பு தானியமும்!

'எங்கே போகலாம்' என்றான். 'கடற்கரைக்கு' என்றேன்.

பேருந்தில் ஏறிய பிறகு தான் தெரிந்தது, நாங்கள் பேசப் போவது எதிர்காலம் பற்றியல்ல... காதலைப் பற்றி என்று. எந்தக் காதல் அனுபவமும் இல்லாத இருவரால் எவ்வளவு நேரம் காதல் பற்றிப் பேச முடியும்? முடிந்தது.

நடத்துனர் இப்போதுதான் வேலைக்குச் சேர்ந்திருப்பார் போல. முகத்தில் இறுக்கமோ, சலிப்போ தென்படவில்லை. கறுத்த களையான முகம். கையில் மோதிரமும் கழுத்தில் சங்கிலியும் மின்னின. அதைவிடக் கூடுதல் வெளிச்சம் அவர் முகத்தில்.

''காதல் பெண்ணோடு

முடிந்து விடுவதல்ல...

பேரண்டத்தை நெகிழ்த்துவது!'

நடந்துகொண்டே பேசப் பிடிக்கும். பேசுவதற்காக நடையா, இல்லை நடப்பதற்காக பேச்சா எனத் தெரியாது. ஈரப் பிசுபிசுப்போடு, இயல்பான கரிசனத்தோடு ஒருவர் கிடைத்தால்போதும்... என் ஆவிப்பூட்டு சாவி இல்லாமலேயே திறந்து கொள்ளும். அப்படியொரு நாள் கிடைத்தது. நண்பன் சரவணனும் நானும் எதிர்காலம் குறித்து முடிவெடுப்பதாகத் திட்டம். எதிர்காலத்தை எந்தக் கொம்பனாலும் திட்டமிட முடியாது என அப்போது தெரியாது.

பாதி வழியில்தான் கவனித்தோம். அந்த வெளிச்சத்திற்குக் காரணம் பேருந்தில் அமர்ந்திருக்கிற ஓர் அகல்விளக்கென்று. அரும்பிய காதலில், அந்தப் பெண் மஞ்சள் முகத்தில் குங்குமத் தீற்றலோடு குனிவதும் நிமிர்வதுமாய் இருந்தாள். வசதியாக வாழ்பவன்போல. உடையும்

செய்கைகளும் இவற்றை உணர்த்தின.

எங்கள் கவனத்தை அவர்கள் கவனிக்கவில்லை. நிறுத்தம்தோறும் சிலர் ஏறினார்கள். பலர் இறங்கினார்கள். விசில் சப்தத்தோடு வழிந்த அவனது குரலின் குழைவை விவரிக்க இயலாது.

கடற்கரையை பேருந்து நெருங்கிவிட்டது. அத்தனை பேர் இருந்த பேருந்து ஐந்து பேராகச் சுருங்கிவிட்டது. யாருமில்லை என்பதுபோல அருகில் அமர்ந்து இருவரும் பேசத் தொடங்கினார்கள். பேசினார்கள். பேசினார்கள். பேசிக்கொண்டே இருந்தார்கள். பேருந்து நின்றும் இறங்க மனமில்லாதவாறு கவனித்தோம். எங்களைக் கவனித்து, அவர்கள் இறங்கினார்கள்.

கால் புதைய விரிந்த கடற்கரைக்குள் புதைந்தார்கள். அந்தச் சிணுங்கலில், அந்த மிரட்டலில், அந்தக் கோலத்தில், அந்த நெருக்கத்தில் என்னென்னவோ தெரிந்தது.

கிடைத்த வாழ்வின் பூரணம், காதல் என்பதை முகத்தில் அறைந்தது போல. தாழ்வுகளை நீக்கும் தாத்பரியம் காதலுக்கு மட்டுமே உண்டென்பதுபோல. கறுத்த அழகில்லாதவனுக்கும் மலர்ச்சி கூடும் என்பதைப் போல. நிறையத் தோன்றின. அந்தக் காதலின் அத்தியாயங்கள் எதில் போய் முடிந்ததோ?


ஒரு நாளில் எத்தனையோ காதல் சம்பவங்கள் செய்தித்தாளில், தொலைக்காட்சியில், எதிரில், தெருவில். இத்தனையிலும் சரடுபோல தொங்கிக்கொண்டிருப்பது மனிதமல்லாமல் வேறென்ன?

அவர்களைப் பார்த்த பிறகுதான் தெளிந்தது. இதயப் புழுக்கத்தை விரட்ட வேண்டுமானால் காதல் வேண்டும். காதலைச் சொல்ல இயலாதவர்கள், காதலிக்கிறவர்களைத் தரிசித்தாலே போதும் மனம் லேசாகும். நான் பார்த்துக்கொண்டேயிருக்கிறேன். என் பார்வை அவர்களை உறுத்தாது. என் கண்கள் அவர்களைக் கௌரவிக்கப் பிறந்தவை. நட்பு மலர்களோடு அவர்கள் நடந்த சுவடுகளைக் கவிதைகளால் நிரப்ப வேண்டும். காதலர்கள் வாழ்வதன் மூலமே அரசும் அதிகாரமும் நிலைபெறும். யாரோ சொன்னதுபோல காதலிக்க முடிந்த ஒருவனால்தான் காலத்தை நடத்த முடியும். கடத்தல் கொடிது. நடத்தல் இனிது.

2

அருகில் நீயிருப்பதாய்
நினைத்துக் கொண்டு
தலையணையின்
இடது ஓரமாகவே
இருக்கிறது என் தலை
வலது ஓரத்தில்
உனக்கான என் காதல்

எப்போதும் இதயத்தில் ஓர் இடம்



காலியாகவே இருக்கிறது. அது யாருக்கோ உரியது. கடவுளுக்கு, தாய்க்கு, குழந்தைக்கு எனத் தனித்தனியான அறைகள். எல்லாவற்றிலும் மிகுந்திருப்பது காதல்.

அந்த இடத்தை வரப்போகிற காதலியாலும்கூட நிரப்ப முடியாது. ஏனெனில், அது ஊற்ற ஊற்ற நிறையாத அமுதக் கிண்ணம். அலமாரியில் உள்ள இடைவெளி போல, கண்ணாடிக்குப் பின்னிருக்கும் தனிமை போல, கூரைக்குள் விழுந்து குவியும் சூரிய வட்டம்போல.

தமிழ்!

டாக்டர் ராமதாஸின் அலுவலக அட்டெண்டர் உட்பட அனைவரும் தமிழில்தான் பேசுகின்றனர். ஆங்கிலம் கலந்து பேசினால் கூப்பிட்டு லெப்ட் அண்ட் ரைட் வாங்கிவிடுகிறார். தம்மை பேட்டி எடுக்க வரும் நிருபர்களிடம் அவர் வைக்கும் முதல் கோரிக்கை, 'தூய தமிழில் கேள்வி கேளுங்கள்.'

அண்ணாந்து பார்க்கும்
உயரத்தில் இருப்பதால்
நீ நிலவுதான்.
ஆனாலும், உன்னை நீ
உற்றுப் பார்க்கவும்
என்னிடம்தான் வர வேண்டும்
ஏனெனில்
கண்ணீரால் நிறைந்த குளம் நான்

இந்த உணர்வும் சிலாக்கியமும் காதலின் உன்னதத்தை மேலும் மேலும் மேன்மைக்கு இட்டுச் செல்லும். ஒரு கவிதை எழுதுவதைவிட எளிதானது காதலிப்பது என்றார் நண்பர் ஒருவர். அவரிடம் நான் சொல்வேன், காதலிப்பதைவிட சிறந்த கவிதை கிடையவே கிடையாது. கவிஞனாக அறியப்பட்ட ஒருவனுக்கு நேர்ந்த வர்ணனை மொழியல்ல இது.

வர்த்தகம், தொழில்நுட்பம், எவற்றைக் கடந்தும் தன் வீரியச் சிறகுகளை விரித்துக் கொண்டேயிருக்கிறது காதல். அதில், அணைவதும் அடுத்த அடுத்த எல்லைகளை வடிவமைப்பதும் நாமல்ல. ஒரு பெரிய அரியணையில் அமர்வதற்குத் தகுதியானதும் ஒருபோதும் தப்பாட்சி செய்யாததுமாகக் காதலைத் தேர்ந்தெடுக்கிற ஜனநாயகம் வீழவே வீழாது. காதலித்து மீந்த நேரங்களில் கவிதையைப் படித்தால் போதும். காதல் பெண்ணோடு தொடங்கி பெண்ணோடே முடிந்துவிடுவதல்ல. பெண்ணில் முகிழ்த்து பேரண்டத்தை நெகிழ்த்துவது.

3

'பலாப் பழத்தை பார்த்திருக்கிறாயா?' எனத் தலைவன் கேட்க, 'வேரில் காய்க்குமே அதுவா?' எனத் தலைவி பதில் சொல்ல, 'இல்லை' என்கிறான் கபிலன். கலித்தொகைப் பாடலில் வருகிற இக் காட்சி எதில் போய் முடிகிறது?

காதலில்.

'வேரில் காய்ப்பதைத்தான் நீ பார்த்திருக்கிறாய். எங்கள் மலைநாட்டிலோ கொம்பிலே காய்க்கும். காய்த்த பழங்கள் கனிந்து கனம் தாங்காமல் தானே அற்றுக் கீழே விழும். அதன் சுவையே தனி' என்கிறான் தலைவன்.

உடனே, 'நானும்தான் காதல் பாரம் தாங்காமல் விழுந்துவிடுவேன் போலிருக்கிறது. எப்போது பறித்துப்போக வருவீர்கள்' எனத் தலைவி மடக்குகிறாள். கொம்பில் காய்த்தாலும் வேரில் காய்த்தாலும் பலாவுக்கு இன்னொரு சிறப்பு, வெளியே இருக்கும் முட்கள். காதலிலும் இத்தகைய முட்களுண்டு. அது தூண்டில் முள்ளல்ல. கடிகார முள்.

வேரல் வேலி வேர் கோள் பலவின்
சாரல் நாட! செவ்வியை ஆகுமதி
யார் அஃது அறிந்தி சினோரே! சாரல்
சிறு கோட்டு பெரும்பழம் தூங்கி
யாங்கு இவள்
உயிர், தவச்சிறிது; காமமோ பெரிதே
- கபிலர்

உயிர் சிறிது; காதல் பெரிது. கபிலனுக்கு மட்டுமல்ல, காதலர்கள் அனைவருக்கும் சாலப்பொருந்தும் கூற்று இது. சூசகமாகச் சொல்வதும் சொன்னதிலிருந்து மடக்குவதும் இதய நெருக்கத்தின் மற்றொரு வடிவம். மேலே இருக்கும் யாவும் புரிய நாம் காதலிக்க வேண்டும் அல்லது கவிதை எழுதியிருக்க வேண்டும். இல்லாதவர்களிடம் யாசகம் கேட்பது வன்முறைக்குச் சமமானது. உங்களிடம் காதலிக்கிறதா?

சந்திப்பு : **மு.மாறன்**
படங்கள் : **ஸ்ரீஹரி**

கோயில் பழசு கோலம் புதுசு

ஸ்ரீரங்கத்தில் வசித்து வந்த வாசுதேவனின் பூர்விக கிராமம் புது நிலைவயல். புதுக்கோட்டையிலிருந்து அறந்தாங்கி - காரைக்குடி வழித்தடத்தில், கீழாநிலைக்கோட்டையில் இறங்கி சுமார் ஒன்றரை கி.மீ. நடந்து செல்ல வேண்டும். இங்குதான் அமைந்துள்ளது ஸ்ரீருக்மணி ஸ்ரீசத்யபாமா ஸமேத ஸ்ரீ ராஜகோபாலப் பெருமாள் கோயில். வாசுதேவனது குலதெய்வக் கோயில். ஒரு நாள் அவர் ஆஞ்சநேய உபாஸனையில் இருந்தபோது, ஸ்ரீ கிருஷ்ணர் நாகர் வடிவில் அவர் மனசுக்குள் தோன்றியிருக்கிறார். "உன் குலதெய்வக் கோயிலின் பெருமாள் பட்டினி கிடக்கிறார். தினசரி ஒரு வேளை பூஜைகூட நடைபெறுவது இல்லை. சிதைந்து போய்க் கிடக்கிறது ஆலயம். திருப்பணி செய்வித்து, தினசரி மூன்று கால பூஜைகளுக்கு ஏற்பாடு செய்" என்று அசரீரி கேட்டிருக்கிறது. மறுநாள் காலையே தனது ஆன்மீக அன்பரான முத்துவிஜயன் குருசுவாமி என்பவரை உடன் அழைத்துக் கொண்டு புதுநிலைவயல் கிராமத்துக்குப் புறப்பட்டுவிட்டார் வாசுதேவன்.

குடமுழுக்கு நடைபெற்று பல்லாண்டுகள் ஆகிப் போனதன் தோற்றத்துடன் காட்சியளித்திருக்கிறது கோயில். கும்பிட யாரேனும் வெளியூரிலிருந்து வந்தாலன்றி, பூஜை என்பது சுவாமிக்கு மிகவும் அரிதான ஒன்றாக இருந்திருக்கிறது. இருவருக்குள்ளும் அக்கணமே சங்கல்பம் ஒன்று தோன்றிவிட்டிருக்கிறது. இருந்தபோதிலும், சன்னதியில் உத்தரவு கேட்டுவிடும் நோக்கில் அமர்ந்திருக்கின்றனர். இருவரும் கண்களை மூடிய மெய்மறந்த சூழல். கரங்களில் ஏதோ ஊர்வது போன்ற உணர்வு. விழித்துப் பார்த்தால் இருவர் கைகளிலும் சர்ப்பம் ஒன்று மெல்ல ஊர்ந்து, தரையில் படர்ந்து மறைந்துவிட்டது. ராஜகோபாலப் பெருமாளே சர்ப்ப வடிவில் உருமாறி வந்து உத்தரவு தந்துவிட்டது போன்றதொரு மனக்கிளர்ச்சி. இருவரும் மனமுவந்து திருப்பணிக் கைங்கர்ய காரியங்களில் இறங்கத் தொடங்கியிருக்கின்றனர்.

இவர்களின் ஆர்வத்தைப் பார்த்த கிராம மக்கள் அனைவரும் 'நம்ம ஊரு கோயில்' என்கிற ஆன்மநேயப் பார்வையுடன் திருப்பணியில் பங்கேற்கின்றனர். செடி, கொடி, மரங்களை அகற்றி கர்ப்ப கிரக கோபுரத் திருப்பணி. அழகுறு மூலஸ்தானம். அதில் எழிலார்ந்த திருமேனிகளாக ருக்மணி சத்யபாமா ஸமேத



ராஜகோபாலப் பெருமாள் திருவுருவ மூலவர்கள். நாகர் வடிவம்தாங்கிய ஸ்ரீ கிருஷ்ணர்கள், ஆஞ்சநேயர், நம்மாழ்வார், ராமானுஜர் சன்னதிகள். புதிய மண்டபம், புதிய திருமடப்பள்ளி, விஸ்தாரமான சுற்றுச் சுவர். இவையனைத்தையும் நிறைவு செய்யவே இரண்டரை வருடங்கள் ஆகியிருக்கிறது. ஏழரை லட்ச ரூபாய் செலவு. எல்லாம் முடிந்து கடந்த வருடம் குடமுழுக்கு நடைபெற்றிருக்கிறது.

கலியுகத்தின் கண்கண்ட தெய்வமான மகாவிஷ்ணுவின் அவதாரங்களில் ஒன்று கிருஷ்ணாவதாரம். அந்த கிருஷ்ணன், ருக்மணி சத்யபாமா ஸமேத ஸ்ரீ ராஜகோபாலப் பெருமாளாக அவதாரம்

பாம்பாக மாறியவன்!

எடுத்து, ஏகாந்தமாக பக்தர்களுக்குக் காட்சியருள் பண்ணுகிறார் இங்கு. கூடவே கிருஷ்ணாவதார காலத்தில் தன்னுடன் கூட வந்த பலராமனும் நாகமாக வடிவெடுத்து பெருமாளுக்குப் பாதுகாவலனாக, பெருமாளின் திருமேனி



* அன்று...

* இன்று...



யில் தவழ்ந்து கொண்டிருக்கிறார். பொதுவாக நாகலிங்கம் தரிசித்திருக்கிறோம். நாக வடிவ ஸ்ரீகிருஷ்ணரை இங்கு வந்தால் தரிசிக்கலாம். இது ஒரு நாகதோஷ நிவர்த்தி ஸ்தலமாகவும் விளங்கி வருகிறது. வைணவக் கோயில்களிலேயே தமிழகத்தில் நாகதோஷ நிவர்த்தி ஸ்தலம் இது ஒன்று மட்டுமே என்றும் சொல்லப்படுகிறது. நாகதோஷம் உள்ளவர்கள் இத்திருக்கோயிலுக்கு வந்து ஸ்ரீராஜகோபாலப் பெருமாளுக்கு அபிஷேகம் செய்து வழிபட்டால், அந்தத் தோஷம் நீங்குகிறது. குழந்தை பாக்கியம் இல்லாதவர்களுக்கும் ஸ்ரீராஜகோபாலப் பெருமாள் அருளால் அப்பாக்கியம் கிட்டும் என்பது ஐதீகம்.

- இருள்நீக்கியான்



* ருக்மணி சத்யபாமா சமேத ஸ்ரீராஜகோபாலப் பெருமாள்!

"அந்த பத்தாம் நம்பர் பெட் பேஷண்டை இன்னும் டிஸ்சார்ஜ் பண்ணாம இருக்கீங்களே... அவர்தான் அபாய கட்டத்தைத் தாண்டிட்டாரே டாக்டர்..."

"நம்ம ஹாஸ்பிடல் கட்டடம் இன்னும் மூணாவது மாடியைத் தாண்டலையே...!"

- கே. ஆனந்தன்

''சச்சின் படத்தோட பேரை மாத்தணும்னு சொல் றீங்களே... ஏன்?''

''பின்ன, தமிழக வீரர்கள் சடகோபன் ரமேஷ், பாலாஜி இருக்கும்போது, மும்பை வீரர் சச்சின் பேரை ஏன் வைக்கணும்?''

- எம். வினோத்

''அவருக்கு வாழ்க்கையே வெறுத்துப் போச்சாம்!''

''எதை வச்சி அப்படிச் சொல்ற?''

''செல்போன் ரிங்டோன்ல கூட சங்கு ஊதற சத்தம் வச்சிருக்கார்!''

- நெல்லையப்பபுரம் செல்வன்

"அந்தக் காலத்துல என் தாத்தா காதல் பண்ணி கல்யாணம் பண்ணிக்கிட்டார். என்னோட அப்பாவும் அதே மாதிரிதான். இப்போ நானும் லவ் மேரேஜ்தான். இதைப் பத்தி நீ என்ன நினைக்கிறே?"

"பட்ட கால்லயே படும்... கெட்ட குடியே கெடும்னு சொல்றது சரியாத்தான் இருக்கு!"

- கே. ஆனந்தன்

"நம்ம பையன் உருப்படவே மாட்டான்!"

"ஏங்க அப்படிச் சொல்றீங்க?"

"லீவுக்கு குடும்பத்தோட போறதுக்கு மும்பை எக்ஸ்பிரஸ்ல டிக்கெட் ரிசர்வ் பண்ணிட்டு வாடான்னு பணம் கொடுத்தா, மும்பை எக்ஸ்பிரஸ் படத்தோட மேட்னி ஷோவுக்கு ரிசர்வ் பண்ணிட்டு வந்திருக்கான்!"

- சம்பத்குமாரி











சிறுகதை

புழுக்கம்!

நள்ளிரவு நேரம். திடீரென மின்சாரம் போய்விட்டது. கல்யாணிதான் முதலில் கண் விழித்தாள். மெதுவாக எழுந்து சுவற்றைத் தடவியவாறு சில அடிகள் நடந்தாள். அலமாரி தட்டுப்பட்டது. அதைத் திறந்து உத்தேசமாக கையை ஓர் இடத்தில் வைக்க, தீப்பெட்டி சிக்கியது. எடுத்து உரசினாள். வெளிச்சம் அறையை நிரப்பியது. அந்த வெளிச்சத்தில் மெழுகுவர்த்தியைக் கண்டுபிடித்து பற்ற வைத்தாள். கட்டிலில் படுத்திருந்த இரண்டு வயது மகன் ஜீவன் புரண்டான். புழுக்கம் தாங்காமல் அழ ஆரம்பித்தான். கல்யாணி வேகமாகச் சென்று அவனருகே அமர்ந்து மெதுவாகத் தட்டினாள். அவனது அழுகை நிற்கவில்லை.

பக்கத்தில் படுத்திருந்த கணவன் முகிலன் கண் விழித்தான். "என்ன ஆச்சு?" என்று எரிச்சலான குரலில் கேட்டான்.

"கரண்ட் போயிடுச்சுங்க" என்றாள் கல்யாணி.

"சே! வெயில் காலம் வந்துட்டா இது ஒரு தொல்லை. ஜீவன் எதுக்கு அழறான்?"

"புழுக்கங்க."

"விசுற வேண்டியதுதானே."

அதற்கு கல்யாணியிடமிருந்து பதிலில்லை. ஜீவனின் அழுகைச் சத்தம் மட்டும் கேட்டுக் கொண்டிருந்தது. தலையைத் திருப்பிப் பார்த்தான் முகிலன். கல்யாணி அறைக்குள் அப்படியும் இப்படியுமாகச் சென்று கொண்டிருந்தாள்.

"என்னத்தைத் தேடுறே?"

"விசிறிங்க."

"அதை ஒரு இடமா வைக்கறதில்லையா?"

"இங்கேதான் வெச்சேன். சாயந்திரம் இவன்தான் எடுத்து விளையாடிட்டு இருந்தான். அப்புறம் எங்கே போட்டான்னு தெரியலை" என்றபடி கட்டிலுக்குக் கீழே குனிந்து பார்த்தாள்.

முகிலனுக்குக் கோபம் வந்தது. "அறிவிருக்கா உனக்கு? வெயில் காலத்துல அடிக்கடி இப்படி கரண்ட் போகும்னு தெரியாதா? எல்லாத்தையும் முன் கூட்டியே தயாரா வெச்சுக்க வேண்டாமா?" என்றான்.

"என்னை ஏதாவது சொல்லலைன்னா உங்களுக்குத் தூக்கம் வராதே. இப்படி நடு ராத்திரியில கரண்ட் போகும்னு யார் கண்டது?"

"அதைத்தான் யோசிக்கணும்னு சொல்றேன். டீவியில சீரியலைப் பார்த்து அழுதுட்டு இருந்தா மூளை எப்படி வேலை செய்யும்?"

"நீங்கதான் பி.பி.சியும் நேஷனல் ஜியாகிரபியும் பார்க்கறவராச்சே. படுக்கறதுக்கு முன்னாடி விசிறியை நீங்களே எடுத்து வெச்சுக்கிட்டு இருக்கலாமே."

"நான் எடுத்து வெச்சுக்கணுமா? கொழுப்பு. இனிமே ஒண்ணு பண்றேன். வேலைக்குப் போறதுக்கு முன்னாடி நானே சமைச்சு வெச்சுடறேன். ஈவ்னிங் வந்ததும் வீட்டு வேலைகளை கவனிக்கறேன். நீ உட்கார்ந்து டீவி பார்த்துட்டு இரு."

"என்னமோ ஆம்பளைங்க மட்டும் தான் கஷ்டப்படற மாதிரியும் பொம்பளைங்க நாங்க இருபத்தி நாலுமணி நேரமும் டீவியே பார்த்துட்டு இருக்கிற மாதிரியும் பேசறீங்களே..."


"பதிலுக்கு பதில் பேச மட்டும் தெரியுது. வீட்டுப் பொறுப்பு உன்னோடதுதானே? எது எப்போ தேவையோ, அப்போ சட்டுன்னு எடுத்துத் தர வேண்டியது உன்னோட பொறுப்புதானே?"

"யார் இல்லைன்னு சொன்னது? எதிர்பாராம நடக்கறதுக்கு என்ன செய்யறது?"

"மறுபடியும் பழைய இடத்துக்கே வர்றே பாரு. அதைத்தாண்டி முன் கூட்டியே செய்யணும்ங்கறேன்."

"சரி சாமி. இனிமே எல்லாத்தையும் தயாரா வெச்சுக்கறேன். இந்த ஒரு முறை மன்னிச்சு விட்டுடுங்களேன்" என்று கூறி பட்டென கைகளை தலைக்கு மேல் தூக்கிக் கும்பிட்டாள்.

"ரோஷத்துக்கு ஒண்ணும் குறைச்



சலில்லை. இவ்வளவு பேசினியே, விசிறியை கண்டுபிடிச்சியா? இருட்டுல தேடிட்டு இருக்காதே. ஏதாவது புஸ்தகத்தை எடுத்து வந்து விசிறி விடு" என்றபடி முகிலன் கட்டிலை விட்டு எழுந்து கொண்டான்.

அவனும் வியர்த்துப் போயிருந்தான். வியர்வையில் சொத சொதத்துப் போய் விட்ட பனியனை கழற்றி எரிச்சலுடன் கட்டிலின் விளிம்பில் வீசினான். கொடியில் தொங்கிக் கொண்டிருந்த துண்டை எடுத்து மார்பிலும் முதுகிலும் துடைத்துக் கொண்டான். அதை அப்படியே மேலே போர்த்திக் கொண்டான்.

இப்போது கல்யாணி புத்தகத்தால் ஜீவனுக்கு விசிறிக் கொண்டிருந்தாள். அந்தக் காற்று போதாமல் அவன் தொடர்ந்து அழுது கொண்டிருந்தான்.

"அடச்சீ! வாயை மூடுடா. கொஞ்ச நேரம் பொறுத்துக்க முடியலையா? என்னமோ பொறந்

ஆரணி யுவராஜ்



தப்பவே ஏ.சியில இருந்த மாதிரி. பாவிங்க, இந்த நேரத்துல எதுக்கு கரண்ட்டை கட் பண்ணினாங்க'' என்று எரிச்சலுடன் சொன்னாள்.

முகிலன் வாசல் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தான். பக்கத்து போர்ஷன் கணபதி வெளியே நின்றிருந்தான். அவனது தோளில் மூன்று வயதுப் பெண் குழந்தை உறங்கிக் கொண்டிருந்தது.

"என்னங்க முகிலன், நடுராத்திரி வீட்டுக்குள்ளே பட்டிமன்றம் நடத்திட்டு இருக்கிங்க போல" என்று கேட்டு மெல்லப் புன்னகைத்தான்.

'''பின்னே என்னங்க? அலட்சியமா இருந்துடறது. அதைப் பத்திச் சொன்னா, கோபத்தோடு முகத்தை தூக்கி வெச்சுக்கறதே வேலையாப் போச்சு'' என்றான்.

"சொன்னா கோவிச்சுக்காதீங்க. இது ஒரு சின்ன விஷயம். முன்கூட்டியே எடுத்து வெச்சுக்கணும்னு நீங்க சொல்றது நியாயம் தான். சரி எடுத்து வெச்சுக்கலை. அதை குத்திக் காட்டிட்டு இருந்த நேரத்துல உதவியா தேடி இருக்கலாமே. அதை அவங்களேதான் தேடி எடுக்கணும்னு நினைச்சிங்க பாருங்க, அங்கேதான் உங்க ஈகோ எட்டிப் பார்க்குது'' என்றான் கணபதி.

முகிலனுக்கு எரிச்சலாகி விட்டது. 'சே! ஏற்கெனவே புழுக்கம் தாங்கலை. இதுல இவன் வேற உபதேசம் பண்ணி எரிச்சலை கிளப்பறான்' என்று நினைத்தான்.

''என்ன சார்? புழுக்கம் தாங்காம வெளியே வந்தா, இவன் வேற அறுக்கறானேன்னு நினைக்கறீங்களா?'' என்று கணபதி புன்னகையுடன் கேட்டான்.

முகிலன் ஆடிப்போனான். "சே! சே! அப்படியெல்லாம் இல்லை."

"நினைச்சாலும் பரவாயில்லை முகிலன். புழுக்கம் வந்துட்டா கூடவே எரிச்சல், கோபமெல்லாம் வரத்தான் செய்யும். ஆனா ஒண்ணு தெரிஞ்சுக்கங்க. நம்மளை விட பெண்களுக்குப் புழுக்கம் அதிகம்.''

"..............''

"இதோ நாம லுங்கியும் பனியனுமா இருக்கிறோம். தேவைப்பட்டா பனியனையும் கழட்டிப் போட்டுட்டு நடு ராத்திரியில கூட வெளியே வந்து நின்னுடறோம். அவங்க நிற்க முடியுமா?''

"..............''

''ஏற்கெனவே நம்ம பெண்களுக்கு உடைகள், பண்பாடு, கலாசாரம்னு தவிர்க்க முடியாத சில புழுக்கங்கள் இருக்கு. நாம விசிறி விடலைன்னாலும் நம்ம பங்குக்கு புழுக்கத்தை ஏற்படுத்தாம இருக்கலாமே'' என்றான் கணபதி.

அவன் மனைவி உள்ளே இருந்து எட்டிப் பார்த்துக் குரல் கொடுத்தாள். "என்னங்க, நடுராத்திரியில ரொம்ப நேரம் குழந்தையை வெச்சுட்டு வெளியே நிக்காதீங்க. உள்ளே வாங்க'' என்றாள்.

"கரண்ட் எப்ப வரும்னு தெரியலையே'' என்றபடி கணபதி உள்ளே சென்று விட்டான்.

முகிலன் சிறிது நேரம் அங்கேயே நின்றிருந்தான். பிறகு உள்ளே நுழைந்து கதவைச் சாத்தினான். சிலிண்டர் மீது இருந்த விசிறி கண்களில் தென்பட்டது. எடுத்துக்கொண்டு கட்டிலில் வந்தமர்ந்தான்.

கல்யாணி ஜீவனை மடியில் போட்டுக் கொண்டு மெல்ல ஆட்டியவாறு புத்தகத்தால் விசிறிக் கொண்டிருந்தாள். அவள் முகம் முழுக்க வியர்வைப் பொட்டுக்கள்.

"கல்யாணி, அவனை இப்படி படுக்க வெச்சுட்டு நீயும் படுத்துத் தூங்கு. நான் விசிறி விடறேன்'' என்றான் முகிலன். ○

அசத்தல் நூறு!

சமீபத்தில் நியூயார்க்கில் 'டைம்' பத்திரிகை உலகின் நூறு முக்கியமான மனிதர்களை அழைத்து விருந்து ஒன்றைக் கொடுத்தது. ஜார்ஜ் புஷ், பில்கிளிண்டன் போன்ற பிரபலங்களோடு இந்தியாவிலிருந்து கலந்து கொள்ள அழைக்கப்பட்ட நபர், நம்ம ஐஸ்தான்!

• **ஒரே படம்!**

● வி.சேகர் இயக்கத்தில் பார்த்திபனுடன் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார் நமீதா. இதில் கிளாமரை முற்றிலும் துறந்துவிட்டு நடிப்பில் கலக்கவிருக்கிறாராம்! பார்க்கலாம்.

● 'புன்னகை பூவே' நந்தா - உமாவை வைத்து சத்தமில்லாமல் 'செல்வம்' என்கிற படத்தை எடுத்து முடித்து விட்டார், தேசிய விருது இயக்குனரான அகத்தியன்.

● சேரனின் புது ஹீரோயின் பத்மப்ரியாவுக்கு படவாய்ப்புகள் வந்து குவியும் முன் விளம்பர வாய்ப்புகள் குவிந்து கொண்டிருக்கிறதாம். ஆனால் 'தவமாய் தவமிருந்து' முடியும் வரை அனைத்திற்கும் தடா போடப்பட்டுள்ளதாம்.


● சன் டீவியின் புது காம்பியர்கள் பலருக்கும் தமிழ் சினிமாவில் வாய்ப்புகள் கிடைத்தாலும் அனைத்துமே ஹீரோயினின் தோழியாக வலம் வரும் வேடங்களாக இருப்பதால், யாருக்கும் கோடம்பாக்கத்தில் கால் பதிக்க இஷ்டமில்லையாம்.





• **இரண்டில் ஒன்று!**

● 'காதல்' படத்தில் சந்தியாவுக்கு வழங்கப்பட்ட சம்பளம் ஒரு லட்சம். ஆனால் தற்பொழுது



பதினைந்து லட்சம் தருவதற்கும் தமிழ் சினிமா ரெடியாக உள்ளது.

• தடா!



● தனுஷ் தனது அண்ணன் செல்வராகவன் இயக்கத்தில் நடிக்கும் 'புதுப்பேட்டை'யின் ஷூட்டிங் ஹைதராபாத்தில் சூடாக நடந்து கொண்டிருக்கிறது. சோனியா அகர்வால் - ஸ்னேகா என தனுஷுக்கு இரட்டை கதாநாயகிகள்.

● அஜீத் அடுத்ததாக பாலாவின் படத்தில் நடிப்பது போல், விஜய்யும் செல்வராகவனின் படத்தில் நடிப்பது குறித்து பேச்சுவார்த்தை நடந்து வருகிறது.

● த்ரிஷா கையில் தற்பொழுது ஒரே ஒரு தமிழ்ப் படம்தான் உள்ளது. சரண் தயாரிக்க, ஹரி இயக்கத்தில் உருவாகும் 'ஆறு' படத்தில் சூர்யாவுக்கு ஜோடியாக நடிக்கவுள்ளார். மற்றபடி சாமி 'மாமி' ஆந்திராவில்தான் செம பிஸி!

• பதினைந்து லட்சம்!



● மாதவனின் படம் வெளிவந்து ஒரு வருஷமாகப் போகிறது. 'ஆய்த எழுத்து'க்குப் பிறகு இந்த மாதம்தான் 'பிரியசகி' வெளிவரவிருக்கிறது.

● சந்திரமுகி, மணிச்சித்ரதாழ் படத்தின் ரீமேக் என்று பேசப்பட்டுக் கொண்டிருக்கும் நேரத்தில், பிரசாந்தின் 'ஷாக்' படத் தழுவல் என்றும் கோடம்பாக்கத்தில் பலர் பேசி வருகிறார்கள். பிரசாந்த்-மீனா




• ரிப்பீட்டு

கி ஷாக்!

ஜோடிதான் பிரபு-ஜோதிகா என்றும், டாக்டராக வந்த சரத்பாபுதான் ரஜினி என்றும் மேட்ச் செய்கிறார்கள். ரிப்பீட்டு?

- பப்பி



ஆத்மாவுக்கு

‘என்னுடைய ஆத்மா’ என்று நாம் பேச்சிலே எப்போதாவது சொன்னால் அது தப்பு. இதேபோல இன்னொருத்தருடைய ஆத்மா என்று சொன்னாலும் தப்பு. ‘ஆத்மா’ என்றால் என்னவென்று தெரியாததால் நாம் பண்ணும் தப்பு. ஸாதாரணமாக ஆத்மாவைப் பற்றி எப்போது சொல்கிறோம்? யாராவது ரொம்பவும் கஷ்டப்பட்டால், “பாவம், அந்த ஆத்மா படாதபாடு படுகிறது” என்கிறோம். ஓயாமல் சஞ்சலப்பட்டுக் கொண்டே இருப்பவரை, “நிம்மதியில்லாத ஆத்மா” என்கிறோம். ‘காலமானார்’ என்று பேப்பரில் போடும்போது, ‘அன்னாருடைய ஆத்மா சாந்தி அடையட்டும்’ என்று போடுகிறார்கள். இந்த எல்லா இடத்திலுமே ‘ஆத்மா’ என்ற பத ப்ரயோகம் ஸரியில்லை. ஆத்மா பாடும் படாது, நிம்மதி இல்லாமலும் இருக்காது. அது புதிசாக சாந்தி என்று ஒன்றை அடைய வேண்டியதுமில்லை.

அகண்டமானது ஆத்மா. அதன் கண்டமான ஆபாஸமே ஜீவபாவம் அடைந்து தன்னையே ‘நான்’ என்று நினைப்பதுதான் அஹங்காரம்; ego என்பது. இந்த ego வைத்தான் நாம் பெரும்பாலும் ஆத்மா என்று தப்பாகச் சொல்லிவிடுகிறோம். ஸமுத்ரத்திலே ஒரு சொம்பை அமுக்கி, அந்தச் சொம்புக்குள் இருக்கிற நாலு ஆழாக்கு ஜலத்தை ஸமுத்ரம் என்கிறது போலத்தான், நாம் தனி ஜீவ அஹங்காரத்தை ஆத்மா என்பதும். சொம்பு ஜலம் ஸமுத்ரத்துடையது என்பதுபோல இதுவும் ஆத்மாவுடையதுதான்.


- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய சுவாமிகள்

நீங்கள் உதவினால் இவர்கள் வாழலாம்...,

வருடத்தில் ஒரு நாள் உணவு வழங்கி உதவி செய்யுங்கள்.



கோயம்புத்தூர், சத்தி ரோடு, குரும்பபாளையத்தில் இயங்கி வருகிறது 'தி யுனைடெட் ஊனமுற்றோர் பள்ளி'. எழுந்து நிற்கமுடியாத, நடக்கமுடியாத, பேசும் சக்தியற்ற, மனவளர்ச்சி குன்றிய ஆதரவற்ற சிறுவர், சிறுமியர்களை கொண்டுள்ளது இந்த இல்லம். நீங்களும் உங்கள் பிறந்த நாள், பண்டிகைநாள், திருமணநாள், பெற்றோரின் நினைவு நாட்களில் அவர்களை நினைவுகூறும் விதமாக 'ஒரு நாள்' உணவு வழங்கி உதவி செய்யுங்கள். பொருள் உதவி செய்தோ அல்லது மாதாமாதம் ஒரு சிறு தொகையை பள்ளியின் பெயரில், வங்கி டிராப்ட் / மணியார்டர் மூலம் அனுப்பலாம். இந்த இல்லத்தினை பார்வையிட்டும் உதவி செய்யலாம்.



The United Physically Handicapped School

(an Institution for orphaned disabled children)

96, Sathy Main Road, Kurumbapalayam, Coimbatore-641 107.
Tamil Nadu. INDIA Phone : 91-422-2667578, 2667636. www.unitedhandicapped.org

"ஊனமுற்றோர்களுக்கு செய்யும் தொண்டு! இறைவனுக்கு செய்யும் தொண்டு!"

* Donations are Tax exempt



அந்தச் சிறிய 'வீட்டில்' ஸ்டவ், அலுமினியப் பாத்திரங்களுடன் ஒரு பதினாலு இன்ச் டீவி கூட இருந்தது.

"அம்மாவுக்கு 'மெட்டி ஒலி' பார்க்கலைன்னா ஹைப்பர் வெண்டிலேட் ஆய்டும்." அழகேசனின் தாயைப் பார்த்த உடனே மஞ்சரிக்குப் பிடித்துவிட்டது. மகனின் முகச் சாயலின் பேச்சு, தோரணைகளின் ஆதாரங்கள் உடனே புலப்பட்டன.

"அம்மா, இதான் மஞ்சரி. நான் சொன்னேனில்ல." அவன் தன் கையைத் துடைத்துக்கொண்டு முகத்தின் வியர்வையைத் துடைத்துக்கொண்டு "வா புள்ள, கொஞ்சம் இரு. பக்கத்து வீட்லருந்து நாற்காலி வாங்கிட்டு ஓடியாந்துர்றேன்."

"அம்மா, உக்காந்து பேச நேரமில்லை. உங்கம்மாவை பார்க்கணும் காட்டுன்னாங்க. கூட்டியாந்துட்டேன்."

"உங்க மகனை நல்லா வளத்திருக்கிங்கம்மா."

"என்ன புள்ளை, பெரிய பேச்சு பேசுதே. அவன் தானா வளந்தான்... எனக்குச் செலவு வெக்காம எல்லாம் அதென்ன சொல்வாங்க..."

"மெரிட்... மெரிட்..."

"அதுலயே படிச்சான். படிக்கறப்பவே எனக்கு உதவியா சில்லறை வேலை ஏராளமா செய்வான். பேப்பர் போடுவான். பால் பாக்கெட் போடுவான்."

"நீங்களும் நிறைய கஷ்டப்பட்டிருக்கிங்கம்மா. அழகி சொன்னார்."

"அப்படியா சொன்னான். எங்கிட்ட சொன்னதே இல்லையே!" என்று அவனை வாஞ்சையுடன் பார்த்தாள்.

"அம்மா, இந்தப் பொண்ணு ரொம்ப பணக்காரப் பொண்ணு."

"உடம்பில பளபளப்பிலயே தெரியுது."

"என்னைக் கல்யாணம் கட்டிக்கிறேன்னுது. நீ என்ன சொல்றேம்மா."

"நான் என்ன சொல்ல! நான் ஏதாவது சொல்லி நீ கேட்டிருக்கியா... இவங்கப்பாகிட்ட குடிக்காதேன்னு சொன்னேன். கேக்கல. இவன்கிட்ட படிக்காதேன்னு சொன்னேன். இவனும் கேக்கலை."

"உங்கம்மாகூட பொயட்ரி எழுதுவாங்களா?"

"சகவாசம். யு டோண்ட் நோ ஹர்! டென்த் வரைக்கும் படிச்சிருக்கா. அம்மா அந்த 'கண்ணென்ன கண்ணே' சிலப்பதிகாரம் பாட்டை அவுத்துவிடு."

"போடா."

"இந்த வயசிலகூட வெக்கப்படறா பாரு!"

"பாரு புள்ள, உன்னைத் தொட்டுப் பாக்கட்டுமா? நாங்கள்லாம் உங்களைத் தொடலாமா?"

"என்னம்மா, அப்படிச் சொல்றீங்க?" என்று அவளை அணைத்துக் கொண்டாள்.

"உங்கப்பா அம்மாகிட்ட சொல்லிட்டியா?"

"அவங்க இல்லை. சின்ன வயசில கார் ஆக்ஸிடெண்ட்ல இறந்துட்டாங்க."

19 உள்ளம் துறந்தவன்



சுஜாதா

“அடப்பாவமே! யார் வளத்தாங்க உன்னை?”

“எங்கம்மாவுடைய அண்ணன். அவங்களுக்கு ரெண்டு மகளுங்க, மூணாவது மகளா நான்!”

“அவங்களுக்கெல்லாம் கல்யாணம் ஆயிருச்சா.”

சிரித்து , “அவங்க என்னைவிட ரொம்ப மூத்தவங்க. அவங்களுக்கு மகன், மகள் எல்லாம் என் வயசில இருக்காங்க.”

“முறை மாப்பிள்ளைங்க, அத்தை மவனுங்க ரெண்டு பேர். ஒருத்தன் அமெரிக்காவில, ஒருத்தன் கோவையில. அத்தை மகன்களை விட்டுட்டு, தொத்தையைக் கட்டிக்க ஒத்தைக் காலில நிக்கறா! இதாம்மா கதைச் சுருக்கம்!”

“சரியா யோசிச்சு பாத்தியாம்மா. குடும்பத்தை விரோதிச்சுக்காதம்மா. பிற்பாடு ரொம்ப கஷ்டப்படுவே. ஒரு கல்யாணம் கார்த்திக்கு பொறந்த வீட்டுக்கு... நான் பொறந்த வூட்டு சனத்தை வுட்டு ஓடியாந்து குடிகாரனைத் கட்டிக்கிட்டு எல்லாத்தையும் இழந்து, இப்ப வீராணம் குழாய்க்குள்ள ஒதுங்கியிருக்கேன். என்ன வேஷ்ட்டு ஜன்மம்.”

“ஒரு அருமையான மகனை பெத்திருக்கீங்களே!”

“என்னையா சொல்றே!”

“சூதுவாது தெரியாதவன்... பொய் சொல்ல மாட்டான். எல்லா நல்ல காரியத்துக்கும் தலையைக் குடுப்பான். தப்புதண்டா கிடையாது.”

“தெரியும்ங்க.”

“உங்க வீட்டில் சம்மதம்னா எனக்கும் சம்மதம்மா.”

“அவங்க சம்மதிக்கிறாங்க. ஒரு கண்டிஷன் போடறாங்கம்மா. சொத்துரிமை அத்தனையும் விட்டுக் குடுத்துரணும்ங்கறாங்க.”

மஞ்சரி அவளை ஆர்வத்துடன் பார்த்து, “அம்மா, நீங்க என்ன சொல்றீங்க?”

"பணம் பழகிடுச்சுன்னா விட்டுக் குடுக்கறது கஷ்டமா இருக்கும். ஏழ்மை பரவால்லைன்னா, சந்தோஷம் முக்கியம்னா வுட்டுரலாம். பணத்தை வுட்டாலும் உறவை வுட்டுறாதே. இவன் உன்னை நல்லா வச்சுப்பான். அதுக்கு நான் உத்தரவாதம்."

"அம்மா! அது பிரச்னையே இல்லை! இவதான் என்னை நல்லா வச்சுக்கனும். கொஞ்சம் வெளிய வந்து எட்டிப்பாரு."

சாலையில் சற்று தூரத்தில் டிரைவர் பவ்யமாக காத்திருக்க, நிற்கும் பி.எம். டபிள்யு காரைக் காட்டினான்.

"இது எனக்கு சீதனம்!"

"ஆத்தாடி!"

திரும்பிச் செல்லும்போது, "எங்கம்மா எப்படி இருக்காங்க?"

"எங்கம்மா மாதிரி. எனக்கு ஞாபகம் இல்லை. ரொம்பச் சின்ன வயசு. ஒண்ணு, ரெண்டு போட்டோவை பார்த்து இப்படி இப்படி இருப்பாங்கன்னு கற்பனை பண்ணிக்கிட்டிருந்தேன். முகம் பதியவே இல்லை. இன்னிக்கு பதிஞ்சிருச்சு. நான் தீர்மானிச்சுட்டேன், கையெழுத்து போடறதா!"

"எகய்ன் இட்ஸ் யுவர் டெஸிஷன்" என்றான்.

டாக்டர் பாலா சென்னையில் மாற்று இதயம் பொருத்த டாக்டர் ராவ், டாக்டர் செரியன் போன்றவர்களிடம் பேசினார். வருஷத்துக்கு இந்தியாவில் 70000 சாலை விபத்துகளில் மக்கள் இறந்து போகிறார்கள். அதில் 'ப்ரெய்ன் டெட்' வகைப் படுத்தக்கூடியது ஆயிரக்கணக்கில் இருக்கும். இரண்டு சென்டர்களில் செய்திருக்கிறோம். மேலை நாடுகளில் போல எண்ணிக்கை அதிகம் இல்லை. கவர்ன்மெண்ட் டாக்டர்கள் குறிப்பாக நியுரோ சர்ஜன்களிடமிருந்து சர்ட்டிபிகேட் பெற வேண்டும். முதல் வருஷத்தை பாதிப்பேர் தாண்டிவிடுகிறார்கள். மற்ற சிக்கல்கள் எதுவும் இல்லையெனில் குறிப்பாக மாற்று இதயம், தருபவரின் உயரம், பருமன் இரண்டும் முக்கியம். இதைப் பொருத்தம் பார்க்காமல் செய்ததில் நிறைய தவறியிருக்கிறோம்."

"ராகவேந்தருக்கு வேறு மார்க்கம் ஏதும் இல்லை. செய்தே ஆகவேண்டும். இரண்டு மாதம் கூட தாங்குவாரா சந்தேகம்" என்றார் பாலா.

"வயசு? அறுபதுக்குக் கீழ்தானே?"

"ஆம்."

"செய்யலாம்."

பேசிக் கொண்டிருக்கும்போது மினர்வாவிலிருந்து போன் வந்தது. ஈ.சி.ஆர் சாலையில் ஒரு விபத்தில் கணவன், மனைவி இருவரும் மாருதியில் சென்று கொண்டிருக்கும்போது லாரி மோதி மனைவி ஸ்பாட் டெட். கணவன் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிறான் என்ற செய்தி கிடைத்தது. உடனே ராகவேந்தரிடம் சென்று "மாமா, புறப்படுங்க... வேளை வந்துருச்சு!"



பயிற்சி!

திருச்சியில் நடைபெறவிருக்கும் குழந்தைகள் • பெற்றோர்கள் பயிற்சி முகாம் ஒன்றின் ஒருங்கிணைப்பாளராக தேர்வு செய்யப்பட்டிருக்கிறார் ஞானி. "குழந்தைகள் இன்றைக்கு வெறுமனே மார்க் வாங்கும் மெஷின்களாக இருக்கிறார்கள். ஓவியம், புகைப்படம், நாடகம் போன்ற பல துறைகளின் மீது அவர்களுக்கு ஆர்வத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சிதான் இது" என்கிறார்.

மஞ்சரி அழகேசனையும் அவன் தாயையும் அழைத்துக் கொண்டு டி.டி.கே. ரோடில் இருந்த ஒரு நட்சத்திர ஓட்டலுக்குச் சென்றாள். அதில் ரிசப்ஷனில் இருந்தவர்கள் மஞ்சரியை அடையாளம் கண்டு கொண்டு, அதிகப்படி இன்முகத்துடன் வரவேற்று ரெஸ்டாரண்டில் உட்கார வைத்தார்கள். வெள்ளித்தட்டில் இலை போட்டு குட்டி குட்டி தோசைகள், பணியாரம், அசட்டுத் தித்திப்பாக வாழைப்பழ சமாசாரம் ஒன்று இதையெல்லாம் முதலில் வைத்துவிட்டு பன்னிரண்டு வெள்ளிக் கிண்ணங்களில் உள்ள அத்தனை காய் வகைகள், பொரியல், அவியல் என்று ஒவ்வொன்றாக கொண்டு வைக்க...



புதுசு!

'ஆவியோடு தூங்கும் தனிமை' எனும் தலைப்பில் புதிய கவிதைத் தொகுப்பொன்றை வெளியிடும் முயற்சியில் இறங்கியுள்ளார் கவிஞர் தேன்மொழி.

"ஆத்தாடி! தினம் இப்படி சாப்ட்டா உடம்பு என்னத்துக்கு ஆகும்?"

"அதான் பாக்கறியே" என்று எதிர் சீட்டில் உட்கார்ந்திருந்த குண்டு தம்பதிகளையும், குண்டுப் பையனையும் காட்டினான்.

"தங்கற ஓட்டலா இது?"

"ஆமாம்மா."

"ஒரு நாளைக்கு எத்தனை ரூபா?"

"இருக்கும், எட்டாயிரம்!"

"ஆத்தாடி! எனக்கு ஒரு வருசத்துக்கு கூட அத்தனை கிடைக்காதே."

"இதுக்கெல்லாம் யார் காசு கொடுப்பாங்க?"

"ஓட்டலே இவங்களுதும்மா!"

மஞ்சரி, "புறப்பட்றதுக்கு முந்தி அம்மாவுக்கு இங்க தங்கற ரூம் எப்படி இருக்கும்னு காட்டிரலாம்."

"பாக்கறீங்களா அம்மா?"

மேனேஜரைக் கூப்பிட்டு, "விச் இஸ் யுவர் பெஸ்ட் ரூம்."

"ப்ரைடல் ஸ்வீட். இன்தி டாப் ஃப்ளோர் மேடம்."

"வாண்டு வி"

"எஸ்."

"மேடம் உங்களுக்கில்லாமலா..."

மௌனமான உறுத்தாத சங்கீதத்துடன் லிஃப்ட் பத்து மாடியை பத்து செகண்டில் அடைய, மெத்தென்ற கம்பளத்தில் நடந்து அந்த அறையைத் திறந்து காட்டினார்கள். உள்ளே ஒரு முன்னறை, இரண்டு படுக்கை அறை, ஒரு பால்கனி, சிட் அவுட் என்று.

"இதில் எத்தனை பேர் தங்குவாங்க?"

"ஒரு ஆள்! மிஞ்சிப்போனா ரெண்டு பேர்!"

திரைச்சீலையைத் திறந்ததும் சென்னை 'என்னைப் பார், இந்த உயரத்தில்தான் நான் அழகு' என்றது.

"அம்மா பேர் என்ன அழகி?"

"பேர் சொல்லும்மா."

"மீனாட்சி."

தொட்டுப் பார்த்து ஒரு விளிம்பில் உட்கார்ந்தாள். "அழகேசா! என்னை எழுப்பிர்றா. எல்லாம் கனா மாதிரி இருக்குது."

"அம்மா, நீ வூட்டுக்குப் போயிரு. நான் சாயங்காலம் வந்து சந்திக்கிறேன்."

அவன் போனதும் மஞ்சரியிடம், "கம்! லெட்ஸ் ஹேவ் செக்ஸ்!" என்றான்.

"ஒய் நாட்!" என்றாள் மஞ்சரி.

(தொடரும்)

காமெடி

தயாநிதி மாறன் தமிழ் ஃபாண்டுகளை அறிமுகப்படுத்தியதும், கலைஞர் கருணாநிதியும் கடிதத்திலிருந்து கணிப்பொறிக்குத் தாவிவிட்டார். ஓய்வாக இருந்த மதியப் பொழுதொன்றில் சாட்டிங்கில் ஈடுபடுகிறார்....

ஈ-கண்மணி



கரு: அன்புள்ள கழக ஈ-கண்மணிகளே, இந்த மின்னஞ்சல் அரட்டையில் உங்கள் அனைவரையும் சந்திப்பதில் எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி. என்னை நீ இங்கே எதிர்பார்த்திருக்க மாட்டாய் என்று நான் அறிவேன். என்ன செய்வது தம்பி! காலத்தோடு சேர்ந்து நாமும் மாறவேண்டும் அல்லவா? சரி, என்னோடு உரையாட யாரோ வந்திருக்கிறார்கள். யாரென்று பார்ப்போம்!

ஜெ: ஹேய் சசி, ஆர் யூ தேர்?

கரு: யார் அது?

ஜெ: ஹோ நோ... நீங்களா?

கரு: ஐயகோ இதென்ன கொடுமை? தம்பிக்கு ஈ-கடிதம் எழுதும் சமயத்தில் இப்படி ஒரு ஈ குறுக்கீடா? வேலியில் இருந்திருக்க வேண்டியது. வேட்டியின் அருகாமையில் வந்துவிட்டதை என்னென்பேன்?

ஜெ: ஹலோ, அப்படின்னா நான் என்ன ஓணானா?

கரு: அவரவருக்குத் தெரிந்தால் சரி.

ஜெ: ஓவர் குசும்பு. கொஞ்ச நேரம் ஃப்ரீயா சசியோட சாட் பண்ணலாம்னு வந்தா, இப்படி ஒரு வைரஸ் அட்டாக்கா?

கரு: (அதிர்ச்சியுடன்) நானா வைரஸ்? நானா அட்டாக்? கழகக் கண்மணிகளே, கண்மணிக் கழகங்களே, இளைஞர்களே, தமிழர்களே, கிழவர்களே, குழந்தைகளே, இந்த அபாண்ட குற்றச்சாட்டைக் கேட்டு உங்கள் ரத்தம் கொளக்-பொளக் என்று கொதித்துக் கொண்டிருப்பதை என்னால் இங்கிருந்தே கேட்க முடிகிறது. உங்கள் இதயம் விரிந்து விரிந்து கடும் கோபத்துடன் சுருங்குவதை என்னால் துல்லியமாகப் பார்க்க முடிகிறது. உங்கள் கிட்னி...

ஜெ: அய்யய்யோ... இதுக்கு பேசாம கண்ணம்மா படத்தையே பார்த்திருக்கலாமே! கிட்னி, சிறுகுடல், பெருங்குடல்னு இவர் பாட்டுக்கு எதையெதையோ சொல்லிக்கிட்டிருக்காரே!

கரு: ஆங். என் கண்ணம்மாவை எதற்காக இப்பொழுது வம்புக்கு இழுக்க வேண்டும். கண்ணம்மாவிற்கு என்ன குறைச்சல்? என். தமிழ் உரையாடல்களில் வளம் இல்லையா? உவமைகள் உவப்பானவையாக இல்லையா? ஒற்றுப் பிழைகள் இருந்தனவா? ஒட்டாத ஒப்பனைகள் இருந்தனவா? என்ன குறைச்சல்? கண்ணம்மாவிற்கு என்ன குறைச்சல்?

ஜெ: என்ன குறைச்சலா? கூட்டம்

தான் குறைச்சல்.

கரு: எனக்கு நகைக்க வேண்டும் போலிருக்கிறது.

ஜெ: எனக்கும்தான்.

கரு: கூட்டங்கள் என்றுமே என்னைக் கவர்ந்ததில்லை. இதை நீ அறிவாய் அல்லவா தம்பி? எனது 150 வருட கழக வரலாற்றில்...

ஜெ: அடப்பாவமே. அதெப்போ 150 வருடமாச்சு?

கரு: பெரியார், அண்ணா இருவரையும் இணைத்துச் சொன்னேன். நான் கூற வந்தது என்னவென்றால், இந்த 150 வருட கழக வரலாற்றில் நான் என்றுமே கூட்டங்களைக் கண்டு மயங்கியதில்லை என்பது தம்பிக்குத் தெரியும். தும்பிக்குத் தெரிய வேண்டுமென்கிற அவசியம் கிடையாது.



ணிகளே...

ஜெ: அய்யய்யே, இதென்ன எடுத்ததுக்கெல்லாம், தம்பி தும்பின்னு ஒரே டார்ச்சர்? பேசாம மும்பை எக்ஸ்பிரஸ்க்கோ, சந்திரமுகிக்கோ வசனம் எழுதியிருக்க வேண்டியதுதானே?

கரு: நான் கலைப் படங்களுக்கு மட்டும்தான் வசனம் எழுதுவேன். 'தலை' படங்களுக்கெல்லாம் எழுதுவது கிடையாது. இது தமிழகத்துக்கே தெரிந்த உண்மை.

ஜெ: அது சரி, முஷாரப் வந்திருந்தாரே, அவரைப் போய் பார்க்க வேண்டியது தானே?

கரு: சாட்டிங்கில் பேசினோம். முஷாரப் தம்பிக்கு என் மீது மிகுந்த பாசமுண்டு. இனி, பாகிஸ்தானில் தமிழ் தான் செம்மொழியாக ஆட்சி செய்யும் என்று அவர் உறுதியளித்திருக்கிறார். அங்குள்ள தம்பிகளுக்கு தினமும் ஈ-மெயிலில் கடிதம் எழுதச் சொல்லிக் கேட்டிருக்கிறார். கழகத்தில் இணைந்து பணியாற்றவும் விருப்பம் தெரிவித்திருக்கிறார். அம்மையாரிடம் இன்னொன்றையும் சொல்கிறேன். தம்பி நீயும் கேள்! இஸ்லாமாபாத்தில் உள்ள திரையரங்கங்களில் எனது கண்ணம்மா உருது மொழியில் இனிமையாகப் பேசிக் கொண்டிருக்கிறாள். கட்டாயம் 200 நாட்கள் ஓட்டுவோம் என்று முஷாரப் கூறியிருக்கிறார்.

ஜெ: பாவம், பாகிஸ்தான்.

கரு: அது சரி, அலுவலக நேரத்தில் கோப்புகளைப் பார்வையிடாமல் இப்படி சாட்டிங் செய்வதற்கு அம்மையாரால் எப்படி முடிகிறது? வியப்பாக இருக்கிறதே!

ஜெ: கரெக்ட். கரெக்ட். எனக்கு நிறைய வேலை இருக்கு. நான் கிளம்பறேன். யூ கேன் கன்டின்யூ யுவர் சாட் வித் ஈ-தம்பி. பை பை.

கரு: நல்ல வேளையாக நான் பிழைத்துக் கொண்டேன். தம்பி, வா அருகே வா, இனி நாம் சுதந்திரமாக உரையாடலாம்... வா தம்பி, வா...!

கற்பனை: **மருதன்**

சோகம்

கன்னியாகுமரி என்றதும் உங்கள் நினைவுக்கு வருவது கடல், வள்ளுவர் சிலை தானே? இனி இவற்றோடு மன நோயாளிகளையும் சேர்த்துக் கொள்ளுங்கள். ஆம்... கன்னியாகுமரியில் நாளுக்கு நாள் மனநோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

கடற்கரை, சாலையோரங்கள், பூங்காக்கள் என்று நீக்கமற நிறைந்திருக்கும் இம் மனநோயாளிகளில் பெரும்பாலானோர், சொந்த ஊர்க்காரர்கள் அல்ல... வடமாநிலங்களைச் சேர்ந்தவர்கள்.

சரி, இவர்கள் எப்படி குமரிக்கு வந்தார்கள்? "புத்தி சுவாதீனம் இல்லாதவங்கள வச்சுக்க விரும்பாத வடநாட்டுக்காரங்க, வாரம் ஒரு முறை கன்னியாகுமரிக்கு வர்ற ஹெளரா எக்ஸ்பிரஸ் ரயில்ல, மனநிலை சரியில்லாதவங்கள ஏத்தி அனுப்பிடுறாங்க. வாரத்துக்கு ரெண்டு பேரை இப்படிக் கண்டெடுக்கறோம்'' என்றார் நாம் சந்தித்த ரயில்வே அதிகாரி ஒருவர்.



குமரியில் குவியும்

அதிர்ச்சியை ஜீரணிக்க இயலாமல், அன்றைக்கு வந்த ஹெளரா எக்ஸ்பிரஸ் ரயிலைக் கண்காணித்தபோது, அவர் கூறியதன் உண்மை நமக்குப் புலப்பட்டது.

ஆம்... ரயிலிலிருந்து அனைவரும் இறங்கிய பின்னர், பெட்டி பெட்டியாக பரிசோதித்த ரயில்வே அதிகாரிகள், சித்தம் கலங்கிய இரண்டு பெண்மணிகளை விரட்டியடித்ததைக் காண முடிந்தது:

மனநோயாளிகள்!



வயது முதிர்ந்தவராகக் காணப்பட்ட பெண்மணி, தெலுங்கு மொழி பேசினார். இன்னொருவர் ரயில் நிலையத்துக்கு வெளியில் சென்று அமர்ந்து கொண்டார்.

அப்படியே நகரை வலம் வந்தபோது, பல மனநோயாளிகள் நம் பார்வையில் சிக்கினர். என்ன செய்கிறோம், ஏது செய்கிறோம் என்கிற பிரக்ஞையற்று, நோயோடும் சுகாதாரமின்றியும் சுற்றித் திரிகின்றனர். தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், இந்தி பாஷைகளில் தங்களுக்குத் தாங்களே புலம்பிக் கொள்கின்றனர். பலரிடம் வடநாட்டு முகச்சாயல் தென்படுகிறது.

பொது மக்களிடம் விசாரித்தபோது, யாருக்கும் அவர்களைப் பற்றிய எந்தத் தகவலும் தெரிந்திருக்கவில்லை. ஆனால், கடந்த இரண்டு வருடங்களுக்கு முன், அன்றைய குமரி மாவட்ட ஆட்சித் தலைவரான சுகன்தீப்சிங் பேடி எடுத்த நடவடிக்கை பற்றிக் கூறினர்.

மனநோயாளிகள் பற்றி அறிந்த கலெக்டர், மனநல காவல் சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்து, 22 பேரைப் பிடித்து, அதில் பெண்கள் 6 பேரை சென்னை கீழ்ப்பாக்கம் மனநல மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துள்ளார்.

'மீண்டும் இதுபோன்ற நடவடிக்கை தேவை' என்று கூறும் இப்பகுதி மக்கள், "வட மாநிலங்களிலிருந்து மனநோயாளிகள் இங்கு அனுப்பப்படுவதைத் தடுக்க, இரயில்வே துறையினர் உடனடி ஆக்ஷனில் இறங்க வேண்டும்" என்கின்றனர்.

- த.இ. தாகூர்

உரிமைக் குரலா? அபயக் குரலா?



மஹாராஷ்டிரா அரசு, இரவு விடுதிகளில் கேளிக்கை நடனத்துக்குத் தடை விதித்தது. இதனால் லட்சக்கணக்கான பெண்கள் 'வேலை' இழந்தனர். தடைக்கு இவர்கள் தரப்பிலிருந்து பலத்த எதிர்ப்பு கிளம்பியபோது, பெண்கள் அமைப்புகள் ஆதரவுக் குரல் கொடுத்தன.

பெண்களின் கௌரவத்தைக் காத்து, அவர்கள் மலினமாக நடத்தப்படுவதை எதிர்க்க வேண்டிய அமைப்புகள், ஏன் இரவு விடுதி நடனங்களை ஆதரித்துப் போராட வேண்டும்..? இந்த விடுதிகளில் பணியாற்றும் நடன மகளிர், பாலியல் ரீதியாகப் பயன்படுத்தப் படுவதும் துன்புறுவதும் ஊரறிந்த ரகசியம் ஆயிற்றே...?

- இந்தக் கேள்விகளுக்கான பதில் 'தனி மனித சுதந்திரம்' அல்லது 'விருப்பம்' அல்லது 'உரிமை' என்ற நவீன முரண்பாடில் அடங்கியிருக்கிறது.

நைட் கிளப், பப், டிஸ்கோ போன்ற மேலை நாகரிக கேளிக்கைக் கேந்திரங்களில் பணியாற்றுவதும், அத்தகைய கேந்திரங்களில் பணம் செலவழித்து பின்னிரவு வரை ஆடி, பாடி, மது அருந்துவதும் தனி மனித உரிமை. இந்த மாதிரி கேந்திரங்களுக்கான உரிமம் வழங்கி, வரி வசூலித்து, அவற்றைச் சில சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு இயங்க அனுமதிக்கும் பொறுப்பு மட்டும் அரசினுடையது. அவை நடக்கக் கூடாது என்றோ, அவற்றில் நடனம் நிகழ்த்தக் கூடாது என்றோ தடை செய்வது 'மாரல் போலீஸிங்' (Moral Policing). அதை அரசாங்கம் செய்யக்கூடாது. அவ்வாறு செய்வது தனி நபர் உரிமைகளில் குறுக்கிடுவதாகும் - இதுவே எதிர்ப்பாளர்களின் வாதம்.

சட்டப்படி இந்த வாதம் சரியானதே... ஒவ்வொரு விடுதியிலும் ஒவ்வொரு நடன மேடையிலும் ஒவ்வொரு நாடக அரங்கிலும் ஒவ்வொரு கலை இலக்கியப் படைப்பிலும் ஏன்... ஒவ்வொரு வீட்டினுள்ளும் அரசோ, காவல் துறையோ தலையிட்டு சென்ஸார் செய்யலாகாதுதான்.

ஆனால், விபசாரத்துக்குக் கௌரவப் போர்வை அளித்து வியாபாரம் நடத்துவதைப் பார்த்துக் கொண்டிருக்கலாமா...?

வேறு பிழைப்பே அறியாத பெண்கள், தங்கள் உடலை கேளிக்கைக் கேந்திரங்களில் பிணைப் பொருளாக்கும் நிர்ப்பந்தத்துக்கு உள்ளாவது எவ்வாறு தனிமனித உரிமையாகும்!

தேர்வு செய்கிற உரிமையே இன்றி இந்தப் பெண்கள் மனிதப் பண்புகளுக்கு விரோதமான, அன்பற்ற காமச் சூழலில் கடினப்பட்டுப்போய் குரல் எழுப்பும் போது, அந்தக் குரலை உரிமைக் குரலாக மதித்து ஆதரவு கொடுக்க வேண்டுமா? அபயக் குரலாக உணர்ந்து அவர்களுக்கு மாற்றுச் சூழல் அமைக்க முற்பட வேண்டுமா?

மகளிர் அமைப்புகளும் மாரல் போலீஸிங்கைக் கடுமையாய் எதிர்ப்பவர்களும் யோசித்து, தெளிவு பெற்றுத் தெளிவூட்டுவது நல்லது. ●



''எனக்கு நூறு பிள்ளைகள்!''

நம் பிரச்னைகள் தீர்த்து, வழி நடத்திச் செல்லும் உருவத்தை நாம் எப்படி அழைப்போம்... 'கடவுள்' என்றுதானே! ஆனால், தமிழ்நாட்டிலுள்ள இருநூறுக்கும் மேற்பட்ட தேசிய, மாநில அளவிலான விளையாட்டு வீரர்கள் தங்களது கடவுளை எப்படி உச்சரிக்கிறார்கள் தெரியுமா...? நா...க...ரா...ஜ...ன்... என்று!

ப்ரைம் ஸ்போர்ட்ஸ் அகாடமியின் சீஃப் கோச்சான நாகராஜனை ஒவ்வொரு வீரரும் பூஜிக்கிறார்கள்... ஆராதிக்கிறார்கள்... நேசிக்கிறார்கள்!

அப்படியென்னதான் செய்துவிட்டார் அவர்?


''என்ன இப்படி கேட்டுட்டீங்க? எனக்கு அம்மா கிடையாது. சித்தி, சித்தப்பாதான் ரொம்ப கஷ்டப்பட்டு வளர்த்தாங்க. நான் பத்தாவது படிக்கும்போது பள்ளிகளுக்கிடையில் நடந்த போட்டியில என்னைப் பார்த்த நாகராஜன் சார், 'சென்னைக்கு வந்தா உன் விளையாட்டுத் திறமை இன்னும் பிரகாசிக்கும். நீ வந்துடு. உன் முன்னேற்றத்துக்கு நான் பொறுப்பேற்கறேன்'னு சொன்னார். வீட்டுக்கு பாரம் கொடுக்காம இருந்தா சரின்னு நானும் அவரை நம்பி விழுப்புரம்



கீழ்பெரும்பாக்கம் கிராமத்திலிருந்து சென்னை வந்தேன். என் பள்ளிப் படிப்புக்கு உதவினதோடு, தங்க இடம் பிடிச்சுக் கொடுத்து, வாடகை கட்டி, சாப்பாட்டுக்கு ஏற்பாடு பண்ணி, மாசா மாசம் செலவு செஞ்சார். +2 பாஸ் பண்ணதும் காலேஜிலும் சேர்த்துவிட்டு திக்குத் தெரியாம தவிச்சிட்டிருந்த என்னை, இன்னைக்கு ஹைஜம்ப்ல நேஷனல் ப்ளேயரா ஆக்கியிருக்கார். இப்ப சொல்லுங்க, நாகராஜன் சார் எனக்குக் கடவுள்தானே?" என்று நம்மையே கேள்வி கேட்டார், எம்.ஓ.பி. கல்லூரியில் பி.ஏ. படிக்கும் அமுதா.



• ரேவதி



• கே.என். ப்ரியா



• அமுதா

இவருக்கு மட்டுமல்ல, தமிழ்நாட்டின் பி.டி. உஷாவான கே.என். ப்ரியாவுக்கும் நாகராஜன்தான் காட்ஃபாதராம்.

"ஒரு தந்தை ஸ்தானத்தில் ஒவ்வொன்றையும் பார்த்துப் பார்த்து செய்வார். சொந்த பந்தங்களே பிரதி உபகாரத்தை எதிர்பார்க்கும் இவ்வுலகில் நாகராஜன் சார் மாதிரி ஒருவரைப் பார்ப்பது அரிது. உரிமையோடு எந்த நேரமும் அவரிடம் பண உதவி கேட்கலாம். இருநூறு பேருக்கும் மேற்பட்டவர்களுக்கு கோச் பண்ணியும், ஏழு சர்வதேச மற்றும் ஐம்பதுக்கும் மேற்பட்ட தேசிய அளவிலான ப்ளேயர்ஸை உருவாக்கி இந்தியாவின் தலைசிறந்த பயிற்சியாளராகியும் இதுவரை யாரிடமும் ஃபீஸாக ஒரு ரூபா கூட வாங்கியது கிடையாது. கிராமத்திலிருந்து கனவுகளை மட்டுமே சுமந்து வருபவர்களுக்காக, எந்தத் தியாகமும் செய்ய எந்நேரமும் தயாராக இருப்பவர் அவர். நாங்கள் செய்த புண்ணியம் அவர் எங்களுக்கு கோச்சாக இருக்கிறார்" என்று ப்ரியா கூறிக்கொண்டிருக்கும்போதே இடைமறித்த சர்வதேச ப்ளேயரான ரேவதி மற்றும் ஜெஸ்ஸி இருவரும்,

"தேர்வு சமயங்களில் ஹாஸ்டலை மூடிவிடுவதால் தங்குவதற்கும், சாப்பாட்டுக்கும் பிரச்னை ஏற்படும். அப்பொழுது நாகராஜன் சார்தான் பலருக்கும் தனியாக ரூம் எடுத்துக் கொடுத்து உதவி, மெஸ் பில்லையும் கட்டுவார். இதுபோல் பலருக்கும் செய்வதுதான் அவரது ஸ்பெஷாலிட்டி" என்றனர்.

கடம்பப்பட்டியிலிருந்து சென்னைக்கு வந்து படித்துக் கொண்டிருக்கும் மாரத்தான் ப்ளேயரான பாப்பாத்தி,

"தன்னிடம் பயிற்சிக்கு சேருபவர்களின் பர்சனல் வாழ்க்கையிலும் இவர் அக்கறை செலுத்துவதால், பெற்றோர் இவரை நம்பி எங்களை ஒப்படைத்து விடுகிறார்கள்" என்றார். பேசும்போது அனைவருமே ஆதங்கப்பட்ட ஒரு விஷயம், இந்தியாவின் நம்பர் ஒன் அத்லெடிக் கோச்சான நாகராஜனுக்கு, அரசாங்கம் உரிய மதிப்பும் ஆதரவும் தருவதில்லை என்பதுதான்.

இப்படி இளம் வீரர்களின் நம்பிக்கை நட்சத்திரமாகத் திகழும் நாகராஜனிடம் இது பற்றிக் கேட்டால்...

"இதெல்லாம் ஒண்ணும் பெரிய விஷயமில்லீங்க. ஒரு கோச் செய்ய வேண்டியதைத்தான் நான் செய்றேன்" என்று அமைதியாகச் சிரிக்கிறார்.

கலால் வரித் துறையில் பணிபுரிந்து கொண்டே, விளையாட்டுப் பயிற்சியாளராகவும் எப்படி இவரால் வெற்றிகரமாகச் செயல்பட முடிகிறது?



• ஜெஸ்சி

• பாப்பாத்தி

"தஞ்சாவூர் அருந்தவபுரம் கிராமத்தைச் சேர்ந்தவன் நான். சிறு வயது முதலே ஸ்போர்ட்ஸில் அதீத ஆர்வம். ஆனால், வீட்டிலோ சாப்பாட்டுக்கே பஞ்சம். என் குடும்ப நிலையையும் என் விளையாட்டு ஆர்வத்தையும் உணர்ந்த என் பி.டி. டீச்சரான சண்முகசுந்தரம், இறைவன் அனுப்பிய தூதராய் வந்து எனக்கு உதவினார். அவரின் வழிகாட்டுதலில் இந்திய அளவில் வெண்கலம் வெல்லும் வரை முன்னேறினேன். அன்றைக்கு நான் பட்ட துன்பங்கள் போல் யாரும் படக்கூடாது. எனக்கு ஒரு குருநாதர் கிடைத்தது போல் திறமையுள்ள வீரர்களுக்குக் கிடைக்க வேண்டும் என்று விரும்பினேன்... பயிற்சியாளராக இருந்து வருகிறேன். பணியோடு சேர்த்து இந்த மனதுக்குப் பிடித்தமான காரியத்தைச் செய்வதில் ஒருபோதும் எனக்கு சிரமமில்லை" என்று கண்கள் பனிக்கப் பேசியவர், "வெறும் பயிற்சி மட்டும் கொடுப்பதால் தான் அரசு கோச்சுகளால் பெரிய அளவில் ப்ளேயர்களை உருவாக்க முடிவதில்லை. ஒரு சமயம், எங்களது பிள்ளைகளுக்கு ஓட மைதானம் கிடைக்காது, பீச் மணலில் கால் கடுக்க பயிற்சி எடுத்த போது, உதவி செய்ய ஒருவரும் முன்வரவில்லை" என்று தன் ஆதங்கத்தையும் வெளிப்படுத்த தவறவில்லை.



• நாகராஜன்

'உங்கள் சம்பளப் பணத்தைக் கூட வீட்டிற்குக் கொடுக்காமல் பயிற்சிகளுக்கே செலவழிப்பீர்களாமே...?' என்று கேட்டால்,

"உண்மைதான். கடவுள் புண்ணியத்தில் எனக்கு அற்புதமான மனைவி வாய்த்திருக்கிறார். என்னைப் புரிந்தவராதலால், இதற்காக என்றுமே அவர் வருத்தப்பட்டதில்லை. என் இரு குழந்தைகளும் கண் விழிக்கும் முன் புறப்படுபவன், நள்ளிரவுதான் வீடு வந்து சேருவேன். என்ன செய்வது, எனக்காக நூறு பிள்ளைகள் கிரவுண்டில் காத்திருப்பார்களே..." என்கிறார்.

ம்... நாகராஜன் ஓர் அதிசயம்தான்!

- ச.ந. கண்ணன்

படங்கள்: ஸ்ரீஹரி



போட்டுத் தாக்கு!

நடிகர் விஜயகாந்திடம் கேட்கக் கூடாத பத்துக் கேள்விகள்...

1. உங்களுக்கு 'டாக்டர்' பட்டம் கொடுத்தா பயப்படாம வாங்கிக்கு வீங்களா?

2. வர்ற எலக்‌ஷன்ல உங்க வேட்பாளர் தொகுதிவாரியா எவ்ளோ ஓட்டு வாங்குவாங்கன்னு 'புள்ளி விவரத் தோட' சொல்ல முடியுமா?

3. அடிக்கடி 'பொங்கி எழுவோம்'னு சொல்றீங்களே... உங்களுக்கு என்ன கேஸ் ட்ரபிளா?

4. 'கேப்டன்'ங்கறது தமிழ்ப் பற்றுள்ள வார்த்தைதானா?

5. திண்டிவனத்துல நீங்க வேட்பு மனு தாக்கல் பண்ற மாதிரி அடிக்கடி உங்களுக்கு கனவு வருதாமே... உண்மையா?

6. நடிகர் சங்கத்துல பஞ்சாயத்து பண்ணும்போது நடுவுல சொம்பு வைச்சுப்பீங்களா?

7. நீங்க சின்னப்புள்ளையா இருக் கறப்போ 'அம்மா' செல்லம்னு கேள்விப்பட்டோம்... இப்பவும் அப்படித்தானா?

8. ஓட்டு கேட்கறதுக்கும் ஒண்ணரை இன்ச் மேக்அப்போடதான் போவீங் களா?

9. 'புலி வருது... புலி வருது'ங்கற போல உங்களை வச்சி அரசியல் படம் ஒண்ணு எடுக்கப்போறாங் களாமே..?

10. தமிழ்ல உங்களுக்குப் பிடிக்காத எழுத்து 'ழ'தானே...?

- பத்துக் கேள்வி பரமு



மூளைக்கு: போட்டித் தேர்வுகளுக்குத் தயாராகிக் கொண்டிருக்கிறீர்களா? ஏதாவது சாஃப்ட்வேர் கம்பெனிகளின் எழுத்துத் தேர்வுக்குத் தயார் செய்கிறீர்களா? அதற்கு உங்கள் மூளையைச் சாணை பிடிக்கிறது brainbashers.com 'உங்க அம்மாவோட, ஒரே தங்கச்சியோட, மகனோட, அண்ணனோட, சித்தியோட மகளோட தங்கச்சியோட அப்பா யாரு?' இப்படி டிரில் வாங்கும் பஸில்கள் ஆயிரக் கணக்கில்! தலையைச் சுற்ற வைக்கும் illusions -ம் நிறைந்துள்ளன. பஸில்லை நேசிப்பவர்கள் கொண்டாடும் தளம் இது.




டௌன்லோட்: நம் சிஸ்டத்தில் தேவையில்லாத பைல்கள் ஏதாவது சேர்ந்துகொண்டே இருக்கும். ரெஜிஸ்டரி (Registry) வேறு தேவையில்லாமல் நிரம்பி, இடத்தை அடைத்துக் கொண்டிருக்கும். டூப்ளி கேட் ஃபைல்கள், தேவையற்ற பேக்அப் ஃபைல்கள், குக்கீஸ், தேவையற்ற சார்ட் கட்ஸ் என சிஸ்டத்தின் ஸ்பேஸை எவை எவையோ அபகரித்துக் கொண்டிருக்கும். இந்தக் குப்பைகளை நீக்கி, சிஸ்டத்தை பளிச்சென மாற்றிட இலவசமா

'ஓ'போடு!

கக் கிடைக்கிறது ஈஸி க்ளீனர். http://personal.inet.fi/business/toniarts/ecleane.htmக்கு உடனே போங்க.

தமிழ்: தமிழ் தெரியாதவர்களும், தமிழ் வாசிக்கத் தெரியாதவர்களும் திருக்குறளை தமிழ் உச்சரிப்போடு வாசித்து அர்த்தம் அறிந்து பிறவிப் பயனை அடைய வழிவகுக்கிறது www.penkatalai.org ஒவ்வொரு குறளையும், அதிகார வரிசைப்படி முதலில் தமிழில், கீழே அதை எப்படி உச்சரிக்க வேண்டுமென ஆங்கிலத்தில், பின் ஆங்கிலத்தில் அதன் அர்த்தம் எனக் கொடுத்து விளக்கியுள்ளார்கள். குறுந்தொகை, திருமந்திரம், ஐங்குறுநூறு, பாரதியார் பாடல்கள் சிலவற்றையும் அழகாகத் தந்துள்ளார்கள்.



ஸ்டார்: அந்நியனில் அதிக முடியோடு வரும் விக்ரமின் சின்ன வயது மொட்டைப் படம்தான் மேலே காண்பது! விக்ரமின் அர்ப்பணிப்பு அவரது தளத்திலும் தெரிகிறது. அழகான வடிவமைப்பு மூலம் (www.chiyaanvikram.com). சியான் ரசிகர்கள் 'ஓ போட்டு' ரசிக்கலாம்.

- ப்ரௌஸர்

சர்ச்சை

'கோமியோப்தி

ஆந்திராவில் பசு கோமியத்தின் விற்பனை 'கோக்' விற்பனைபோல் ஆகிவிட்டது. அட! இதென்ன கூத்து என்கிறீர்களா?

'தோல் வியாதி நீங்க, சர்க்கரை நோய் தீர, சிறுநீரக, கல்லீரல் நோய்கள் குணமாக, இரத்த அழுத்த பாதிப்பு குறைய, இன்ன பிற வியாதிகள் நம்மை விட்டோட, ஒரே மருந்து கோமியம்தான்' என அதை பிளாஸ்டிக் பாட்டிலில் அடைத்து விற்கும் வியாபாரம் சூடுபிடித்துவிட்டது. சொல்லப்போனால் குடிசைத் தொழிலாகவே மாறிவிட்டது. பண்ணைகளில் மொத்தமாக பால் மாதிரி 'கொள்முதல்' வேறு செய்கிறார்களாம். 'ஃப்யூரிபைடு கோமூத்ரம் ஆர்க்' என லேபில் ஒட்டி, ஒரு தனியார் கம்பெனியும் மினரல் வாட்டர் ரேஞ்சுக்கு வியாபாரத்தை ஆரம்பித்துள்ளதாம். நிற்க... இதில் எத்தனை சதவிகிதம் உண்மை? ஆராய வேண்டாமா! களத்தில் இறங்கினோம்.

முதலில் நாம் பேசியது சென்னை கால் நடை மருத்துவக் கல்லூரி டீன் முனைவர் ப.தங்கராகவிடம்.

"இது சம்பந்தமா எதுவும் ஆராய்ச்சி பண்ணியிருக்காங்களா? எதுவும் ரிப்போர்ட் இருக்குதா? ஏதாவது டாக்டர் சர்டிபிகேட் கொடுத்திருக்காரா? கோமியம் குடிச்ச இத்தனை பேருக்கு சிறுநீரகக் கோளாறு தீர்ந்திருக்கு, இத்தனை பேருக்கு இரத்த அழுத்த நோய் குணமாயிருக்கு அப்படின்னு நிரூபிச்சிருக்காங்களா? எதுவும் கிடையாது. இது முழுக்க முழுக்க மக்களை ஏமாத்துற வியாபாரம். பணம் சம்பாதிக்கிற குறுக்குவழி. எதைச் சொன்னாலும் நம்புற மக்கள், கண்மூடித்தனமா இதையும் நம்புறாங்க. இது இன்னும் கொஞ்ச நாளைக்கு நீடிக்கும். அப்புறம் மறைஞ்சு போயிடும். எனக்குத் தெரிஞ்சு நம் முன்னோர்கள் கோமியம், சாணக் கரைசல் இதையெல்லாம் வாசல் தெளிக்க உபயோகிச்சாங்க. காரணம் என்னன்னா, அப்பல்லாம் செருப்பு கிடையாது. வெளிய நடந்து போயிட்டு வீட்டுக்குள் வரும்போது சாணம் மெழுகிய முற்றத்தை மிதிச்சா, கால்ல இருக்கிற கிருமிகள் சாகும்னு சொல்லுவாங்க. சொல்லப்போனா கோமியத்துல பெரும்பகுதி நீர்தான். ஒரு சதவிகிதத்திற்கும் குறைவாத்தான் யூரியா மற்றும் இதர பொருட்கள் இருக்கு. அதுல எந்த அளவுக்கு மருத்துவ குணம் இருக்க முடியும்? சொல்லப்போனா, 'லேப்டோஸ்





• கால்நடைக் கல்லூரி...

பைரா' முதலிய நோய்களால் கால்நடைகள் பாதிக்கப்பட்டிருந்தா, கோமியம் மூலம்

பகீர்!

நோய்கள் பரவ அதிக வாய்ப்பு இருக்கிறது'' என் அதிர்ச்சியான தகவலுடன் முடித்தார்.

பொது மருத்துவரான சி.பி.சுகுமாரிடம் இதை முன் வைத்தபோது,

''மொரார்ஜி தேசாய் சிறுநீரைக் குடிக்கச் சொன்னாரே, அது மாதிரிதான் இதுவும்! மக்களை ஏமாத்தி பணம் சம்பாதிக்கறதுக்கான வழி! பசு கோமியம் அதிகபட்சம் கிருமி நாசினியா உபயோகப்படலாம். மத்தபடி பார்த்தா, ரத்தத்துல இருக்கிறதெல்லாம் சிறுநீர்லயும் வெளிவரும். அதனால ரத்தத்துல உள்ள நோய்க்கிருமிகள், சிறுநீர் மூலமா வெளி வரும். எந்த நம்பிக்கையில மக்கள் வாங்கிக் குடிக்கிறாங்கன்னு தெரியல. இது அபாயகரமான விஷயம்தான்'' என்று எச்சரித்தார்.

இதற்கு சித்த மருத்துவம் என்ன சொல்கிறது? மூலிகை மணி டாக்டர் வேங்கடேசனிடம் பேசினோம்.

''தொன்றுதொட்டு 'நஞ்சு நீக்கி'யா பசுவோட கோமியம் எங்க மருத்துவத்துல பயன்படுது. அதாவது மூலிகைகள், விதைகளிலுள்ள நஞ்சை நீக்கி சுத்தப்படுத்த உபயோகப்படுது. மத்தபடி கோமியம் குடிச்சா, நோய் குணமாகும் அப்படின்னு எதுவுமே கிடையாது. எனக்குத் தெரிஞ்சு இதைப் பத்தி எந்த ஆராய்ச்சியும் இந்தியாவுல நடந்தது இல்ல!'' என விளக்கம் கொடுத்தார்.

''**ஆ**ந்திராவில் சூடு பிடித்திருக்கும்



• சுகுமார்



• வேங்கடேசன்

கோமிய வியாபாரம், எப்போது வேண்டுமானாலும் தமிழ்நாட்டுக்குள் வரலாம். விழிப்பாய் இருக்க வேண்டியது நமது ஒவ்வொருவரின் கடமை'' என்கின்றனர் ஒட்டுமொத்தமாய் மூவரும்.

- முகில்

பின்கதைச் சுருக்கம்

உறைந்த சிரிப்பு!

அவர் பெயரை முதன்முதலில் கேள்விப்பட்டபோது, ஆண்மை விருத்தி லேகியம் விற்கும் லாட்ஜ் வைத்தியர் போன்றதொரு பிம்பம்தான் முதன் முதலில் எனக்குள் எழுந்தது.

1990 அல்லது 91ம் வருடம். கணையாழியில் அவரது குட்டியாப்பா சிறு நாவல் வெளியானது. மிகவும் அசுவாரஸ்யமாகத்தான் படிக்க ஆரம்பித்தேன். வழக்கமானதொரு முஸ்லிம் சமூகப் பின்னணியுடன் கூடிய கதையாகத்தான் தெரிந்தது. ஆனால் பத்திருபது வரிகள் கடந்ததும் சடாரென்று கதையோட்டத்தின் வேகம் அதிகரிக்க ஆரம்பித்தது. ஒரே ஒரு நபரின் உலகைச் சித்திரிப்பதன் மூலம் ஒரு சமூகத்தின் குறுக்குவெட்டுத் தோற்றத்தையே படம்பிடித்துக் காட்டிவிடக்கூடிய லாகவம்.



இதெல்லாம் கூடப் பிரமாதமில்லை. கதைத் தொழில்நுட்பம் பிடிபட்ட யாரும் செய்துவிடக்கூடிய விஷயங்கள்தான். ஆனால், உயர்தரமான நகைச்சுவை அந்தக் கதையின் ஒவ்வொரு சொல்லின் ஊடாகவும் பரவிப் பொங்கிக் கொண்டிருந்தது. வெறும் சொற்களில் விவரித்துவிடக்கூடிய நகைச்சுவை இல்லை அது. மாறாக, நாடி நரம்புகள் அனைத்தின் உள்ளேயும் புகுந்து ரசவித்தை புரிந்து, வாசிக்கும் ஒவ்வொருவரையும் கண்ணில் நீர்வரும் அளவுக்குச் சிரித்துச் சிரித்துப் பொடிப் பொடியாக்கிப் போடும் நகைச்சுவை. கதையைப் படித்து முடிக்கும்வரை தாங்க முடியாமல் சிரித்துக் கொண்டே இருந்தேன். வாசித்து முடிக்கும்போது என் சிரிப்பு அப்படியே உறைந்துபோய் மணிக்கணக்கில் பேச்சு மூச்சில்லாமல் ஆனேன்.

குட்டியாப்பாவை நான் முதன் முதலில் வாசித்த காலத்தில் நாகூர் ரூமியுடன் எனக்கு அறிமுகம் கிடையாது. யார் இவர், யார் இவர் என்று பார்க்கிறவர்களிடமெல்லாம் கேட்டுக் கொண்டிருந்தேன். யாருக்கும் அவரை அப்போது தெரிந்திருக்கவில்லை. அதாவது, எனக்குத் தெரிந்த யாருக்கும். பின்னால் சுமார் நூறு முறையாவது அந்தக் குறுநாவலை வாசித்து வாசித்து கமா, முற்றுப் புள்ளிகள் வரை மனப்பாடம் ஆகிப்போன பிறகு தற்செயலாக ஒருநாள் எழுத்தாளர் இரா.முருகனின் வீட்டில் அவரைச் சந்திக்க நேர்ந்தது.



* நாகூர் ரூமி

"இவர்தான் நாகூர் ரூமி. ஆம்பூரில் ஒரு கல்லூரிப் பேராசிரியர்" என்று முருகன் அறிமுகப்படுத்தி வைத்தார்.

ஜீன்ஸ் போட்ட அகத்தியர் மாதிரி இருந்தார் அவர். ஆனால் சீர்காழி கோவிந்தராஜன் மாதிரி உருண்டை அகத்தியர் இல்லை. ஈர்க்குச்சி கனம் தான். 'வணக்கொம்ம்ம்' என்று லேசான ராகத்துடன் இழுத்தபோது குரலில் லதா

மங்கேஷ்கர் தெரிந்தார். அறிமுகத்துக்கு அவர் கொடுத்த விசிட்டிங் கார்டில் 'Dr. A.S. Mohammed Rafee, Reader in English, Writer in Tamil' என்றிருந்தது. மிகவும் குசும்பு பிடித்த ஆசாமியாக இருப்பார் என்று நினைத்தேன். கம்பனையும் மில்டனையும் ஒப்பாய்வு செய்து டாக்டர் பட்டம் பெற்றவர் என்று இரா.முருகன் சொன்னார்.

பார்த்தமாத்திரத்தில் ரூமியிடம் அவரது 'குட்டியாப்பா' குறித்துப் பேச ஆரம்பித்து விட்டேன்.

குட்டியாப்பா (என்றால் சித்தப்பா என்று அர்த்தம்) ஒரு நிஜமான மனிதரின் வாழ்க்கைக் கதை. அவர், ரூமியின் மாமனார். வெள்ளை மனசும் கொள்ளைச் சிரிப்பும் விநோதமான ஆங்கிலமும் அதன் விவகாரமான பிரயோகங்களும் அவரது சிறப்பம்சங்கள்.

பேராசிரிய மாப்பிள்ளைக்கு மத்தியானச் சாப்பாடு எடுத்துக்கொண்டு கல்லூரிக்குப் போய், அத்தனை பேராசிரியர்களையும் வினாடி நேரத்தில் தன் தோழர்கள் ஆக்கிக் கொண்டு விடுவார்.



5 பா.ராகவன்

'இன்ஷா அல்லாஹ், வர்ற வெலாயக் கெலமெ நம்ம வூட்லே உங்களுக்கு ஒரு அலாட்மெண்ட் உண்டு' என்று சொல்லி மடக்கி விடுவார். குட்டியாப்பாவின் அலாட்மெண்டுக்கு விருந்தென்று பொருள். 'எல்லாருக்கும் எப்பவும் ப்ராப்ளமாத்தான் இருக்கணும் தம்பி' என்று குட்டியாப்பா சொல்வதைச் சரியாகப் புரிந்து கொள்ளாவிட்டால்தான் பிரச்னை. அவரது ப்ராப்ளத்துக்கு உபகாரம் என்று அர்த்தம். எங்கு போனாலும் பஸ்ஸில் 'ரிவர்ஸ்' செய்து (ரிசர்வ் செய்து) போகிற குட்டியாப்பா, நாலு நாளாகக் கண்ணில் 'ப்ளீடிங்' என்று (நீர் வடிவது!) டாக்டரிடம் போக விரும்புகிற குட்டியாப்பா, தன்னை மதிக்காமல் தன் வாழ்க்கையையே dash பண்ணி விட்டதாக (அழித்துவிட்டதாக) மனைவி குறித்து வருத்தப்படும் குட்டியாப்பா, டாக்டர் வந்து ஊசி போட்டதும்தான் வயிற்று வலி pick-up ஆனது



வருத்தம்

திருமாவளவன் அல்சர் காரணமாக, கார உணவுகளைத் தவிர்த்து வருகிறார். 'மாநாடு, கூட்டம் என்று நேரம் பாராமல் அலைந்ததால் தான் அண்ணனுக்கு இப்படியாகிவிட்டது' என்று வருத்தப்படுகின்றனர் தொண்டர்கள்.

(சரியானது!) என்று அதிர்ச்சி வைத்தியம் கொடுக்கும் குட்டியாப்பா...

உடல்நலம் முற்றிலும் கெட்டு, மருத்துவமனையில் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தபோது கூட வாழ்வின் மீது தீராத காதலுடன் இருந்தவர் அவர். தன்னை முற்றிலும் குணப்படுத்திய பிறகே வீட்டுக்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்பதை 'தம்பி, இங்கெருந்து போவும்போது bodyயெ close பண்ணித்தான் கொண்ட்டு போவணும்' என்றிருக்கிறார்.

தன் ஆங்கிலத்தின் அர்த்தம் அல்லது அனர்த்தம் குறித்து அவர் ஒரு போதும் யோசித்ததில்லை. எந்தச் சொல்லுக்கும் எந்த இடத்திலும் பொருத்தம் உண்டாக்கும் அவரது லாகவம், மொழி குறித்த பிம்பங்களைச் சுக்குநூறாக உடைக்க வல்லது.

ரூமியிடம் ஒரு சமயம், இந்தக் கதையில் வரும் குட்டியாப்பாவுக்கும் நிஜ குட்டியாப்பாவுக்கும் எத்தனை இடைவெளி உண்டு என்று கேட்டேன்.

"நான் கதையாகவே அதை எழுதவில்லை. அந்த மனிதரின் கூடவே இருந்து பார்த்ததை ரிப்போர்ட் செய்தேன். அவ்வளவுதான்" என்று சொன்னார்.

வாசிக்கிற நமக்குத்தான் குட்டியாப்பாவின் ஆங்கிலமும் அவரது நடவடிக்கைகளும் சிரிப்பை வரவழைக்குமே தவிர, தன் வாழ்நாள் முழுவதும் படு சீரியஸாக வாழ்ந்து முடிந்து போனவர் அவர்.

மத்தியதர, கீழ் மத்தியதர இஸ்லாமிய சமூகத்தினரின் வாழ்க்கை நிலையை ரூமியின் கதைகள் தொடர்ந்து மிகை கலப்பின்றி படம் பிடித்து வருபவை. நகைச்சுவை என்று அவரது எழுத்தில் நமக்குக் காணக் கிடைக்கும் அம்சங்கள் அத்தனையுமே பாத்திர வார்ப்பில் தட்டுப்படுபவை தானே தவிர, நகைச்சுவைக்கென்று தனியொரு சம்பவத்தை உற்பத்தி செய்யும் எழுத்தாளர் இல்லை அவர். குட்டியாப்பா என்றில்லை... அவரது முதல் படைப்பு தொடங்கி மிகச் சமீபத்தில் வெளியான அவரது 'திராட்சைகளின் இதயம்' நாவல் வரை இந்தப் பாணியைத்தான் ரூமி தொடர்ந்து கடைப்பிடித்து வந்திருக்கிறார்.

'குட்டியாப்பா' கதையில் ஒரு காட்சி... குட்டியாப்பா இறந்துவிட்ட செய்தி வருகிறது. கார் எடுத்துக் கொண்டு நெருங்கிய உறவினர்கள் நாலு பேர் மருத்துவமனைக்குப் போக அவசரமாகக் கிளம்புகிறார்கள். அவரவருக்கு ஆயிரம் கவலைகள்.

குட்டியாப்பாவின் சம்பந்தி ஒருவர் கேட்கிறார், "வூட்ட பூட்டி சாவிய யாராண்ட குடுக்க?"

"மேல ஷஃபி வூட்ல குடுத்துடுங்க."

"சரி தம்பி... தோசெ மாவு இரிக்கிதே, அதெ என்னா செய்ய?"

இதுதான்... இந்த அம்சம்தான் படைப்பை பதப்படுத்தி, பத்திரப்படுத்தி தலைமுறைகள்தோறும் அறிமுகம் செய்து வைக்கிறது.

(தொடரும்)

மினி கதை

- மு.ஜெகநாதன்



வலி

திருநெல்வேலி பேருந்தில் ஏறி ஜன்னலோரமாய் அமர்ந்தேன். அடுத்தடுத்து ஆட்கள் வந்தமர, பஸ் கிளம்பியது. திருநெல்வேலி போய்ச் சேர ஒன்றரை மணி நேரம் ஆகும்.

பின்னால் போகும் மரங்களையும், கட்டடங்களையும் பார்த்துக்கொண்டு, சுவர்களில் எழுதியிருக்கும் விளம்பரங்களை வாசித்தவாறே நேரம் போக்கினேன். பலமுறை பார்த்துப் பழகிய இடங்களானாலும் பஸ்ஸில் ஜன்னலோரமாய் அமர்ந்து வேடிக்கை பார்ப்பதில் சிறியவர்களானாலும், பெரியவர்களானாலும் ஒரு வித குதூகலம் இருக்கத்தான் செய்கிறது.

திடீரென்று என் தோள்மீது கனமாய் உணர்ந்தேன். பக்கத்தில் அமர்ந்திருந்தவர் தூக்கத்தில் என் மீது சாய்ந்திருந்தார். அவரை எழுப்பி நேராக அமரச் செய்தேன். கொஞ்ச நேரம்தான். மீண்டும் சாய்ந்து விட்டார். இப்போது நான் அவரை எழுப்பவில்லை. இரவில் கண் விழித்து வேலை பார்த்திருப்பாரோ! அல்லது உடல்நலக் குறைவாக இருக்குமோ! பாவம்! தூங்கட்டும் என்று விட்டுவிட்டேன்.

ஆலங்குளத்தை கடந்து பஸ் சென்று கொண்டிருந்தது. இப்போது தோள் வலிக்க ஆரம்பித்தது. ஆள் கொஞ்சம் கனமாகத்தான் இருந்தார். நேரம் ஆக ஆக சிரமமாய் இருந்தது. சரி இன்னும் கொஞ்ச நேரம்தானே என்று தாங்கிக் கொண்டேன்.

பஸ் ஜங்ஷன் வந்து சேர்ந்தது. அவரை எழுப்பிவிட்டேன். அவர் இறங்க, பின்னாலே நானும் இறங்கினேன். மறுகையால் தோளை பிடித்துவிட்டு கைகளை நன்கு உதறிக் கொண்டேன். வலி!

அவர் இறங்கவும் ஒருவர் எதிர்கொண்டு வந்தார். அவருக்காகக் காத்திருந்தவர் போலும். வந்தவர் கேட்டார்.

''என்ன மாப்ளே, இவ்வளவு லேட்டு? பஸ்ல நல்லா தூங்கிட்டீங்க போல இருக்கு''

இவர் சொன்னார்... "ஆமா மச்சான்... நேத்து நைட்டு பார்ட்டி. ஃபுல் மப்பு. செகண்ட் ஷோ சினிமா வேற. அதான் பஸ்ல உக்காரவும் அசத்திருச்சி..''

இப்போது எனக்குத் தோளோடு சேர்ந்து இதயமும் வலித்தது. ●

பேச்சுலர் சமையல்

'என்ன, அரசியல் பேட்டியா?' என்றுதான் பத்திரிகையாளர்களை வரவேற்கிறார் இராம. கோபாலன். கேட்டால், 'அப்படியே பழக்கப்படுத்திட்டாங்கப்பா' என்று சிரிக்கிறார். சமையல் பற்றிக் கேட்டதும் உற்சாகமாக பேச ஆரம்பித்து விட்டார்.

''என்னைப் பொறுத்த வரைக்கும் சாப்பாடுங்கறது குறைச்சலான செலவுல இருக்கணும். அதே சமயம் ஆரோக்கியத்தைத் தரலைன்னாலும் உடம்பைக் கெடுக்காத மாதிரி இருந்தா, அதுதான் உண்மையான சாப்பாடு'' என்று அதிரடியாகப் பேசத் தொடங்கியவரின் குறுக்கே புகுந்து, 'கிச்சன் எங்கே?' என்றோம்.

ஏதோ ஜோக் கேட்டது போல் சிரித்தவர், ''அப்படி ஒரு விஷயமே என் வீட்ல இல்ல. நான் மாசத்துல இருபத்தஞ்சு நாள் தொடர்ந்து டூர்லதான் இருப்பேன். வீட்ல தங்கறது ரொம்பக் குறைச்சல். அப்படி இருந்தாலும் வெளிச் சாப்பாடு தான். வெளிச் சாப்பாடுன்னா ஹோட்டல்லருந்து வராது. நண்பர்கள் சமைச்சுக் கொடுத்து விடுவாங்க. வெளியூருக்குப் போகும் போதும் ஹோட்டல்ல நான் சாப்பிட மாட்டேன். எந்த ஊருக்குப் போறேனோ, அந்த ஊர் நண்பர்கள் வீட்லதான் விருந்து'' என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே அவருக்கு மதியச் சாப்பாடு வருகிறது. ஒரு கிண்ணம் சாதம், சாம்பார், ரசம், மோர், புடலங்காய் பொரியல்... இதுதான் அன்றைய மெனு. ரசித்துச் சாப்பிட்டபடியே, தனது அம்மாவின் கைப்பக்குவம் பற்றி சிலாகித்துப் பேசுகிறார்...



“அம்மாவுக்கு ஈடில்லை!”

- இராமகோபாலன்



“எங்க அம்மா செய்து போட்ட மல்லிப்பூ மாதிரியான இட்லி, முறுகலான தோசை, கொத்துமல்லிச் சட்னிக்கு முன்னாடி யாரோட சமையலும் நிக்க முடியாது. என்னைக் கேட்டா உணவு விஷயத்துல அம்மாவுக்கு யாரும் ஈடில்லைன்னுதான் சொல்லுவேன். இதை நான் ‘பேச்சலர்’ங்கறதால தைரியமா சொல்வேன். கல்யாணமானவனா இருந்தா இந்நேரம் வீட்ல நடக்கற கதையே வேற”

“நீங்களே சமைத்துச் சாப்பிட்டதே இல்லையா?”

“ஏன் இல்ல... சமயத்துல போரடிக்கும்போது சாதம் பண்ணிச் சாப்பிடுவேன். என் வீட்ல எப்போதுமே பருப்புப் பொடி, கறிவேப்பிலை பொடி, தேங்காய் பொடி, மிளகு - ஜீரகப் பொடி எல்லாம் தயாரா இருக்கும். சாதம் வடிச்சு, இந்தப் பொடியை மிக்ஸ் பண்ணி நெய் விட்டுப் பிசைஞ்சு சாப்பிடுவேன். ஈஸியா வேலை முடிஞ்சுடும். இந்தப் பொடி டெக்னிக்கை எல்லா பேச்சலர்ஸுமே பயன்படுத்தலாம்.”

“சரி, எங்களுக்காக ஒரு டிஷ் செய்யுங்களேன்...”

“செய்து காட்டணும்னு ஆசைதான். ஆனா, வீட்ல ஒண்ணுமே இல்லையே... நான் என்ன பண்றது! என் சமையல் அனுபவங்களே நான் செஞ்சு காட்டின திருப்தியைக் கொடுக்கும். சொல்றேன் கேளுங்க” என்றபடி தொண்டையை கரகரத்து ஆரம்பித்தார்...

“ஒரு தடவை என் நண்பர்கள் எல்லாரும் சேர்ந்து ‘மைசூர் ரசம்’ வைக்கப் போறதா பிளான் பண்ணினாங்க. ஒருத்தர் புளியைக் கரைக்கறது, இன்னொருத்தர் உப்பு போடறதுன்னு, ஏதேதோ குளறுபடி பண்ணி ஒரு வழியா ‘மைசூர் ரசம்’ங்கற பேர்ல ஒரு ஜலம் ரெடி. அதை சாதத்துல ஊத்தி சாப்பிட, வாய்ல வைக்க முடியல. ஆனாலும் ‘ரசம்... பிரமாதம்’னு சொல்லிட்டு கிளம்பிட்டேன். அப்புறம்தான் தெரிஞ்சது அந்த ரசத்தை சாப்பிட்ட என் நண்பன் ஒருத்தனுக்கு வாந்தி எடுத்து உடம்பு சீரியஸாயிடிச்சின்னு. அதை நினைச்சா இப்பக்கூட அடிவயிறெல்லாம் கலங்குது” என்றவரிடம்,

“நவீன கலாசாரமான நூடுல்ஸ், பீஸாவையெல்லாம் சாப்பிடறதுண்டா?” என்றோம்.

“தொடறதே இல்ல. அது நம்ம நாட்டு உணவில்லைங்கறது ஒரு பக்கம் இருந்தாலும் எப்படிச் சாப்பிடறதுன்னு புரிய மாட்டேங்குது, அதுதான் உண்மை” என்று சிரிக்கிறார் இராம. கோபாலன்.

- இரா. முத்துக்குமார்

படம் : ஸ்ரீஹரி

என் கைகள் மிகவும் வறண்டு போயிருக்கின்றன. சரி செய்வது எப்படி?

- உமா, புதுடெல்லி

எம்.ஹசீனா சையத், ஆயுர்வேத அழகுக்கலை நிபுணர் :

பத்து அக்ரூட் பருப்புகளை எடுத்துக் கொள்ளுங்கள். இதோடு ஒரு டீஸ்பூன் தேனைக் கலந்தால் கூழ்போல் ஆகும். அரை டீஸ்பூன் எலுமிச்சைச் சாறு, நூறு கிராம் தயிர் ஆகியவற்றையும் இதில் நன்கு கலந்து ஒரு க்ரீம் போல் ஆக்குங்கள். இதை ஃப்ரீஸரில் முப்பது நிமிடங்கள் வைக்க வேண்டும். பிறகு இந்த க்ரீமை எடுத்து கைகளில் தடவிக் கொள்ளுங்கள். பதினைந்து நிமிடங்களுக்குப் பிறகு கைகளைத் தண்ணீரில் கழுவுங்கள். தொடர்ந்து இதைச் செய்தால் கைகளில் உள்ள வறண்ட தன்மை மட்டுமல்ல, கருமையும் நீங்கிவிடும்.

எனக்கு நாற்பது வயது. அரசாங்க வேலை. கடந்த ஒரு வருடமாக பீரியட் ஒழுங்காக வருவதில்லை. மூன்று மாதங்களுக்கு ஒருமுறைதான் மாதவிலக்கு ஆகிறேன். அடிக்கடி படபடப்பு ஏற்படுகிறது. உடம்பு சூடு அதிகமாகிறது. மூட் அவுட் அடிக்கடி நிகழ்கிறது. இது எல்லாம் தானாகச் சரியாகிவிடும் என்று விடலாமா? அல்லது உடனே மருத்துவரைப் பார்க்க வேண்டுமா?

- உஷா, மும்பை

டாக்டர் அனிதா பார்த்தசாரதி, மகப்பேறு மருத்துவர் :

அலட்சியமும் செய்யக் கூடாது. அதே சமயம் கலவரப்படவும் தேவையில்லை. நம் உடலின் சில செயல்பாடுகளை அறிந்துகொள்ள வேண்டியது அவசியம். மாதவிலக்கு நிற்கிற சமயத்தில் சினைப் பையில் வேலைப்பாடுகள் குறையத் தொடங்கும். எனவே ஹார்மோன்களில் மாறுதல்கள் ஏற்படும். கைனகாலஜிஸ்டை அணுகினால் தகுந்த ஆலோசனை கூறுவார். அல்லது மருந்துகள் பரிந்துரைப்பார். சிலவகை ஹார்மோன் குறைபாடுகளைச் சரிசெய்ய மருந்துகள் எழுதித் தருவார்.

இரண்டு வயதுக் குழந்தைக்கு வாந்தியும் பேதியும் ஏற்பட்டால் என்ன செய்யலாம்?

- கலா, கன்னியாகுமரி

டாக்டர் ஜெயந்தி விஸ்வநாதன், குழந்தை நல மருத்துவர் :

அரை நாளுக்குள் ஏழெட்டு முறை வாந்தி எடுத்தாலோ, 10-12 முறை நீர்த்தும் அதிக அளவிலும் பேதி ஆனாலோ மருத்துவரை அணுகுங்கள். மற்றபடி இரண்டு மூன்று நாட்கள் பொறுத்திருப்பதில் தவறில்லை. காய்ச்சலும் இருந்து மலம் சளியோடும் பச்சையாகவும் வெளியேறினால்

உள்ளே ஒரு

வைரஸ் அல்லது பாக்டீரியாவினால் குழந்தை பாதிக்கப்பட்டிருக்கிறது என்று பொருள். மருந்து கொடுத்துத்தான் சரியாக்க முடியும். உணவில் நச்சுப் பொருள்கள் கலந்திருந்தால் அதைச் சாப்பிட்ட 12லிருந்து 24 மணி நேரத்துக்குள் வயிற்றுப் போக்கு தொடங்கிவிடும்.

வாந்தி, பேதி ஏற்பட்டால் இரண்டு வயதுக்குட்பட்ட குழந்தை என்றால் குறைவாகப் பால் கொடுங்கள். அதற்கு மேற்பட்ட குழந்தை என்றால் எண்ணெய் கலக்காத உணவு கொடுங்கள். தாய்ப்பால் கொடுப்பதை நிறுத்த வேண்டும் என்பதில்லை.

டாக்டரை அணுகி எந்த வகை திரவத்தை அளிப்பது என்று தீர்மானித்துக் கொள்ளுங்கள். நீரில் குளுக்கோஸ் மற்றும் உப்பு கலந்த நீரைக் கொடுக்கலாம். ஆனால், இவற்றை எந்த அளவிலான கலவையாகக் கொடுப்பது என்பதை டாக்டரிடம் கேட்டு உறுதி செய்து கொள்ளுங்கள்.

எதையும் சாப்பிடவும் மறுத்து, பத்து மணி நேரத்துக்கு மேல் சிறுநீர் கழிக்காமல் நாவும் வறண்டு போனால் உடனடியாக டாக்டரை அணுகவும்.

சக்தி!

வீட்டில் அம்மாவுக்கு மனச் சங்கடம் உருவாகும் சூழ்நிலை ஏற்படும்போதெல்லாம் அம்மா தனி அறையில் சம்மணம் போட்டுத் தியானம் செய்வதுபோல் செய்கிறார். கொஞ்ச நேரத்தில் ஊ... ஊ... என்று சத்தம் எழுப்புகிறார். கேட்டால் 'என்னைத் தொந்தரவு செய்யாதீர்கள். எனக்குள் ஒரு சக்தி வருகிறது. கொஞ்ச நேரத்தில் சரியாகிவிடுவேன்' என்று கூறி அப்படியே சரியாகியும் விடுகிறார். இதை ஹிஸ்டீரியாவின் ஆரம்ப நிலை என்கிறார் அப்பா. மருத்துவரிடம் செல்ல வேண்டுமா?

- டி.சாந்தி, விளமல்

டாக்டர் ஜெயந்தினி, மனநல மருத்துவர் :

உங்கள் அப்பா கூறுவது சரிதான். இப்போதைக்கு உங்கள் அம்மாவால் தன்னை ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடிகிறது. தனது கோபம் அல்லது கவலைக்கு ஒரு மாற்றாகவோ, வடிகாலாகவோ அவர் இப்படிச் செய்கிறார். ஆனால் இந்த நிலை எவ்வளவு நாட்களுக்குத் தொடரும்? தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாத நிலை நாளடைவில் தோன்றலாம். தவிர, சங்கடங்கள் வெளி இடங்களில் ஏற்பட்டால், அவர் என்ன செய்ய முடியும்? எனவே மனநல மருத்துவரிடம் உங்கள் அம்மாவை அழைத்துச் செல்வதுதான் நல்லது. மருந்து கொடுக்க வேண்டும் என்பது இல்லை. ஹிஸ்டீரியாவின் ஆரம்ப கட்டம் என்றால் ஆலோசனைகளே கூடப் போதுமானது. மனத் தவிப்பின் காரணத்தை அறிந்துகொண்டு அதை மாற்ற முயற்சிப்பதுதான் புத்திசாலித்தனம்.

-ஜி.எஸ்.எஸ்.



பீதி என்பது பகவானை அடைவதற்கான நான்காவது படிக்கட்டு. வைராக்கியம் வந்தவர்களுக்கு மட்டும்தான் அது ஏற்படும். வைராக்கியம் இல்லாதவர்களுக்கு பீதி வரவே வராது.

ஐந்தாவது படிக்கட்டு பிரசாத ஹேது. அவன் அனுக்ரஹத்தைச் சம்பாதிக்க நாம் என்ன பண்ணவேண்டும் என்பதைக் காட்டும் ஐந்தாவது படிக்கட்டு.

என்ன பண்ண வேண்டும்...?

நித்தியம் நமக்கு விதிக்கப்பட்ட கர்மாக்களைப் பண்ணிவிட்டுத்தான் மீதியைப் பண்ணவேண்டும். இப்போது பார்த்தோமானால், சந்தியாவந்தனம் என்பது நித்ய கடமை. நித்யம் சந்தியாவந்தனம் பண்ணாமல், ஒருத்தர் சத்ய நாராயண விரதம் பண்ணுகிறேன் என்கிறார்.

பண்ணுகிறவன், ஆக்ஞையை எவன் கெடுக்கிறானோ, எவன் அதன்படி நடக்கவில்லையோ. அப்படிப்பட்டவன் மம துரோகி! எனக்கு வேண்டாதவன். அவனை நான் மன்னிக்க மாட்டேன். நரகத்திலே தள்ளுவேன்'' என்று பகவானே கடுமையாகப் பேசியிருக்கிறான்.

ஆகையினாலே, நாம் எந்த ஆசிரமத்தில் இருக்கிறோமோ, அந்த ஆசிரமத்திற்கு உண்டான தர்மம் ரொம்ப முக்கியம்.

சன்னியாசிகளுக்கு ஒரு தர்மம் சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு நாளைக்கு, சன்னியாசிகள் எவ்வளவு சாப்பிடலாம் என்றால், எட்டு கவளம் சாப்பிடலாம். கையிலே எடுக்கக் கூடிய அளவு அன்னம் என்பது ஒரு பிடி. அதே மாதிரி எட்டு கவளம்... அவ்வளவுதான் சன்னியாசிகள் சாப்பிடலாம். அதற்கு மேலே சாப்பிடக்

குறையொன்றுமில்லை

சத்யநாராயண விரதம் உயர்ந்ததுதான். ஆனால், இவருக்கு விதிக்கப்பட்ட கடமையாகிற சந்தியாவந்தனத்தை விட்டுவிட்டாரே! அதைப் பண்ணாமல் இதைப் பண்ணினால் பலன் இல்லை என்று சொல்லிவிட்டது சாஸ்திரம். அப்படிப்பட்ட கடமைகளைப் பண்ணிய பிற்பாடு, அதற்கு மேலே சக்தி இருந்தால் மீதி காரியங்களைச் செய்யலாமேயொழிய... செய்ய வேண்டிய காரியங்களை விட்டுவிட்டு, மீதியைப் பண்ணினால் பகவான் அதை ஏற்க மாட்டான்.


வராஹ புராணத்திலே பகவான் பேசுகிறான்: "ஸ்ருதி இருக்கிறதே... வேதம், ஸ்மிருதி இருக்கிறதே தர்ம சாஸ்திரம்... இவை இரண்டும் என்னுடைய ஆக்ஞைகள்."

"ஆக்ஞைச் சேதனம்

கூடாது.

அதற்கு முன் இருக்கிற வானப்பிரஸ்தாசிரமம் இருக்கிறது பாருங்கள், அதிலே இருப்பவர்கள் 32 கவளம் சாப்பிடலாம். ஒரு வேளைக்கு என்று நினைத்து விடக் கூடாது; இரண்டு வேளையும் சேர்த்து 32 கவளம் சாப்பிடலாம். அக்னிஹோத்ரம் எப்படிப் பண்ணுகிறோம்...? அதிகாலையிலே பண்ணுகிறோம். சாயங்காலம் பண்ணுகிறோம். சாப்பிடுவதும் கூட இதே மாதிரி இரண்டு வேளைதான் சாப்பிடலாம் என்கிறது சாஸ்திரம். மத்தியானம் சாப்பிடலாம்; ராத்திரி சாப்பிடலாம். சாப்பிடுகிறபோது சொல்வதற்கென்றே உயர்ந்த மந்திரம் இருக்கிறது. பரிசேஷண மந்திரம். இரண்டு வேளைக்குத்தான் இந்த மந்திரம் இருக்கிறது - காலை/மாலை... மற்ற வேளை

27 முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்



களுக்குப் பரிசேஷண மந்திரம் ஏன் இல்லை என்று கேட்டால், மற்ற வேளைகளில் சாப்பிடக் கூடாது என்பதால் மந்திரமே இல்லை!

ஆகையினாலே, பிராத: காலையிலிருந்து மத்தியானத்துக்குள் இன்னொரு முறை சாப்பிடுவது கூடாது. - இடைப்பாரணை பண்ணக் கூடாது-. அதே மாதிரி மத்தியானத்துக்கும் ராத்திரிக்கும் நடுவில் இன்னொரு முறை சாப்பிடக் கூடாது.

இந்த மாதிரி 'இடைப்பாரணை', 'கடைப்பாரணை' என்பவையெல்லாம் பிற்காலத்தில நமது சௌகரியத்துக்காக வந்தவைதான். பூர்வகாலத்தில் அப்படியெல்லாம் சாப்பிட மாட்டார்கள். சாப்பிடுவதை ஒரு மிகப் பெரிய யக்ஞம் என்றே எண்ணி நன்றாகச் சாப்பிடுவார்கள். ஆனால் இடையிடையே சாப்பிமாட்டார்கள். அந்த மாதிரி சாப்பிடுவதற்கு இப்போது அதிகாரிகள் கிடையாது.

ஒரு மனிதனுடைய ஆனந்தம் எது என்றால், நன்றாகச் சாப்பிடவேண்டும். சாப்பிட்டது ஜெரிக்க வேண்டும் - இது தான் ஆனந்தம். உத்தமமான ஆனந்தம். இப்போது பார்த்தால் உலகத்திலே ஒன்றுமே சாப்பிடக் கூடாது என்கிறார்கள். "நீர் ஆகாரமாகச் சாப்பிடுங்கள்; ராத்திரியில் ஒன்றும் சாப்பிடாதீர்கள்;



வெறுமே படுத்துக் கொண்டால் நல்லது. நெய்யைச் சாப்பிடாதீர்கள்; தயிரைச் சாப்பிடாதீர்கள்'' என்றெல்லாம் சொல்கிறார்கள். பூர்வ காலத்தில் கையைக் குழித்து, ஒரு கை நிறைய நெய் வாங்கிச் சாப்பிடுவார்கள்! அப்படி நெய்யை வாங்கிச் சாப்பிட்டு விட்டு ஒரு அன்வாகம் மந்திரத்தைச் சொன்னால், மொத்தம் ஜெரித்துப் போய்விடும்! அந்த மாதிரி சொல்வதற்கும் இப்போது அதிகாரிகள் கிடையாது. சாப்பிடுவதும் இப்போது போய்விட்டது.

ஆபஸ்தம்பர் அழகாக சூத்திரம் எழுதினார்: பிரும்ம வித்துக்களுக்கு நிறைய அன்னமிடு. அவர்கள் சாப்பிட்டவுடனே 'படுத்துக் கொள்ளுங்கள்' என்று சொல்லி விடாதே. உடனே ஆசிர்வாதத்தை வாங்கிக் கொண்டு விடுங்கள் - பூரண திருப்தியாக அவர்கள் இருக்கிறபோது பூரணமாக ஆசீர்வாதம் பண்ணுவார்கள். இரண்டு லாபம் இதில். இவர்களுக்கும் ஆசீர்வாதம் கிடைக்கிறது. அவர்களுக்கும் உபகாரம் (ஜெரிப்பதற்கான உபகாரம்) பண்ணியதாக இருக்கும். ஆசீர்வாத மந்திரத்தை உச்சரிக்கிற போதே சகலமும் ஜெரித்துப் போய்விடும்!

அந்த மாதிரி, சாப்பிடக் கொடுத்து வைத்திருக்க வேண்டும்.

அந்த மாதிரி நியமமாகச் சாப்பிடுவதென்றால், கிருஹஸ்தாசிரமத்திலே 32 கவளம் சாப்பிடலாம் - பதினாறு - பதினாறு கவளமாக இரண்டு வேளை சாப்பிடலாம்.

பிரும்மசாரி எவ்வளவு வேண்டுமானாலும் சாப்பிடலாம். அவனுக்கு நியமமே கிடையாது. சாப்பிடுகிற நியமத்தை நாம் மாற்றினால், அந்தந்த ஆசிரம தர்மத்தை நாம் கெடுத்தோம் என்று ஆகும்.


ஆகையினாலே தர்மத்திலேயிருந்து விலகாமல், ஆக்ஞா - அனுக்ஞா கைங்கர்யம் என்று இரு வகையும் செய்ய வேண்டும். வேதத்திலே விதிக்கப்பட்டவற்றுக்கு ஆக்ஞா கைங்கர்யம் என்று பெயர். பண்ணியே ஆக வேண்டும் என்பவை இவை. அனுக்ஞா கைங்கர்யம் என்பது அப்படி இல்லை... பண்ணினால் கூடுதல் கைங்கர்யமாக அது அமையும். இப்போது இப்படி ஒரு சந்தர்ப்பம் - ஆஸ்திக சமாஜத்திலே ஸஹஸ்ர நாம உபன்யாஸம் நடக்கிறது. இது அனுக்ஞா கைங்கர்யம். இதை நடத்தாது போனால், ஸஹஸ்ரநாம உபன்யாஸம் ஏன் நடத்தவில்லை என்றோ, 'ஏன் உபன்யாஸத்தைக் கேட்கவில்லை?' என்றோ பகவான் நம்மைக் கேட்கப் போவதில்லை. அவனுடைய அனுக்கிரஹத்தைச் சம்பாதித்துக் கொள்கிறோம் நாம். இதன் மூலமாக, அவனைக் குறித்துப் பேசி தெரிந்து கொள்கிறோம். அதே மாதிரி கோயிலில் உத்ஸவத்தைப் பண்ணி வைக்கிறோம். புஷ்ப மாலை கட்டிச் சமர்ப்பிக்கிறோம். திருவிளக்கு எண்ணெய் கொடுத்து, திரி கொடுக்கிறோம். உள்ளே இங்கே நான் நுழைகிற போதே, 'கிருஹத்தில் நானே திரித்த திரி' என்று சொல்லி 'இதை பகவானுக்கு ஏற்ற வைத்துக் கொள்ளுங்கள்' என்று கொடுத்தார்கள். அந்த மாதிரி



ஜகா!

'அஆ', 'இதயத்திருடன்', 'பிப்ரவரி 14', 'இங்கிலீஷ்காரன்' எனப் பல படங்களில் காமெடியனாக நடித்து வரும் 'லொள்ளு சபா' சந்தானம், இப்போது 'சபா'விலிருந்து 'ஜகா' வாங்கி விட்டார்.

திரியைத் திரித்துச் சமர்ப்பித்தல், எண்ணெய் சமர்ப்பித்தல், மாலை கட்டுதல்... இதெல்லாம் அனுக்ஞா கைங்கர்யம். இதையெல்லாம் பண்ணவில்லையென்றால் 'ஏன் பண்ணவில்லை?' என்று பகவான் நம்மை அடிக்கப் போவதில்லை. பண்ணினால் அவன் அனுக்கிரஹத்துக்குப் பாத்திரர்களாகிறோம்.



நித்ய நைமித்திக தர்மங்கள்

வேகம்!

தனது நண்பர் 'மெட்டி ஒலி' திருமுருகன் போலவே, 'கோலங்கள்' திருச்செல்வமும் விரைவில் படம் ஒன்றை இயக்கவுள்ளார். அதற்கான முயற்சிகளில் முழு வேகத்தில் இறங்கியுள்ளார்.

நைமித்திகமாய் - கிரமமாய் அந்தந்த தினங்களில் வரக்கூடியவை. அஷ்டகா-அன்வஷ்டகை என்று அவற்றுக்குப் பெயர். அஷ்டகா - அன்வஷ்டகையின்போது சிராத்தமே பண்ணுவார்கள் பெரியோர்கள். மாசி மாதத்தில் வரக்கூடிய அஷ்டமி - நவமி இரண்டு நாளும் சிராத்தம் பண்ண வேண்டும். ஒரு வருஷத்தில் 96 சிராத்தம் பண்ண வேண்டும் என்று சாஸ்திரம் சொல்கிறது!

ஒரு சிராத்தம் பண்ணுவதே எவ்வளவு கஷ்டம்! பித்ரு தேவதைகளெல்லாம் நித்யம் கானம் பண்ணுகிறார்களாம்... நம் வம்சத்திலே ஒருவன் உதிக்கமாட்டானா? நல்ல முத்தும் மணியும் பொன்னும் வஸ்திரமும் கொடுத்து, அந்த பித்ரு தினத்தை முடிக்கக் கூடிய ஒருவன் உதிக்க மாட்டானா? அதற்கு சக்தி இல்லை என்றால், வஸ்திரம் கொடுக்க வேண்டாம். அன்னதானம் பண்ணக் கூடிய ஒருவன் உதிக்க மாட்டானா? அதற்கும் சக்தி இல்லை என்றால், ஒரே ஒரு வாழைக்காய் - அரிசி, கொஞ்சம் வெல்லம், பயத்தம் பருப்பு வைத்து - 'இது என்னுடைய பித்ரு தினம்... இந்த பித்ரு தினத்தை உத்தேசித்து, இவர்களுக்குக் கொடுக்கிறேன், இதனாலேயே பித்ரு தேவதைகள் திருப்தி அடையட்டும்' என்று சொல்லக் கூடியவன் ஒருவன் உதிக்கமாட்டானா?

அதற்கும் சக்தி இல்லை என்றால், ஒரு அரைப் படி எள்ளை வாங்கி, 'இன்றைய தினம் என் பித்ரு தினம்; இந்த பித்ரு தேவதைகளை உத்தே சித்து, தில தானம் பண்ணு கிறேன்', என்று கொடுக்க கூடிய ஒருவன் இருக்க மாட்டானா? அதற்கும் சக்தி இல்லை என்றால் ஒரு பிடி எள்ளை எடுத்து, 'இதனாலேயே பித்ரு தேவதைகள் திருப்தி அடையட்டும்' என்று கொடுக்கக் கூடியவன் ஒருவன் இருக்க மாட்டானா?

அதற்கும் சக்தி இல்லை என்றால், கட்டை விரலை ஜலத்தில் தோய்த்து, அதை எள்ளின் மீது ஒற்றி, அதிலே ஒட்டிக் கொள்ளும் 15-12 எள்ளோடு, 'வேறு எந்த விதத்திலும் பித்ரு தேவதைகளை அடையத் தகுதியற்றவன்... இதோ இந்த எள்ளோடு சேர்த்து தீர்த்தத்தை விடுகிறேன்... இதனாலேயே பித்ரு தேவதைகள் திருப்தி அடையட்டும்' என்று சொல்லிவிடக் கூடியவன் ஒருவன் உதிக்க மாட்டானா? அதற்கும் சக்தியில்லையென்றால், ஊரை விட்டு வெளியே போய் ஆங்காங்கே நல்ல புல் முளைத்திருந்தால், அந்தப் புல்லையெல்லாம் வெட்டி எடுத்து, அதை ஒரு பசுமாட்டுக்குத் தந்து, அந்தப் பசுவை வலம் வந்து வந்தனம் பண்ணி, 'இந்தப் பசுவுக்குத் திருப்தி ஏற்பட்டிருக்கிறது... இதே திருப்தி என் பித்ருதேவதைகளுக்கும் ஏற்பட வேண்டும்' என்று பசுவுக்குப் புல் வைக்கக் கூடியவன் ஒருவன் உதிக்க மாட்டானா... அதற்கும் சக்தி இல்லை என்றால்....?

(வளரும்)

"சாமி கும்பிட மாட்டேன்!"

எஃப்.எம். கேட்கும் எல்லோருக்கும் இவரை நிச்சயம் தெரிந்திருக்கும். கடி ஜோக்குகளால் நேயர்களின் காதில் ரத்தம் வரவழைப்பவர். சூரியன் எஃப்.எம்.மின் கலகல ரேடியோ ஜாக்கி. 'தீனா' என்று யாரும் இவரை அழைப்பதில்லை. 'சரியான ப்ளேடு' என்கின்றனர். அந்தளவுக்கு நேயர்களைக் கடியால் கவர்ந்திருப்பவர், தன் உணர்வுகளை நம்மிடம் பகிர்ந்து கொள்கிறார்...



எப்படி இந்தத் துறைக்கு வந்தீர்கள்?

"நான் பி.இ. மெக்கானிக்கல் ஸ்டூடண்ட். ரெண்டு வருஷம் இன்ஜினீயரா வேலை பார்த்தேன். வாழ்க்கைல ஏதாவது சாதிக்கணும், சம்திங் டிஃப்ரண்டா செய்யணும்ங்கற கொள்கை உடைய எனக்கு, அந்த வேலை ரொம்ப சுலபமா போரடிச்சுப் போச்சு. நான் கல்லூரி காலத்துல பொழுது போக்கா செஞ்சுக்கிட்டிருந்த மிமிக்ரியை வச்சுப் பொழைச்சுக்கலாம்னு முடிவெடுத்து, துணிஞ்சு வேலையை விட்டுட்டேன். திடீர்னு சூரியன் எஃப்எம் வாய்ப்பு வரவும், 'இதுதான்டா நாம தேடினது'ன்னு கப்புனு பிடிச்சுக்கிட்டேன். எங்க எம்.டி. கலாநிதி மாறன் சாரே இண்டர்வியூ நடத்தி, நான் தேர்ந்தெடுக்கப்பட்டதுல எனக்கு ரொம்ப சந்தோஷம்."

பி.இ. படித்துவிட்டு ரேடியோவுக்கு வந்ததற்கு வீட்டில் உடன்பாடு உண்டா?

"அவங்க என் பெற்றோர் இல்ல... நண்பர்கள். நான் என்ன செஞ்சாலும் தலைகோதி வழியனுப்பி வைப்பாங்க. என் மேலயும், என் முடிவுகள் மேலயும் அவ்ளோ நம்பிக்கை. நான் கோயிலுக்கே போறதில்ல. அவங்களைத்தான் தெய்வமா மதிக்கிறேன்."

உங்களின் 'குண்டக்க மண்டக்க' நிகழ்ச்சியின் வெற்றிக்கு எதைக் காரணமாக நினைக்கிறீர்கள்?

"ஜோக்குகளைத்தான். அவை தானே நேயர்களுக்கும் எங்களுக்குமிடையில பாலமா இருக்குது. ஆனா அதுலயும் சென்ஸார் உண்டு. ஊனமுற்றவர்களை புண்படுத்தும் படியா, ஆபாசமா, அரவாணிகளை கிண்டல் செய்றா மாதிரியான ஜோக்குகளை அனுமதிக்க மாட்டோம்."

சூரியன் எஃப்.எம்.?

"என் தாய் வீடு. இங்க நாங்க எல்லாரும் ஒரு குடும்பமாத்தான் பழகுறோம். சுதந்திரம் தந்து எங்களை சிறப்பா செயல்பட வச்சிருக்கிற எங்க எம்.டிக்குத்தான் எல்லாப் புகழும்."


- நீலாவள்ளி

படம்: **பப்பி**

11.5.2005 முதல் 17.5.2005 வரை

நடக்குமென்பார்; நடக்கும்!


தஞ்சை பரத்வாஜ்



மேஷம்: இந்த வாரம் தொட்டது எல்லாம் மேன்மையாகும். பண வரவு தாராளமாக இருக்கும். தாய், தந்தை உடல்நலம் நன்றாக இருக்கும். குழந்தைகள் வழியில் சுபப் பேச்சுவார்த்தை நடக்கும். கலைஞர்கள் முன்னேற்றம் பெறுவார்கள். ஆடம்பரப் பொருள் சேரும். உடன் பிறந்தவர்களால் சகாயம் ஏற்படும். உத்தியோகத்தில் இடமாற்றம் ஏற்படும்.



ரிஷபம்: பொன்னான வாரம் இது. வாக்கு வன்மை மேன்மை பெறும். மாணவர்களுக்கு மேன்மைகள் கிட்டும். சுபகாரியம் நடக்கும். அன்னையர்கள் உடல்நலம் சீராகும். குழந்தைகள் மீதான மனக்கவலை போகும். உத்தியோகத்தில் பணி உயர்வு, வருமானப் பெருக்கம் ஏற்படும். தொழில் துறையில் இருந்த சிக்கல் விலகும். பங்குச் சந்தையில் ஈடுபடுவோர்களுக்கு நல்ல முன்னேற்றம் ஏற்படும்.




மிதுனம்: எடுத்த காரியம் கைகூடும். தொழிலாளர்களுக்கு பணி மாற்றம் ஏற்படும். வியாபாரிகளுக்கு புதிய முயற்சிகள் கைகூடும். சுப காரியச் செலவுகள் வரும். உடல்நிலையில் கவனம் தேவை. எதிர்ப்புகள் குறையும். மனதில் இருந்த பயம் போகும். பணவரவு சற்று மந்தமாக இருக்கும். சொத்து, வீடு வாங்கக்கூடிய வாய்ப்பு ஏற்படும். உத்தியோகஸ்தர்களுக்கு வேலை பளு அதிகமாகும்.



கடகம்: ராசிநாதன் 11ல் உச்சம் பெற்று விளங்குவதால் இந்த வாரம் மகிழ்ச்சிகரமான வாரம். தெய்வபலம் கைகூடும். புண்ணிய ஸ்தல யாத்திரைகள் செல்வர். புதிய வேலை முயற்சி வெற்றிபெறும். கூட்டுத் தொழில் செய்பவர்களுக்கு எச்சரிக்கை தேவை. அனாவசியமான செலவுகள் ஏற்படலாம். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. கலைஞர்கள் முன்னேற்றம் காண்பர். திருமணம் ஆகாதவர்களுக்கு நல்லது நடக்கும். பொருளாதார பற்றாக்குறை ஏற்படாது. எதிர்ப்புகள் மறையும்.



சிம்மம்: எதிலும் நிதானம் தேவை. கணவன், மனைவி



பரத்வாஜ் பதில்கள்

• என் மகளின் திருமணம் தள்ளிப் போய்க் கொண்டே இருக்கிறது. தோஷம் ஏதாவது இருக்கிறதா? எப்போது நடக்கும்?

- அ.செல்வராஜ், சங்கரன் கோயில்

உங்கள் மகளுக்கு இதுவரை இருந்த திருமணத் தடை சமீபத்தில் நீங்கிவிட்டது. உறவில் வரன் அமையாது. 2005க்குள் பிறந்த ஊருக்குத் தெற்கில், தெற்கு பார்த்த வீட்டில் வசிக்கும், இரு சகோதரிகளுடன் உள்ள ஒரே மகனாக உள்ள படித்த பண்புள்ள வரன் அமையும்.

• என் மகளுக்கு எல்லாப் பொருத்தங்களும் பார்த்து ஐந்து வருடங்களுக்கு முன் திருமணம் செய்தோம். எதிர்பாராதவிதமாக திருமணம் முறிந்து விட்டது. எங்களுடைய கவலை மறைய அவளுக்கு மறுமணம் செய்யலாமா? வாய்ப்பு இருக்கிறதா?

- சுசீலா ஸ்ரீதர், மும்பை - 400 708

உங்கள் மகளுக்கு தோஷம் ஏதுமில்லை. 2005க்குள், படித்த வெளிநாட்டில் வேலை செய்யும் நல்ல வரன் அமையும் வாய்ப்பு வரும். 'சுத்த' ஜாதகமாகச் சேர்க்கவும். பரிகாரம் எதுவும் தேவையில்லை. உங்கள் கவலை இரும்.

• என் மகளின் நட்சத்திரம் மூலம். அனைத்துப் பரிகாரங்களும் செய்துவிட்டோம். 34 வயதாகிவிட்டது. அவளது திருமணம் எப்போது கைகூடும்?

எஸ்.சரோஜா, கடலூர் - 3

உங்கள் மகள் ஜாதகத்தில் ஸர்ப்பதோஷம் இருப்பதாகத் தெரிகிறது. இதே மாதிரி உள்ள ஜாதகருடன் பார்க்கவும். தவிர, வெளிநாட்டில் வேலை செய்யும் வரன் அமையும் வாய்ப்பு உள்ளது. மேற்கு / வடக்கு திசையில், இரு உடன் பிறந்தவர்கள் உள்ள, கோயில் அருகில் வடக்குப் பார்த்த வீட்டில் இருக்கும் வரன் அமையும்.

• அமாவாசை, ராகுகாலம் போன்ற, தீய காலங்களில் குழந்தைகள் பிறப்பதால் ஏதும் பாதிப்புகள் வருமா?


- முத்து, காரைக்குடி

அமாவாசை திதியில் பிறக்கும் குழந்தைகள் முப்பது வயது வரை வாழ்க்கையில் கஷ்ட நஷ்டங்களை அனுபவித்து, முப்பது வயதுக்குமேல் அறுபது வயதுக்குள் பொருள், புகழ் வாய்ந்தவர்களாக உயர்ந்து விடுவார்கள். அஷ்டமி, நவமி திதியில் பிறக்கும் குழந்தைகள் எதிர்காலத்தில் சிறப்புற்று விளங்குவார்கள். ராகு காலத்தில் பிறக்கும் குழந்தைகள் சிறிய வயதில் துருதுருவென்று இருப்பார்கள். காலபோக்கில் விஷமங்கள் குறைந்து நல்ல புத்திசாலியாக இருப்பார்கள்.

விட்டுக் கொடுத்துப் போவது நல்லது. கைப் பொருள் மீது கவனம் தேவை. கொடுக்கல் வாங்கலில் எச்சரிக்கை தேவை. திருமணம் கைகூடும். வீட்டில் நல்லது நடக்கும். தொழில் செய்பவர்கள் எதிலும் எச்சரிக்கையுடன் செயல்படுவது நல்லது. சிலருக்குப் புதிய வீடு வாங்கும் வாய்ப்பும் ஏற்படலாம். வியாபாரிகளுக்கு நல்ல முன்னேற்றம் கிட்டும். மாணவர்களுக்குப் படிப்பில் மிகுந்த அக்கறை தேவை. ராகு / கேது வழிபாடு செய்யவும்.

கன்னி: சுமாரான வாரம். கணவர் மனைவிக்குள் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது. ஆரோக்கியத்தில் கவனம் தேவை. வேலை செய்யும் இடத்தில் நிர்ப்பந்தத்திற்கு ஆளாகுவார்கள். அவசரப்பட்டு வேலை மாற வேண்டாம். குழந்தைகள் வழியில் நல்ல பலன் கிடைக்கும். யாருக்கும் ஜாமீன் போடக்கூடாது. சில முக்கிய விஷயங்களில் குழப்பமான நிலையே தொடரும். புதிய தொழிலில் முதலீடு செய்தவர்கள் எச்சரிக்கையுடன் செய்யவும். சிலருக்கு மறைமுக எதிர்ப்புகள் இருக்கும். குரு, சனி, ராகு, கேது வழிபாடு செய்யவும்.


துலாம்: எதிலும் நிதானம் தேவை. பணப் புழக்கம் நன்றாக இருக்கும். புதிய முயற்சிகளை தள்ளிப் போடவும். சுப நிகழ்ச்சி கைகூடும்.



ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உத்தியோக இடமாற்றம் ஏற்படும். வெளிநாடு செல்லும் வாய்ப்பு ஏற்படும். கொடுக்கல், வாங்கல் சிக்கல்கள் விலகும். திருமணம் தட்டிச் சென்றவர்களுக்கு திருமணம் கைகூடும். சிலருக்கு வீடு வாங்கும் வாய்ப்பு ஏற்படும். நண்பர், உறவினர்களால் அனுகூலமான பலன் ஏற்படும். கலைஞர்கள், பங்குச் சந்தையில் ஈடுபடுபவர்களுக்கு நல்ல வருமானம் கிட்டும். சாதுக்கள் தரிசனம் கிட்டும். குரு வழிபாடு நன்மை செய்யும்.



விருச்சிகம்: எதிலும் கவனம் தேவை. வண்டி, வாகனத்தில் எச்சரிக்கையுடன் போகவும். உறவினரிடம் கருத்து வேற்றுமை வரும். கூட்டுத் தொழிலில் எச்சரிக்கையுடன் செயல்படுவது நல்லது. தாயாரின் உடல் நிலையில் கவனம் தேவை. வீடு வாங்கும் யோகம் உண்டாகும். திருமணம் ஆகாமல் இருந்தவர்களுக்கு திருமணம் கைகூடும். பங்குச் சந்தையில் ஈடுபடுபவர்கள் எச்சரிக்கையுடன் செயல்படுவது நல்லது.




தனுசு: வேறு வேலைக்கு முயற்சி கூடாது. கணவன் மனைவிக்குள் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது. பொருளாதாரத்தில் சுமாரான வாரம். குழந்தைகள் வழியில் நல்லது நடக்கும். சிலருக்கு வீடு, வேலை மாற்றம் ஏற்படும். ஆரோக்கியத்தில் கவனம் தேவை. குழந்தைகள் வழியில் நன்மை ஏற்படும். சிலருக்குத் தொழில் மந்தமாகவே இருக்கும். குரு, சனி, ராகு / கேது வழிபாடு செய்வது நன்மை தரும்.



மகரம்: பணக் கஷ்டம் இராது. வீடு, வாசல் வாங்கும் யோகம் ஏற்படும். தெய்வ தரிசனம் கிடைக்கும். மாணவமணிகளுக்கு நல்ல காலம். வெளிநாட்டு பயணம் காத்திருக்கிறது. உத்தியோகத்தில் திடீர் முன்னேற்றம், பண உயர்வு, பதவி உயர்வு ஏற்படும். வெளிநாடு செல்லும் வாய்ப்பு ஏற்படும். புதிய தொழில் கைகூடும். கலைஞர்கள் பாராட்டு பெறுவார்கள். திருமணம் ஆகாத ஆண் / பெண் இருபாலாருக்கும் விரைவில் திருமணம் கூடும்.



கும்பம்: இந்த ராசிக்காரர்களுக்கு வாரத்தின் இறுதியில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். கொடுக்கல் வாங்கலில் எச்சரிக்கை தேவை. உத்தியோகத்தில் இடமாறுதல் காத்திருக்கிறது. புதிய வேலை முயற்சி வெற்றி பெறும். கணவன்-மனைவி விட்டுக் கொடுத்தல் நல்லது. திருமணப் பேச்சுவார்த்தை முடிவுக்கு வரும். யாருக்கும் ஜாமீன் போடக் கூடாது. ஆரோக்கியத்தில் கவனம் தேவை. குரு, சனி, ராகு, கேதுவை வழிபடுதல் நல்லது.



மீனம்: நன்மைதரும் வாரம். வீட்டில் நல்ல காரியம் நடக்கும். சிலருக்கு வீடு மாற்றம் ஏற்படும். சிலர் புதிய வீடு வாங்குவார்கள். தொழில் செய்பவர்களுக்கு நல்ல முன்னேற்றம் கிட்டும். பொருளாதார பற்றாக்குறை இருக்காது. குழந்தைகள் வழியில் நல்லது நடக்கும். உடன் பிறந்தவர்களால் நன்மை ஏற்படும்.

இடைத்தேர்தல்

தலையில் வினோதமான காவடி. அதில் பளிச்சிடும் ஜெயலலிதா மற்றும் இரட்டை இலைச் சின்னம். காவடியை தலையில் சுமந்துகொண்டு தோளில் தொங்கும் டேப்ரிகார்டில் 'இரட்டை இலை' பாட்டை ஒலிபரப்பிக் கொண்டு ஒற்றை ஆளாக காஞ்சிபுரம் தொகுதியில் பிரசாரம் செய்து வருகிறார் கூமாய்ப் பட்டி பி.கே.மோகன் என்கிற அ.தி.மு.க. அபிமானி. இவர் மட்டுமல்ல... இவரைப் போன்ற வெளியூர் ஆளுங்கட்சிக்காரர்கள் ஆயிரக்கணக்கில் காஞ்சிபுரத்திலும், கும்மிடிப்பூண்டியிலும் இறக்குமதி செய்யப் பட்டிருக்கிறார்கள். தி.மு.க.வும் அதன் கூட்டணிக் கட்சிகளும் ஆளும்கட்சிக்குக் கொஞ்சமும் சளைத்தவை அல்ல. அதற்கு ஈடுகட்டும் விதமாக ஜனநாயக முற்போக்கு கூட்டணியும் 'பார்த்திடலாம்' என்று 'எதற்கும்' தயாராகி வருகிறார்கள். தொகுதிகளில் சுமோக்களும், ஸ்கார்ப்பியோக்களும் பிதுங்கி வழியும் தொண்டர்களுடன் பறக்கின்றன.

சட்டமன்றப் பொதுத் தேர்தல் வர இன்னமும் ஓராண்டு மட்டும் இருக்கையில் எதற்காக இந்த இடைத் தேர்தல் என்று முயன்றவரை தள்ளிப் போடப் பார்த்தது அ.தி.மு.க. எதிர்க்கட்சியான தி.மு.க.வோ "தேர்தலில் கண்டிப்பாக அராஜகம் தலைவிரித்தாடும். முறைகேடுகளால் ஆளும்கட்சி வெற்றி பெறும். அதனால் அதற்கு அரசியல் செல்வாக்கு கூடும். எனவே தேர்தலை தவிர்க்க முடியுமா?" என்று ஆராய்ந்தது. ஆனால், தேர்தல் கமிஷன் அரசியல் சட்டக் கடமையை நிறைவேற்றுவதில் குறியாக இருக்க, வந்துவிட்டது இரண்டு தொகுதிகளிலும் இடைத்தேர்தல். தயக்கம் காட்டிய இருகட்சிகளும் களத்தில் குதித்து விட்டன. மோதல் துவங்கிவிட்டது.

கும்மிடிப்பூண்டிக்கும், காஞ்சிபுரத்துக்கும் வேட்பாளரை தேர்வு செய்வதில் ஜெயலலிதாவுக்கு எந்தப் பிரச்னையையும் இல்லை. கும்மிடிப்பூண்டியில் போட்டியிடுபவர் மறைந்த எம்.எல்.ஏ.வின் மகன், கே.எஸ். விஜயகுமார். காஞ்சிபுரத்தில் மறைந்த எம்.எல்.ஏ.வின் மனைவி மைதிலி. தி.மு.க.வின் இரண்டு வேட்பாளர்களும் ஸ்டாலின் செலக்ஷன்தான். டி. வெங்கடாசலபதி கும்மிடிப்பூண்டியிலும், பி.எம். குமார் காஞ்சிபுரத்திலும் தி.மு.க. சார்பாக போட்டியிடுகிறார்கள். இந்த இரு கட்சிகளைத் தவிர, இரு தொகுதிகளிலும் திருமாவளவனின் வேட்பாளர்களும் உண்டு.



* மைதிலி



* குமார்



* பிரசாரத்தில் முதல்வர்...

கும்மிடிப்பூண்டி தி.மு.க. வேட்பாளராக வெங்கடாசலபதி தேர்ந்தெடுக்கப் பட்டதில் உள்ளூர் பழைய எம்.எல்.ஏ. வேணுவுக்கு வருத்தம் உண்டு. அவரும், அவரது மகன் - ஒன்றியச் செயலாளர் செந்திலும் கொஞ்சம் சுணங்கிப் போய் விட்டார்கள் என்பது முதலில் வந்த தகவல்.

"போட்டியிடுவதற்கு பலர் மனுத் தாக்கல் செய்வார்கள். ஆனால் வேட்

பாளரை அறிவித்து விட்டால், அவரது வெற்றிக்காக நாங்கள் உழைப்போமே தவிர, வேறெந்த 'வேலையிலும்' ஈடுபட மாட்டோம். எங்களுக்கு வெற்றி வாய்ப்பு பிரகாசமாக இருக்கிறது.



* பி.கே. மோகன்

– இறுதி கட்ட நிலவரம்

ஆளும்கட்சி, தேர்தல் நாளன்று கட்டவிழ்த்துவிட இருக்கும் எந்த அராஜகத்தையும் துணிவுடன் சந்திப்போம்'' என்கிறார் கும்மிடிப்பூண்டியில் நாம் சந்தித்த முன்னாள் தி.மு.க. அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம்.

"தேர்தல் பற்றிய அறிவிப்பு வந்தவுடனேயே அமைச்சர்கள், அதிகாரிகளின் தொடர்பை விட்டுவிடுகிறார்கள். அவர்களும் போலீஸும் தேர்தல் கமிஷன் கண்காணிப்பில் சென்று விடுவார்கள். அப்படியிருக்க நாங்கள் எப்படி எதேச்சதிகாரம் செய்ய முடியும்?'' என்று திருப்பிக் கேட்கிறார் கவரப்பேட்டையில் தேர்தல் பணியாற்றும், அ.தி.மு.க. எம்.எல்.ஏ. ஆஸ்டின்.



* குழந்தைகளையும் விடாத தேர்தல்!



* பொன்முடி - சுப்புலட்சுமி ஜெகதீசன்


கலங்குது காஞ்சிபுரம்... குலுங்குது கும்மிடிப்பூண்டி!

இரண்டு அணியினரும், இரு தொகுதிகளிலும் மிகக் கடுமையான தேர்தல் பணியில் இறங்கியிருக்கிறார்கள். காஞ்சிபுரம் தேரடியில் சென்னை அ.தி.மு.க. பிரமுகர்

சைதை துரைசாமியை நாம் சந்தித்த போது, லேசரில் டைப் செய்யப்பட்டிருந்த கற்றைக் காகிதங்களைப் படித்துக் கொண்டிருந்தார். வாக்காளர் பட்டியலில் ஒவ்வொரு பாகத்திலும் உள்ள முகவரிகளுக்குச் சென்று விடுபட்டுப்போனவர்கள் யார், வீடு மாற்றிப் போனவர்கள் யார், இறந்து போனவர்கள் யார் என்று பக்காவாகக் கணக்கெடுத்து வைத்திருக்கிறார்கள் அ.தி.மு.க.வினர். இதைத் தவிர உள்ளூர் முக்கிய பிரமுகர்கள், ரசிகர் மன்ற நிர்வாகிகள் என்று ஆட்களை அடையாளம் கண்டு, தனியாகவும்



• வெங்கடாசலபதி



• விஜயகுமார்

சந்தித்து 'ஆதரவு' கேட்கிறது ஆளும் கட்சி. "தி.மு.க. எப்படி முயன்றாலும், எவ்வளவு முயன்றாலும் இந்த முறை கண்டிப்பாக கள்ள வோட்டுப் போட முடியாது" என்றார் சைதை துரைசாமி.

தி.மு.க. சார்பில், தேர்தல் பணியில் தேர்ந்த அனுபவம் பெற்றிருக்கும் சுப்புலட்சுமி ஜெகதீசன் மற்றும் பொன்முடி போன்றோரை காஞ்சியில் களப்பணி ஆற்ற இறங்கியுள்ளனர். பொன்முடி மிக புத்திசாலித்தனமாக தனது மாவட்டத்தில் உள்ள கூட்டணிக் கட்சியினரையும் தான் பணியாற்றும் பகுதியிலேயே தேர்தல் பணியில் ஈடுபட வைத்திருக்கிறார். ஆளும்கட்சியின் துஷ்பிரயோகங்களை ஸ்கேன் செய்து தினசரி தேர்தல் பார்வையாளரிடம் பட்டியலிடுகிறார் பொன்முடி.

"இந்தத் தேர்தலில் எதிர்க்கட்சிகள் தாக்கிப் பேச எந்தப் பிரச்னையும் கிடையாது. பாராளுமன்றத் தேர்தலுக்குப் பிறகு உணர்வு பூர்வமான சில விஷயங்கள் குறித்த அரசு உத்தரவுகளையும் அம்மா திரும்பப் பெற்றுவிட்டார். இதுதவிர தேர்தலுக்குத் தேர்தல் மக்கள் மனநிலை மாறிக் கொண்டேயிருக்கிறது. சங்கராச்சாரியார் கைதுகூட எங்க அம்மாவுக்கு ப்ளஸ் பாயிண்ட்தான். நான் சாதாரணத் தொண்டனாகத்தான் இங்கு செயல்பட்டுக் கொண்டிருக்கிறேன்" என்று சொன்னார் போக்குவரத்துத் துறை அமைச்சர் நத்தம் விஸ்வநாதன். தி.மு.க. அணியினர் ஜெ.வைப் பற்றிப் பேசும்போது, சட்டசபை நிகழ்ச்சிகளைச் சொல்லி மட்டுமே விமர்சிக்க முடிகிறது. அதேபோல ஜெ.வுக்கும் தி.மு.க. அணியை விமர்சிக்க வலுவான வாதம் இல்லை. கூட்டத்துக்குக் கூட்டம் கிளிப்பிள்ளை போல் பெட்ரோல், டீசல் விலை உயர்வைப் பற்றிச் சொல்லி மத்திய அரசைக் குற்றம் சாட்டுகிறார். "ஐந்து வருடத்தில் செய்வதை ஒரே வருடத்தில் செய்வேன் என்று இரு தொகுதிகளிலும் ஜெ. சொல்கிறார். கடந்த நான்கு வருடங்களாக இந்தத் தொகுதிகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் எதுவும் செய்யவில்லையா?" என்று கேட்கிறது தி.மு.க. அணி.

இரு தொகுதிகளிலும் கட்சிகளின் பிரசார போக்கை மக்கள் தீவிரமாக கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். "சங்கர மட விவகாரம் எந்தவித ரீ - ஆக்ஷனையும், தேர்தலில் ஏற்படுத்தாது" என்று




• வீரபாண்டி ஆறுமுகம்



* வோட்டு கேட்கும் ஏ.கே. மூர்த்தி...

உறுதிபடச் சொல்கிறார் மடத்தின் அருகில் நாம் சந்தித்த ஆர்.எஸ்.எஸ். பிரமுகர். சங்கராச்சாரியாரை கைது செய்தாலும் ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது கலைஞரைவிட ஜெ.வைத்தான் இந்துக்களின் நண்பராக கணிக்கிறதாம் ஆர்.எஸ்.எஸ். திருமாவளவன் தனியாக நின்றாலும், புரட்சி பாரதம் தி.மு.க. அணியில் இருப்பது அந்த அணிக்கு ஆறுதல். ஆனால் புரட்சி பாரதம், விடுதலைச் சிறுத்தை மற்றும் பா.ம.க. ஆகிய அமைப்புகளிலிருந்து கொண்டு தீவிரத் தேர்தல் பணியில் ஈடுபடும் தொண்டர்களைத் தனது செல்வாக்கினால் மடக்கப் பார்க்கிறது எதிரணி. சிறுபான்மையோர் உறுதியாக தி.மு.க. அணி பக்கம்தான் இருக்கிறார்கள். இரு தொகுதிகளிலும் கிராம வாக்குகள் முக்கிய பங்காற்ற இருக்கின்றன. கிராமங்களில் ஒருவருக்கொருவர் மாமன், மச்சான், பங்காளி என்றிருப்பதால் அரசியல் ஆதாயத்துக்காக மோதல்களில் ஈடுபடும் வாய்ப்பு மிகவும் குறைவு என்கிறார்கள். ஒவ்வொரு பூத்திலும் இரு தரப்பிலும் நூற்றுக்கும் மேற்பட்ட வெளியூர் ஆட்கள் முற்றுகையிட இருக்கிறார்கள்.



* நத்தம் விஸ்வநாதன்

முன்பெல்லாம் தேர்தல் முடிவு பற்றிய கணிப்பின்போது, கடந்த பல தேர்தல்களில் போட்டியிடும் கட்சிகள் பெற்ற வோட்டுகள், ஜாதி அமைப்பு, அரசியல் கட்சிகளைப் பற்றிய மக்களின் அப்போதைய மனநிலை ஆகியவற்றை கணக்கிலெடுத்துக் கொள்வார்கள். இப்போது காலம் மாறிவிட்டது. கடந்த சில வருடங்களாக, திராவிடக் கட்சிகள் இடைத்தேர்தலுக்குப் புதிய பரிணாமம் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆள் பலம், அதிகார பலம், அராஜகம், தில்லு முல்லு... இவைகள் யாரிடம் அதிகமாக இருக்கிறதோ அவர்களே வெற்றிக்கொடி நாட்டுகிறார்கள். வழக்கமாக ஆளும்கட்சிக்கு இந்த வகையில் வெயிட் (எடை) அதிகம்தான். ஆளும் கட்சியின் அதிரடிகளை தடுத்துவிட தி.மு.க.வும் முடிந்த மட்டும் முயற்சி செய்கிறது. மத்திய அரசு போலீஸ், தேர்தல் பார்வையாளர்களின் கழுகுக் கண் பார்வை என்று பல ஏற்பாடுகள் நடக்கின்றன. தேர்தல் நாளன்று எந்தவிதப் பிரச்னையுமின்றி வோட்டுப் பதிவை நடத்த வேண்டும் என்பது தி.மு.க.வின் முனைப்பாக இருக்கிறது. இந்தச் சூழலில் இரு தொகுதிகளிலும் வெற்றிக் கம்பத்தைத் தொட தி.மு.க. மிக, மிகக் கடுமையாக போராட வேண்டியிருக்கிறது.

- ப்ரியன்


படங்கள் : ராஜன்

இளமை கல்கி

ஃபேஷன் ரகசியம்!

'ராம்' பட வெற்றியால் தலைகால் புரியாத நிலையில் தாவிக் குதித்துக் கொண்டிருக்கிறார் ஜீவா. இப்போது இவரது அண்ணன் ரமேஷ், தம்பி வழியில் தடாலடியாக ஹீரோவாகி விட்டார். 'ஜித்தன்' படத்தில் அறிமுகமாகும் இவருக்கு, கோலிவுட் வைத்திருக்கும் செல்லப் பெயர் 'ஃபேஷன் பூத்'. ஏன், ஃபேஷன் ஸ்டோர் எதுவும் நடத்துகிறாரா? அதுதான் இல்லை. ஹாலிவுட்டிலிருந்து பாலிவுட் வரை அப்டு டேட் அத்தனை ஃபேஷன் விஷயங்களையும் விரல்







நுனியில் வைத்திருக்கிறாராம் இந்த ரமேஷ். இது நிஜம்தானா? சர்ச் வாரண்ட் இல்லாமலேயே அவரது வீட்டிற்கு விசிட் அடித்து, 'உங்கள் அறையைச் சோதனையிட வேண்டும்' என்றோம்... "ஓ ஷ்யூர்" என்று அனுமதித்தார்.

டீசல், லெவீஸ் என்று சர்வதேச பிராண்டட் ஜீன்ஸ்கள் ஒரு ஐம்பது, சமீபத்தில் காலமான புழம்பெரும் பாப் பாடகர் எல்விஸ்பிரெஸ்லி முதல் பிஃப்டி பர்செண்ட் பிளாக் ரோமியோ வரை பன்னாட்டு பாப் பாடகர்களின் படம் பொறித்த நூறு டீ-சர்ட்டுகள், ரஃப் அண்ட் டஃப் இளசுகள் அணியும் விதவிதமான ஜங்க் ஜுவல்லரிகள், ஒரு அலமாரி முழுக்க அரை டஜன் கௌபாய் தொப்பிகள், பெல்டா இல்லை கவசப்பட்டைகளா என்று சந்தேகிக்கத் தோன்றும் அதிரடி இடுப்பு பெல்டுகள், 'இப்படியும் சன் கிளாஸ் இருக்கிறதா' என்று வாய் பிளக்க வைக்கும் ஃபேன்ஸி கண்ணாடிகள் என்று அறை முழுவதும் குவிந்து கிடக்கிறது.

நிற்க! இத்தனை லேட்டஸ்ட் ஃபேஷன்களையும் இவருக்கு அறிமுகப்படுத்தும் அந்த ஃபேஷன் கடவுள் யாராம்? "கடவுள் என்று யாருமில்லை. பாண்டி பஜார் செல்லா மாலில் இருக்கும் 'ஹூக் ஃபேஷன் ஸ்டோரில்தான் இத்தனையும் வாங்கினேன். இப்போதெல்லாம் ஃபேஷனுக்காக மும்பைக்கு ஓட வேண்டியதில்லை. பாண்டிபஜார் போதும்' என்கிறார் கூலாக.

• ஸ்ரீ

• ரமேஷ்

பாப் பாப்பு!



'வசீகரா...', 'இஞ்சி இடுப்பழகி...' பாடல்களெல்லாம் ஒரு வித்தியாசமான குரலில் ரீமிக்ஸாக உங்கள் காதுகளில் சமீபத்தில் வந்து விழுந்திருக்கும். 'அட யாரது?' என்று உள்ளுக்குள்ளே கேள்விக்குறி ஒன்று எழுந்திருக்கும். அந்த கேள்விக்குறியை நிமிர்த்தும் ஆச்சரியக்குறி, தெலுங்கு பாப் உலகின் மகாராணி ஸ்மிதா! 'கலக்கல்' என்னும் தமிழ் ரீமிக்ஸ் ஆல்பம் மூலம் தமிழ்க் காதுகளிலும் ஸ்மூத்தாக இறங்கியிருக்கிறார்.

'ஹாய் ரப்பா' என முதல் பப்ளி தெலுங்கு ஆல்பம் மூலம் ஆட்டத்தை ஆரம்பித்த ஸ்மிதாவை, தெலுங்கு இசையுலகம் கொண்டாட ஆரம்பித்தது, 'மஸாக்கா மஸாக்கா' என்ற தெலுங்கு ரீமிக்ஸ் ஆல்பம் மூலம்தான். ஓவர் நைட்டில் புகழின் ஹைட்டுக்குச் சென்று விட்டார் ஸ்மிதா.

விஜயவாடா பெண். படித்தது ஃபேஷன் டிசைனிங். ஈ-டி.வியில் எஸ்.பி.பி. நடுவராகக் கலந்துகொண்ட ஓர் இசை நிகழ்ச்சியில் முதலாவதாக வந்ததுதான் ஸ்மிதாவின் இன்னிங்ஸ் தொடக்கம். பிறகு பிக்-அப் ஆகி, பாப் 'பாப்பு'வாகி, பாப்புலராகி, எக்கச்சக்க ஸ்டேஜ் ஷோக்கள் அங்கே, இங்கேயென்று செய்து இசையுலகில் ஸ்டார் ஆகிவிட்டார்!

ஸ்மிதாவுக்கு ஹரிஹரன், ஆஷா போன்ஸ்லே என்றால் உயிராம்! வறுமையைக் கண்டால் வாடிய பயிர் மாதிரி ஆகிவிடும் இவர், வாலிபால் ப்ளேயரும்கூட.

'கலக்கல்' ஆல்பம் இன்றைய மெட்ரோ இளைகளிடையே மெகா மீட்டர் போட்டுக் கொண்டுள்ளது. அதே சமயத்தில் வெளியான தெலுங்கு ரீமிக்ஸ் ஆல்பமான 'க்ளப் மிக்ஸ்'ம் தூள் கிளப்புகிறதாம்.

தற்போது தெலுங்கு, கன்னடத் திரை இசையுலகில் பின்னணிப் பாடகியாக ஜொலிக்கும் ஸ்மிதாவை விரைவில் தமிழ்ப் பாடகியாகவும் எதிர்பார்க்கலாம்.

- ஷிவ்

இளமை கல்கி

"காலேஜுக்குக் கட்டடிப்பேனா!"

பாடகி மதுமிதாவை வேண்டுமானால் பலருக்கும் தெரியாமலிருக்கலாம். ஆனால் '7G ரெயின்போ காலனி'யில் அவர் பாடின 'கனா காணும் காலங்களை' எல்லோருக்கும் பிடித்திருக்கும். "அந்தப் பாட்டு உலகம் முழுக்க ஹிட்டாகியிருக்கு. நான் சமீபத்துல யு.கே. டூர் போனப்பதான் அதோட பாப்புலாரிட்டியை தெரிஞ்சுக்க முடிஞ்சது" என்று சந்தோஷம் பொங்கப் பேசும் மதுமிதா, தற்போது +2 முடித்து, கல்லூரிக்குள் அடியெடுத்து வைக்கப் போகிறார். அவரிடம் ஒரு கேம்பஸ் இண்டர்வியூ.

கல்லூரிக் கனவு உண்டா?

"அப்படியெல்லாம் கிடையாது. பெரும்பாலும் பாடகர்களெல்லாம் தபாலில் படிப்பைத் தொடரவே விரும்புவார்கள். ஆனால், நான் கல்லூரி வாழ்க்கையையும் அனுபவிக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். கம்ப்யூட்டர் சயின்ஸ் படிக்கப் போகிறேன்."

கண்ணீரோடுதான் பள்ளித் தோழிகளைப் பிரிந்தீர்களா?

"கடைசி நாளன்று எல்லா கோர்ஸ்ூம் ஒண்ணா உட்கார்ந்து சாப்பிட்டோம். டீச்சர்ஸ், ஃப்ரெண்ட்ஸோடு ஃபோட்டோ எடுத்துக்கிட்டோம். ஆளாளுக்கு என்னைப் பாடச் சொன்னாங்க. 'மீ யூ... டைபை'ன்னு பிரிஞ்சாலும், இனி அடிக்கடி பள்ளி நினைவுகளில் மூழ்குவதைத் தடுக்க முடியாதுதான். என்ன பண்றது?"

ராகிங் பற்றிய பயமிருக்கா?

"நீங்க கேள்வி கேட்கும்வரைக்கும் கிடையாது. நான் பாடகின்னு தெரியாம பாடச் சொன்னாங்கன்னா, நைஸா பாடிட்டு க்ரேட் எஸ்கேப் ஆயிடுவேன்."

அடிக்கடி இனி மதுமிதாவை தியேட்டர் பக்கம் பார்க்கலாம்தானே?

"நான் ஃப்ரெண்ட்ஸோடு பார்த்த முதல் படமே சச்சின்தான். '7G' படம் உட்பட குடும்பத்தோடு போய்தான் எல்லா படங்களும் பார்த்துள்ளேன். அது இனியும் மாறாது. காலேஜுக்குக் கட் அடிக்க நேர்ந்தாலும் அந்தப் பொன்னான நேரத்தை என் இசைத் துறைக்காக பயன்படுத்துவேனே தவிர, ஊர் சுத்தறது, படம் பார்க்கறதெல்லாம் வேஸ்ட்."

இனி கல்லூரி பாட்டுப் போட்டிகளில் நீங்கதான் ஃபர்ஸ்ட்டா?

"நான் +2 படிக்கும்போதே ஐ.ஐ.டியில் நடந்த 'சாரங்க்' விழாவில் என்னை ஜட்ஜா கூப்பிட்டாங்க. அதனால் காலேஜ்ல நடக்குற பாட்டுப் போட்டிகளில் நான் கலந்துக்கப் போறதில்லை."

- செந்தில்



• மதுமிதா

எக்ஸ்ரே பெண்ணே நீ யாரோ?


வசீகரமான குட்டிக் குட்டி காட்பரீஸ் கண்கள்தான் 17 வயது ரஷ்யப் பெண்ணான நடாஷா டெம்கினாவின் உலகப் புகழுக்குக் காரணம். அப்படியென்ன விசேஷம் நடாஷாவின் கண்களில்? யாரையாவது கொண்டுபோய் இவர் முன்பு நிறுத்தி விட்டால் போதும், தன் எக்ஸ்ரே கண்களால் ஒரு முறை ஏற இறங்கப் பார்த்துவிட்டு, 'இவருக்கு இந்தந்த பகுதிகளில் இந்தந்த ப்ராப்ளம்' என்று ஒரு லிஸ்ட் போட்டுக் கையோடு தந்துவிடுகிறார்.

இது போதாதென்று "ஹே ப்ரதர், உங்க விலா எலும்புல இந்த மாதிரி ஷேப்ல ஒரு பிராக்சர் இருக்கு. பீ கேர்ஃபுல்" என்று வரைந்து வேறு காட்டுகிறார். அப்படியே ஓடிச்சென்று எக்ஸ்ரே எடுத்துப் பார்த்த ரஷ்ய மருத்துவர்கள், "அட ஆமா, இவங்க சொல்றது செண்ட் பர்செண்ட் கரெக்ட்" என்று கைதட்டி விசிலடிக்கிறார்கள்.

நடாஷாவின் திறமையை பிரிட்டிஷ் ஏற்றுக்கொண்டு விட்டது. ஜப்பானில் மச்சி எனும் உலகப் புகழ்ப் பெற்ற புரொபஸர் (அட உண்மையாகவே மச்சிதாங்க!), இவரை டோக்கியோவிற்கு வரவழைத்து மாய்ந்து மாய்ந்து ஆராய்ச்சி செய்து வியந்து கொண்டிருக்கிறார். அமெரிக்கா மட்டும் 'அஸ்க்கு புஸ்க்கு... இது டூபான்ஸ் மேட்டர்' என்று அவரது எக்ஸ்ரே கண்களை சந்தேகக் கண்ணோடு பார்த்துக் கொண்டிருக்கிறது.

நடாஷாவைக் கேட்டால், "நான் என்னப்பா செய்யறது, எனக்கு மட்டும் எப்படியோ எல்லாமே தெரிஞ்சுடுது" என்று தன் இரு எக்ஸ்ரே மிஷின்களையும் சிமிட்டிச் சிமிட்டிச் சிரிக்கிறார்.

இதற்கிடையில், மச்சி ஒரு ஜூ குட்டியை நடாஷாவிடம் கொண்டு சென்று "இந்தக் குட்டிக்கு என்ன பிராப்ளம், சொல்லு பார்க்கலாம்" என்று கேட்டிருக்கிறார். நாக்கை நீட்டி 'லொள் லொள்' என்று குதித்த அந்த ஜூவை ஒரு முறை உற்றுப் பார்த்த நடாஷா, "ம்ம்ம்... இந்தப் பப்பியோட ரைட் லெக்ல ஒரு குட்டி எலும்பு முறிஞ்சி போயிருக்கு. ஆம் ஐ ரைட்?" என்று கேட்டவுடன், துள்ளிக் குதித்திருக்கிறார் மச்சி.



• மீடியாவின் பிடியில் நடாஷா...

சரி சரி, இதற்கே வாயைப் பிளந்தால் எப்படி? அப்படியே ஒரு நிமிடம் மூச்சை இழுத்துப் பிடித்துக் கொள்ளுங்கள். லேட்டஸ்டாக நடாஷா என்ன சொல்லியிருக்கிறார் தெரியுமா? "ஆக்கவலி கொஞ்ச நாளா என் ஜஸ் பவர் லைட்டா அதிகமாயிடுச்சு. இப்பவெல்லாம் போட்டோவைப் பார்த்தே ஒருத்தருக்கு என்ன வியாதின்னு கண்டுபிடிச்சிடறேன். வேணும்னா செக் பண்ணிப் பாக்கறீங்களா?"

- மருதன்

சத்தியமூர்த்தி பவனுக்கு நாம் போன நேரம், டாக் ஆஃப் தி பவன்: 'இளங்கோவன் இடைத் தேர்தல் பிரசாரத்துக்குச் செல்வாரா, மாட்டாரா' என்பதுதான். கட்டடத்தின் வலதுபுற நிழலில் பெட் கட்டாத குறையாக விவாதித்துக் கொண்டிருந்தது ஒரு கோஷ்டி.

"போனமுறை கலைஞர் சொல்லிக் காட்டிட்டதால இந்த முறை பார்லிமெண்ட், அது இதுன்னு சொல்லி ஈ.வி.கே.எஸ். ஒதுங்கிடுவார்" என்று ஒருவர் கூற, "நீ புரிஞ்சுக்கிட்டது அவ்ளோதான். தான் ஒரு நாகரிகமிக்க அரசியல்வாதின்னு நிரூபிக்கவாவது இந்தமுறை பிரசாரம் பண்ணுவார் பாரு" என்றார் தீவிர ஈ.வி.கே.எஸ். அபிமானி.



• ஈ.வி.கே.எஸ். இளங்கோவன்





தொடர்ந்து கொஞ்ச நேரம் இப்படியே பேசிக் கொண்டிருந்தவர்கள், சற்றைக்கெல்லாம் டாபிக்கை மாற்றினர்.

'ஜெயந்தி நடராஜன் தலைமையில் காங்கிரசை வலுப்படுத்துவோம்' என்று பவனில் எழுதப்பட்டிருந்த பிரம்மாண்ட பேனர் பற்றி பேச்சு திரும்பியது.

"ஏற்கெனவே இதே மாதிரி ஒரு பில்ட்-அப் கொடுத்ததுக்கே டெல்லி கண்டுக்கல... இன்னும் அடங்க மாட்டேங்கறாங்களே" என்றார் பேனரை வாய்விட்டுப் படித்த மூத்த கதர்ச் சட்டைக்காரர் ஒருவர்.

நேரமாக ஆக கேலியும் கிண்டலும் அதிகமாகிக் கொண்டேயிருந்தது. பெரும்பாலானவர்களால் மெல்லப்பட்டவர்கள் இளைஞர் காங்கிரஸ் தலைவர் விஷ்ணு பிரசாத்தும், வசந்தகுமாரும்தான். 'சின்ன வாழப்பாடியார்' என்று விஷ்ணுபிரசாத்துக்கு அடைமொழி தரப்பட்டது குறித்து பலரும் கேலி செய்து பேசினர். "நினைத்த நேரத்துல கூட்டம் கூட்ட முடிஞ்சு, அறிக்கை மூலமே அதிரடி அரசியல் நடத்திய வாழப்பாடியாருக்கு முன்னால, இவங்க எல்லாம் தூசு. வளர்ற புள்ளைக்கு இதெல்லாம் வேண்டாத வேலை" என்றார் பொறுப்பான ஒரு கட்சிக்காரர்.

வசந்தகுமார், இளங்கோவனை



• சத்தியமூர்த்தி பவன்



வருவாரா இளங்கோவன்?

வைத்து புத்தகம் வெளியிட்டது குறித்து பேச்சு எழுந்த போது,

"ஏற்கெனவே ஜி.கே.வாசனோட ஆள் கோபண்ணா ரெண்டு புத்தகங்களை வெளி யிட்டாரு. அதுக்கு கவுன்ட்டர் கொடுக் கறதுக்காகவே வசந்தகுமார் இந்த ஏற்பாட்டை பண்ணியிருக்காரு... இதுல கூட கோஷ்டிய கொண்டு வர்றதை நினைச்சா, ஒரு பக்கம் சிரிப்பாவும் இருக்கு. இன்னொரு பக்கம் இவங்க எழுத்தை வைச்சு போட்டி போடறதும் ஒரு வகையில நல்லதுதான்" என்றார் ஒரு தொண்டர்.

"சுத்திப்பாராவுல பாரதியார் கெட்-அப்புல சோனியாவுக்கு பேனர் வைச்சது, சுத்திப்பாரா ஜனார்த்தனத்துக்கு செல்வாக்கைத் தூக்கி விட்டுடுச்சு. அந்தக் குஷியிலதான் இப்போ 'இந்திரா' கெட்டப்புல சோனியாவுக்கு பேனர் வைச்சு எல்லாரையும் அசத்துறாரு. மனுஷன் இந்த தடவை எம்.எல்.ஏ. ஆகியே தீருவார் போல... அதுக்காகத் தான் ஒரு முடிவோட களமிறங்கிட்டாருன்னு நினைக்கிறேன்" என்றார் சைதைப் பகுதி கட்சிக்காரர் ஒருவர்.

சுவாரஸ்யமாக பேசிக் கொண்டி ருந்தவர்கள், அப்போதுதான் நம்மைக் கவனித்தவர்கள் போல... 'யாருய்யா நீ...? கட்சிக்காரனா? உன்னை இதுக்கு முந்தி இங்க பார்த்தா மாதிரி தெரியலையே..." என்று வினவ, "நாங்களும் உங்க கோஷ்டிதாண்ணே..." என்றோம்.

"எந்த கோஷ்டி... இளங்கோவனா, வாசனா, அல்போன்ஸா, ஜெயந்தியா, நாச்சியப்பனா..." என்று அவர்கள் கேட்டுக்கொண்டே போக, நமக்கு மயக்கம் வராத குறை. ஓடியே வந்து விட்டோம்.

- ஒற்றன்

இலக்கியம்

ஞானபீட விருது அறிவிக்கப்பட்ட தினத்திலிருந்தே பாராட்டுகளுக்கு எந்த விதத்திலும் குறையாமல் சர்ச்சைகளும் ஜெயகாந்தனைச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டிக்கின்றன. தன் மீதான விமர்சன அம்புகளை சேகரித்து வந்தவர், அண்மையில் ராணி சீதை மன்றத்தில் தமக்கு அளிக்கப்பட்ட பாராட்டு விழாவின்பொழுது எல்லாவற்றுக்கும் சேர்த்து ஒட்டுமொத்தமாய் மனம் திறந்தார்.



ஞானபீட விருதை துச்சமாகக் கருதிய நீங்கள், இப்பொழுது அந்த விருதை ஏற்றுக் கொண்டிருக்கிறீர்களே, இது முரணல்லவா?

"அப்பொழுது எனக்கு அந்த விருது கொடுக்கப்படவில்லை. இப்பொழுதுதான் கொடுத்துவிட்டார்களே! ஆனால், விருது அறிவிக்கப்பட்டபொழுதே எனக்குத் தெரியும் கூடவே வம்புகளும் வந்துவிடும் என்று. அப்படித்தான் ஆகிவிட்டது. என்னைக் கேட்டால் இந்த விருது இன்னமும் சற்று காலதாமதமாக எனக்குக் கிடைத்திருக்கலாம் என்று சொல்வேன். எப்படியும் அது எனக்கு உரியதுதான். மரணம் கூடத்தான் எனக்கு உரியது. அதனாலென்ன சிறிது காலம் கழித்துத்தான் வரட்டுமே!"

நீங்கள் தமிழுக்கு எதிரியா?

"பிற மொழிகளை ஆதரித்தால் தமிழுக்கு நான் எதிரியாகிவிடுவேனா? தமிழ் மொழிக்கு யாரும், எந்த மொழியும் எதிரியாக இருக்க முடியாது. தமிழ் அத்தகைய ஒரு மொழி அல்ல. பிற மொழியை நேசிப்பதன் மூலம் தமிழ் பிறரால் நேசிக்கப்படும். நான் சமஸ்கிருதத்தை நேசிப்பேன், வளர்ப்பேன். இந்த விருது எனக்கு அதைத்தான் சொல்லியிருக்கிறது. எனக்குத் தமிழ் தெரியுமா என்று சிலர் கேட்கிறார்கள். எனக்குத் தமிழ் தெரியுமா, தெரியாதா என்று எனக்குத் தெரியாது. ஆனால் தமிழுக்கு என்னைக் கட்டாயம் தெரியும்."

உங்களுக்கும் கலைஞருக்கும் என்ன தகராறு?

"என் வீட்டிற்கு ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. 'நான் அறிவுலாயத்தில் இருந்து பேசறேன்' என்று ஒரு குரல். 'அறிவாலயம்' என்று கூட அந்த நபருக்குச் சொல்லத் தெரியவில்லை: 'அழகுதான்' என்றேன். பிறகு கலைஞர் என்று சொன்னாரா அல்லது தலைவர் என்று சொன்னாரா என்று தெரியவில்லை. 'அவர்

"கலைஞரும் புரட்சித்தலைவியும் கம்யூனிஸ்ட் கட்சியில் சேரலாம்!"

– ஜெயகாந்தன்



உங்க அட்ரஸை கேட்டு வாங்கி வரச் சொன்னார்' என்றது அந்தக் குரல். நான் சொன்னேன். 'எனக்குக் கூட அவரைப் பார்க்க வேண்டிய வேலை இருக்கு. இப்ப அவரு எந்த வீட்டுல இருப்பாரு?' இதுதான் நான் அந்த 'போனிடம்' பேசியது.

அவ்விடத்தில் என்ன நடந்திருக்கும் என்று நான் சொல்கிறேன். கலைஞரிடம் போய் அந்த நபர் சொல்லியிருப்பார். 'நான் ஜெயகாந்தன் வீட்டுக்கு போன் போட்டு அவரோட அட்ரஸை கேட்டேன். ஆனா அவரு ஏதேதோ பேசிட்டாரு' அல்லது இப்படிச் சொல்லியிருப்பார்... 'ஜெயகாந்தன் ரொம்ப மண்டை கர்வம் பிடிச்ச ஆளு அட்ரஸ் கேட்டதுக்குப் போய் என்னை தாறுமாறா திட்டிட்டார்.' 'அவரிடமா நான் அட்ரஸ் கேட்கச் சொன்னேன்' என்று கலைஞர் அந்த நபரை கடிந்து கொண்டிருப்பார். இதுதான் நடந்திருக்கும். கலைஞரை பார்க்க வேண்டுமானால் அவர் எந்த வீட்டில் இருக்கிறார் என்று கேட்டு, நான் போய்ப் பார்ப்பேன். எனக்கு யாரும் எதிரி கிடையாது. எங்களிடையே எந்தத் தகராறும் கிடையாது. என்னைப் பற்றி அவருக்குத் தெரியும். அவரைப் பற்றி எனக்குத் தெரியும். இடையில் இருப்பவர்களைப் பற்றி எனக்குக் கவலையில்லை."

கம்யூனிச சித்தாந்தங்களிலிருந்து நீங்கள் விலகி வந்துவிட்டீர்களா?

"தம்மை அழித்துக்கொண்டு பிறருக்கு உதவுவது கம்யூனிசம். எனக்கு கம்யூனிஸ்டுகளை மிகவும் பிடிக்கும். கொள்கைக்காக அவர்கள் தங்களையே பலி கொடுப்பார்கள். ஆனால், அது என்னால் முடியாது. நான் விலகி வந்துவிட்டேன். என்னை அழித்துக் கொண்டு என்னால் எதையும் ஆக்க முடியாது. அப்படி ஆக்குவதற்கு ஒன்றும் கிடையாது. நான் கம்யூனிஸ்டுகளுக்கு சொல்லிக் கொள்வது இதைத்தான். மக்களுடன் கலந்திருங்கள். மாற்றுக் கருத்துகளுக்கு மதிப்பளியுங்கள். இந்திய மக்களின் சாத, மத நம்பிக்கைகளை புரிந்து கொள்ளாமல் இந்தியாவை ஒருவரால் புரிந்து கொள்ள முடியாது.' எனக்கும் கம்யூனிஸ்ட் கட்சி தோழர்களுக்கும் இந்த கட்டத்தில் கருத்து வேறுபாடு தோன்றுகிறது. கருத்து வேறுபாடுகள் தோன்றுவது இயல்புதானே? ஒரு வேளை கருத்து வேறுபாடுகளே கிடையாது என்றாகிவிட்டால் பிறகு புரட்சித்தலைவியும் கலைஞரும் கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்து பணியாற்றலாமே!"

தொகுப்பு : **கங்கா**

படம் : **ஷிவ்**


செல்லம்!
பல வீடுகளில்
செல்லமாகக்
கொஞ்சப்படும்
பொன்னியின்
செல்வன் - கல்கி
தாய்க்குல
சிவகாமிகளின்
சபதம் - கல்கி
வாலிப பார்த்திபர்களின்
கனவு - கல்கி
சுனாமி அபாயமில்லாத
அலை ஓசை - கல்கி!
- கிரேஸி மோகன்
கல்கி

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / PMG (CCR) 572 / 03 - 05 *
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 358 / 03 - 05 * Registered as a Newspaper in Srilanka

